வெளியீடு 23-10-98

Issued 23-10-98

H11/99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை மார்ச் 20 1998 – தொகுதி 39– எண் 2

Friday the 20th March, 1998 – Volume 39 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

D.
V211, 31 N98.
N98.31.2
216448

[Price Rs. 3.00

411/99

**20-03-1998**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


*1.* இரங்கல் தீர்மானம்—

கேரள முன்னாள் முதல்வர் திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் மறைவு — 433-437

*2.* வினாக்கள்-விடைகள்—

உடுகுறியிட்ட வினாக்கள் — 437-487

*3.* விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—

19-3-1998-ஆம் தேதி நடைபெறும் என் அச்சுறுத்தப்பட்ட வெடிகுண்டுச் சம்பவங்கள் நிகழாமல் விழிப்புடன் செயலாற்றிய காவல் துறையினரை பாராட்டி ரொக்கப் பரிசு அளித்தல் — 488-489

*4.* அரசினர் சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 — 489-490

*5.* ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி — 490-574

டாக்டர் தே. குமாரதாஸ் — 490-507, 573

திரு. ச.சு. வெங்கடேசன் — 514-516

திரு. பி.என். வல்லரசு — 516-520

திரு. குத்தாலம் பி. கல்யாணம் — 520-525

D
V211,31'N98 N98'39.2


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 5. | ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி | |
| | திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத் | 526-530 |
| | திரு. ஜி.கே. மணி | 532-536 |
| | திரு. டி. மணி | 536-539, 542-544, 545-547 |
| | திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 548-561 |
| | திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் | 562-564, 566-574 |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 575-577 |


48448

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 6, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998, மார்ச் 20, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு."*

நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.

### 1. இரங்கல் தீர்மானம்

#### கேரள முன்னாள் முதல்வர் திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவரான திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் நேற்று *19-3-1998* அன்று இயற்கை எய்தியது குறித்து அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். திரு. ஈ.எம்.எஸ். அவர்கள் இதே அவையில் *1939*-ஆம் ஆண்டு பொன்னானி பொது ஊரகத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அவர் மறைவு குறித்து இந்த அவையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இரங்கல் உரை நிகழ்த்துமாறு அழைக்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈ.எம்.எஸ். என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற, அந்த மூன்று எழுத்துக்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய, தலைசிறந்த மார்க்சியவாதியும், புரட்சியாளரும், இந்தியாவினுடைய மூத்த அரசியல் தலைவர்களுள் ஒருவருமான

திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுடைய மறைவுச் செய்தி நேற்றையதினம் மதுரையிலே இருந்த எனக்குக் கிடைத்தபோது அதிர்ச்சியுற்றேன்.

திரு. ஈ.எம்.எஸ். அவர்கள், தாங்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, 1939-ஆம் ஆண்டு மாகாண சட்டமன்றத்திலே இடம் பெற்றிருந்தார் என்றாலும்கூட, அதற்குப் பிறகு அவருடைய பல்வேறு வகைப்பட்ட வளர்ச்சியின் காரணமாக இந்தியத் தொழிலாளர்கள் இயக்கத்தினுடைய இதயங்களில் எல்லாம் இடம் பெற்று விளங்கியவர் ஆவார்கள். இந்தியாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, ஜனநாயக ரீதியிலே முதன்முதலாக ஒரு அரசை நிறுவிய பெருமை அவருக்கு உண்டு. இந்தியாவிலே என்று மாத்திரம் சொல்ல முடியாது, உலகத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஜனநாயக ரீதியிலே தேர்தல்களிலே போட்டியிட்டு ஒரு அரசை நிறுவிய சிறந்த பெருமை திரு. ஈ.எம்.எஸ். அவர்களுக்கு உண்டு.

அதேபோல, அரசியல் சட்டத்தினுடைய 356-வது பிரிவின் தாக்குதலுக்கு ஆளான பெருமையும் அவருக்கு உண்டு. முதன்முதலாக அந்தத் தாக்குதலுக்கு ஆளானவர் அவர். அதிலே சோர்ந்துவிடாமல், அடுத்து பல தேர்தல்களில் ஈடுபட்டு, ஒரு ஐக்கிய முன்னணியை கேரள மாநில அளவிலே உருவாக்கி 1969-ஆம் ஆண்டு வரையிலே கேரள முதலமைச்சராகத் திகழ்ந்தார்கள். அந்தக் கட்டத்திலேதான், ஏற்கெனவே தமிழக அரசோடு ஒத்துழைத்து உருவாக்கப்பட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலேயிருந்த சில பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு நான் கேரளாவுக்குச் சென்று, திருவனந்தபுரத்தில் அவரோடு ஒரு நாள் முழுவதும் விவாதிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்தப் பிரச்சினையில், அதிகாரிகளோடு உட்கார்ந்து கலந்து பேசியபோது, எந்த முடிவையும் எங்களால் எடுக்க முடியவில்லை. நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்த திரு. ஈ.எம்.எஸ். அவர்கள் திடீரென்று என்னைப் பார்த்து, 'கொஞ்சநேரம் தனியாகப்' பேசினால் பிரச்சினை முடிந்துவிடும். இரண்டு அரசுகளுடைய அதிகாரிகளையும் தயவு செய்து வெளியே இருக்கச் சொல்லிவிட்டு நாம் பேசுவோமா' என்றார். 'சரி' என்று ஒத்துக்கொண்டேன். இருவரும் பேசினோம் 'பிரச்சினை' பரம்பிக்குளம்-ஆளியாறு பிரச்சினை, இரண்டு நிமிடங்களில் சுமுகமாக முடிவுற்றது. அதுமாத்திரம் அல்லாமல்-அவருக்கும் எனக்கும், மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கின்ற முறையிலே மாத்திரம் அல்லாமல், எதிர்க்கட்சிகளுடைய தலைவர்கள் என்கின்ற முறையிலேகூட நீண்டகாலப் பழக்கம் உண்டு.



முற்பகல் 9-35

குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், 1975-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்ட அந்தக் காலகட்டத்தில் ஈ.எம்.எஸ். அவர்களும், நானும் சென்னையிலே ஒரு கூட்டத்திலே கலந்து கொண்டோம். அப்பொழுது அவர்கள் சொன்னார்கள். 'நான் ஏன் இங்கே வந்து கருணாநிதியுடன் கூட்டத்திலே கலந்து கொள்கிறேன் என்றால், இந்தியாவிலேயே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக்கூடிய ஒரே ஒரு இடம், இப்பொழுது தமிழ்நாடாகத்தான் இருக்கிறது; எனவேதான் அந்தச் சுதந்திரக் காற்றை சுவாசிக்க தமிழகத்திற்கு வந்து இருக்கிறேன்' என்று அன்றைக்குக் குறிப்பிட்டு தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தினார்கள்.

இறுதிக்காலம் வரையிலே தான் சார்ந்த இயக்கத்திற்கு, தான் சிறப்போடு திகழ்ந்த இயக்கத்திற்கு, தான் உழைத்த இயக்கத்திற்கு, தான் வளர்த்த இயக்கத்திற்கு அவர் பணியாற்றினார் என்பதற்கு அடையாளமாக மலையாள மொழியிலே வெளியிடப்படுகின்ற தேசாபிமானி என்ற அவருடைய சொந்தக் கட்சிப் பத்திரிகைக்குக் கடைசி நேரத்திலேகூட, அவர் உயிர் பிரிவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்புகூட dictate செய்து, இரண்டு மூன்று கட்டுரைகள் அந்தப் பத்திரிகையில் வெளிவருவதற்கு உதவி, அதற்குப் பிறகுதான் அவர் மரணப் படுக்கைக்குச் சென்றார், மரணமுற்றார் என்ற செய்தியையெல்லாம் கேள்விப்படும்போது, 89 வயது வரையிலே, ஏறத்தாழ 70 ஆண்டுக்காலம் பொது வாழ்க்கைக்குத் தன்னை ஆட்படுத்திக்கொண்ட அந்தப் பெருமகனார், இந்தியாவினுடைய புரட்சியிலே தனக்கும் ஓர் அத்தியாயம் உண்டு என்கின்ற அளவிற்கு இடம் பெற்ற அந்தச் சீரிய செம்மலினுடைய மறைவு இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு மாத்திரமல்ல, முற்போக்குச் சிந்தனை உள்ள அனைவருக்கும் பேரிழப்பாகும். அதேநேரத்திலே நாணயமான அரசியல், நேர்மையான அரசியல் வேண்டும் என்று விரும்புகின்ற அத்தனை பேருக்கும் திரு. ஈ.எம்.எஸ். அவர்களுடைய இழப்பு ஒரு பெரும் இழப்பு ஆகும் என்றே நான் சொல்கிறேன்.

அவர், ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் என்று அழைக்கப்பட்டாலும்கூட, நம்பூதிரி என்பது ஒரு சாதிப் பெயர். அந்த சாதிப் பெயரே தன்னுடைய பெயராக ஆகின்ற அளவிற்கு அதிலேயும் ஒரு புரட்சியை அவர் செய்து காட்டி இருக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மார்ச் 20

தந்தை பெரியார் அவர்கள் வைக்கத்திலே-நடத்திய-போராட்டம், நம்பூதிரிகளை எதிர்த்துத்தான் அந்தப் போராட்டத்தை நடத்தினார்; அவ்வளவு பிற்போக்கானவர்கள் அங்கே நம்பூதிரிகள் என்ற பெயரில் இருந்தார்கள். அந்தச் சமுதாயத்திலே ஒரு புரட்சியாளர் மின்னல் கீற்றுப் போலத் தோன்றி, சிவப்பு நட்சத்திரமாக இந்தியா முழுவதும் விளங்கி, ஏன் உலக அரங்கிலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு விளங்கி, அந்த நட்சத்திரம் இன்றைக்கு உதிர்ந்துவிட்டது என்றாலும்கூட, நம்முடைய உள்ளத்தில் எல்லாம் இடம் பெற்றுவிட்ட நட்சத்திரமாக அவர் விளங்குகிறார் என்று கூறி அவருடைய இழப்பிற்காக ஆழ்ந்த இரங்கலை இந்த அவையின் சார்பாக அவருடைய குடும்பத்தாருக்கும், அவருடைய கட்சித் தோழர்களுக்கும் தெரிவித்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானத்தைப் படிக்கின்றேன்:

"இந்திய நாட்டின் பழம்பெரும் தலைவர்களில் ஒருவரும், சுதந்திரப் போராட்ட வீரரும், சமூக அரசியல் மேதையும், மார்க்சியக் கோட்பாடுகளைத் தனது முழு மூச்சாகக் கொண்டவரும், கேரள மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் 19-3-1998 அன்று தனது 89-வது அகவையில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மார்க்சியத் தத்துவ மேதையான அவர் அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் பொன்னானி பொது ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை மாகாண சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 1939-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டும், உலகிலேயே முதன்முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசின் முதல்வராக 1957-ஆம் ஆண்டு முதல் 1959-ஆம் ஆண்டு வரையும், 1967-ஆம் ஆண்டில் மீண்டும் பல்வேறு அரசியல் கட்சிகள் சார்ந்த கூட்டணிக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்று, கேரள மாநில முதல்வராகவும், தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட ஏழை எளியவர்களின் நலனுக்காகத் தனது இறுதி மூச்சுவரை பாடுபட்ட அவர், சிறந்த எழுத்தாளராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் திகழ்ந்து வந்தார்.



1998 மார்ச் 20] [பேரவைத் தலைவர்]

அன்னாரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தைதினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இயற்கை எய்திய அப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள்: வினா எண் 21, திரு. செங்கை சிவம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*முற்பகல் 9-40*

**21—**

### விளையாட்டு விடுதி மாணவ, மாணவியருக்கு உதவி வழங்குதல்

***6628—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டு விடுதி மாணவ, மாணவியருக்கு மத்திய அரசால் வழங்கப்படும் சாப்பாட்டுத் தொகைக்கு இணையான தொகையை மாநில அரசும் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் வழங்கப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட இந்திய விளையாட்டுக் குழுமத்தினால் சென்னையில் நடத்தப்படும்

விளையாட்டு விடுதியில், மாணவர் ஒருவருக்கு தினம் ரூ. 40/- உணவிற்காக அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசால் சென்னையில் நடத்தப்பட்டு வரும் சிறப்பு விளையாட்டு விடுதி மாணவர் ஒருவருக்கு, சாப்பாட்டுக்காக வழங்கப்படும் தொகையை ரூ. 25/-லிருந்து ரூ. 40/- ஆக உயர்த்தி 1-4-1997 முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசால் சேலத்தில் நடத்தப்படும் எஸ்.பி.டி.ஏ. விடுதிக்கு மத்திய அரசு, மாணவர் ஒருவருக்கு ரூ.25/- வழங்கி வருகிறது. தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதி மாணவ, மாணவியர்களுக்குச் சாப்பாட்டுச் செலவு உதவித் தொகையை நாளொன்றுக்கு ரூ.15/-லிருந்து ரூ.20/-ஆக உயர்த்தி, 1-4-1997 முதல் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு விடுதி மாணவர்களுக்கு ரூ. 25/-லிருந்து ரூ.40/-ஆக சாப்பாட்டுச் செலவை உயர்த்தித் தந்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற விடுதிகளுக்கு ரூ.15-லிருந்து ரூ.20-ஆக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தில் மொத்தம் ஐந்து விளையாட்டு விடுதிகளும் மூன்று விளையாட்டுப் பள்ளிகளும் உள்ளன. அவற்றில் சற்றேறக்குறைய 1,500 பேர் பயில்கிறார்கள். ஆகவே 20 ரூபாய் என்பதை மறுபரிசீலனை செய்து இதை 40 ரூபாயாக உயர்த்தினால் அரசுக்கு ஓர் ஆண்டிற்கு 3.3 லட்சம் ரூபாய்தான் செலவாகிறது. எனவே இதை அரசு மறுபரிசீலனை செய்து, இப்போது உயர்த்தியிருக்கிற ரூ.20-ஐ ரூ.40ஆக உயர்த்தித் தரவேண்டும். மற்றும் பிளஸ் 2 வரை படிக்கிற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கியிருக்கிறார்கள். அதைப்போல இந்த விளையாட்டுப் பள்ளி/விடுதி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள், மாணவர்களுடைய விளையாட்டு ஆர்வத்தை உயர்த்துவதற்காகப் பல்வேறு வழிகளில் ஆலோசனைகளை வழங்கலாம் என்று சொன்னாலும் கூட, பல்வேறு விளையாட்டுகளிலே ஈடுபாடு ஏற்படுவதற்காகச் செய்யப்படுகிற காரியங்கள் அனைத்தும் முழு அளவில் அரசு செலவிலேயே நடத்தப்படக்கூடிய நிலைமை உருவாகவில்லை. உருவாகும்போது அது கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள், தங்களுடைய முழு நாட்டத்தையும் இந்த விளையாட்டுத் துறையிலே செலுத்தாமல் இருப்பதால், இப்போது தமிழகத்திலிருந்து விளையாட்டு வீரர்கள் உருவாவது குறைந்து வருகிறது. ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாவட்டந்தோறும் விளையாட்டு விடுதிகளை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா என்று கேட்டதற்கு முதலில் பதில் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு பேசுங்கள். இது எப்படித் துணை வினாவாகும்?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடற் பயிற்சியை மாணவர்களுக்கு அளிக்கும் வகையில், விளையாட்டுத் துறையில் மாணவர்களைக் கண்டிப்பாக ஈடுபடுத்தும் வகையில் நடவடிக்கை எடுப்பார்களா? மாவட்டந்தோறும் விளையாட்டு வீரர்களுக்கு விடுதிகளை ஏற்படுத்தவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை இடம் தருகிற அளவுக்கு விரிவுபடுத்தப்படும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே விளையாட்டு விடுதிகள் எத்தனை செயல்படுகின்றன? விளையாட்டு விடுதிகளை பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தும் பரிசீலனை அரசிடம் இருக்கிறதா? அப்படி பரிசீலனையில் இருந்தால், திருவாரூர் மாவட்டத்தில் இத்தகைய தேவை இருக்கிறது என்று ஏற்கெனவே கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த மாவட்டத்தில் விளையாட்டு விடுதி திறக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

[1998 மார்ச் 20

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**22—**

## பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்குதல்

***9797—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியில் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் அளித்திருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. பள்ளப்பட்டியிலே 30 ஆயிரம் ஜனத்தொகையும், அரவக்குறிச்சியிலே 22 ஆயிரம் ஜனத்தொகையும், சுற்றுப்புற கிராமங்கள், ஏறத்தாழ 583 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாக இருக்கிற காரணத்தினால் மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர்கள் 35 கிலோ மீட்டர் தூரம் சென்று, கரூரிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிக்குத்தான் மேல் படிப்பிற்காகச் செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது. ஆகவே அருள்கூர்ந்து வரும் நிதி ஆண்டிலாவது பள்ளப்பட்டியிலே தொழில்நுட்பப்பயிலகம் அல்லது அரசுக் கல்லூரி தொடங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 20]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அதே அடிப்படையில், தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான பகுதிகள் இருக்கின்றன. எனவே அரசு அனைத்து இடங்களிலும் உரிய முறையில் இப்படிப்பட்ட கல்வி நிலையங்களை ஏற்படுத்துகிறபோது மிகப் பெரிய முதலீடு செய்ய வேண்டிய கட்டாயமும், ஆண்டு நிதிச் செலவு மிக அதிகமாகவும் ஆகி வருகிறது. எனவே தனியார் இப்படிப்பட்ட தொழில்நுட்பப் பயிலகங்களை ஏற்படுத்த முன்வந்தாலும், கலை, அறிவியல் கல்லூரிகளை ஏற்படுத்த முன்வந்தாலும், பொறியியல் கல்லூரிகளை ஏற்படுத்த முன்வந்தாலும், அந்த அடிப்படை வசதிகளோடு அவர்கள் அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அவற்றைக் கருதிப்பார்த்து அரசால் ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**23—**

## புளியங்குடி நகராட்சியில் மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்

***7681—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சியில் உள்ள மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சியில் உள்ள மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக மாற்றி அரசாணை 2(டி) எண் 63, சுகாதாரம், நாள் 16-6-1997-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள புளியங்குடி நகராட்சியில் மருந்தகமாக இருந்ததை, அரசு மருத்துவமனையாக்க அனுமதி வழங்கி இந்த அரசு, மருத்துவமனைக்குக் கட்டடம்

கட்டுவதற்கு 84 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கப்பட்டு, கட்டட வேலைகளும் நடைபெற்று வருகின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லை என்ற அவலத்தை கடந்த 2 ஆண்டுகளாக போக்கிய கழக அரசைப் பாராட்டும் வேளையில், மிக மிக அத்தியாவசியமான சில குறிப்பிட்ட இடங்களில், பொது மக்களின் அவசியத் தேவைக்கேற்ப, புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை இவ்வாண்டு துவக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதில் மத்திய அரசாங்கம் ஒரு விதிமுறை வைத்திருக்கிறது. 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கலாம் என்று இருந்தாலும்கூட, இப்போது 1,408 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மக்கள் தொகையினுடைய அடிப்படையில், மத்திய அரசாங்கம் கூடுதலாக 6 நிலையங்களுக்கு அனுமதித்து, 1,414 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய தொகுதியாகிய பொங்கலூர் சட்டமன்றத் தொகுதி நிறைய கிராமங்களை உள்ளடக்கிய தொகுதி. மருத்துவ வசதி வேண்டும் என்று சொன்னால், திருப்பூருக்கோ, பல்லடத்திற்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே பொங்கலூரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை, படுக்கையுடன் கூடிய வசதியான அரசு மருத்துவமனையாக ஆக்கித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு கடந்த ஆண்டு 126 இடங்களில்



24 மணி நேரமும் இயங்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றி அமைத்து இருக்கின்றன. அவற்றை, ஆறு படுக்கையுடன்கூட அமைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பொங்கலூரில் அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால்—இந்த ஆண்டு மேலும் 124 மருத்துவமனைகள் அப்படி உயர்த்தப்பட இருக்கின்றது.—அதிலே பொங்கலூரும் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. சின்னையா.

**திரு. வெ. சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருமயம் தொகுதி பொன்னமராவதி பாப்பாயி அரசு மருத்துவமனையில் கடந்த 7 ஆண்டுக் காலமாக பெண் மருத்துவர் இல்லை என்று பலமுறை சொல்லியும். இன்னும் நியமிக்கப்படவில்லை. உடனடியாக நியமிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு தேர்வாணையம் மூலமாக 500 மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் எல்லாம் தமிழகம் எங்கும் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். ஒருசில குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்வதற்கு பெண் மருத்துவர்கள் மறுக்கிறார்கள். இருந்தாலும் இந்த அரசால் குறைந்தபட்சம் ஒரு தாலுக்கா மருத்துவமனை அளவில் பெண் மருத்துவர் நியமிக்கப்படவேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடத்திலே பெண் மருத்துவர் இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினரே யாரையாவது பரிந்துரை செய்தால், அவர்களை நியமித்துத் தர இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வெளிநோயாளிகள் அதிகப்படியான அளவில் வருவதால், அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனைத்து நோயாளிகளையும் பார்க்க இயலாத சூழ்நிலையில், துணை மருத்துவமனைகளை சேலம் மாநகராட்சியில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1998 மார்ச் 20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலே உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினை மேம்படுத்துவதற்காக, கடந்த ஆண்டு நான் சேலத்திற்குச் சென்றிருந்தபோது, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மருத்துவமனையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இன்னும் அதை மேம்படுத்தவேண்டும் என்றும், புதிய பிரிவுகள் சிலவற்றை உருவாக்க வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில், முழுமையாக அரசாங்கம் செலவுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. சேலம் பகுதியிலிருந்து கணிசமான தொகை சுமார் 1 கோடி ரூபாய் அளவிற்கு நீங்கள் வசூல் செய்து தந்தால், அரசாங்கம் குறைந்தபட்சம் 3 கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்து, அதை மேம்படுத்தலாம் என்ற கருத்தைச் சொன்னோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஏறக்குறைய 1 கோடி ரூபாய் அளவிற்கு நிதியை வசூலித்துத் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு, அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ரவி அருணன்.

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் நகராட்சியால் நடத்தப்படுகின்ற மருந்தகங்கள் ஒழுங்காக இயங்குவதில்லை. அங்கே பொதுமக்களுக்குத் தேவையான மருந்துகள் கிடைப்பதில்லை. ஆகவே, நகராட்சியிலுள்ள மருந்தகங்களை மருத்துவமனைகளாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளிலே இருக்கக்கூடிய தலைவர்கள் தங்களுக்கு அதிகாரம் வேண்டும் என்றும் சொல்கிறார்கள்; தங்கள் அதிகாரத்தின்கீழ் அந்த மருத்துவமனைகள் இயங்கவேண்டும் என்றும் விரும்புகிறார்கள். எனவே, இது ஒரு கொள்கை முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினை. அமைச்சரவை கூடி, இதுகுறித்து விவாதித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



1998 மார்ச் 20 ]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது தாலுக்கா அளவில் இருக்கின்ற மருத்துவமனைகளிலே, பெண் டாக்டர்கள் இல்லை என்று சொன்னால், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்தால், நான் உடனே போடுகிறேன் என்று சொன்னார்கள். எப்படி சிபாரிசு செய்யவேண்டும்? தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டோர் இல்லாத இடங்களில், வேலையில்லாமல் இருக்கின்ற டாக்டர்களை நாங்கள் சிபாரிசு செய்தால் நீங்கள் வேலை கொடுப்பீர்களா என்பதை விளக்கமாகச் சொல்லுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான டாக்டர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களிலே யாரையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பரிந்துரை செய்ய முடியாது. ஏற்கெனவே பணியிலே இருக்கக்கூடிய டாக்டர்களில் மற்றும் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய டாக்டர்களில், அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அங்கே பணியாற்றுவதற்கு விருப்பம் தெரிவிப்பார்களானால், அப்படிப்பட்டவர்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பரிந்துரை செய்வார்களானால், அரசாங்கம் அவர்களை நியமிப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முடியாத சூழ்நிலையை பலமுறை இந்த அவையில் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அமைக்க முடியவில்லை என்று சொன்னால்கூட, ஏறத்தாழ ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழும் 4, 5 தாய்-சேய் நல விடுதிகளில் அங்கே உள்ள செவிலியர்கள் மூலம் கவனிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தாய்-சேய் நல விடுதிகளுக்கு மருத்துவர்களை அனுப்பி, பகுதி நேர அடிப்படையிலே மருத்துவர்கள் பணிபுரிகின்ற அளவில் ஏற்பாடு செய்ய முடியுமா? அதேபோல் தாய்-சேய் நல விடுதிகளுக்கு பல இடங்களில் கட்டடங்கள் இல்லாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அவற்றிற்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1998 மார்ச் 20

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டவுடன் கட்டடங்கள் இல்லாமல் இருந்த சுமார் 650 ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கண்டறிந்து உடனடியாகக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஆணையும் பிறப்பித்து முதல்வர் அவர்கள் நிதியும் ஒதுக்கினார்கள். அதிலே 300 கட்டடங்கள் இப்போது இயங்கக்கூடிய அளவிற்கு வந்திருக்கின்றன. மீதியிருக்கக்கூடிய 350 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 212 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பணிகள் தொடங்கப்பட்டு வெவ்வேறு காலகட்டத்திலே. பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. மீதியிருக்கக்கூடிய பகுதிகளில் இடம் கொடுப்பதிலே பிரச்சினை இருக்கிறது. அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆட்சித் தலைவர்கள் Encumbrance Certificate கொடுத்தார்களோ அங்கேயும் வேலைகள் தொடங்க மக்கள் நல்வாழ்வுத் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. இன்னும் சில பகுதிகளிலே அந்த ஆணைகள் கிடைக்கவில்லை. அவை கிடைத்தவுடன் இந்த ஆண்டிற்குள்ளாக எல்லா இடங்களிலேயும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய பல மருத்துவக் கல்லூரிகளிலே ஒன்று சென்னை மருத்துவக் கல்லூரி. அதை நிகர்நிலை பல்கலைக்கழகமாக அறிவித்து அரசு மேம்படுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது. அந்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை விரிவுபடுத்தும் வண்ணம் மத்திய சிறைச்சாலையை புழலுக்கு மாற்றி அதை விரிவுபடுத்தலாம் என்ற செயற்குறிப்பு சென்ற அரசுகளால் சொல்லப்பட்டது. அது இந்த ஆண்டு நிறைவேற்றப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். அதோடு சென்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பவள விழாவில் சென்னை மருத்துவக் கல்லூரி புது மருத்துவமனைக்கு சிறு நீரகக் கற்களை அகற்றும் 'லித்தோட்ரிப்சி' (Lithotripsy) என்ற கருவி வழங்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அது வழங்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 20 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே ஒரு வினாதான் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலை இருக்கும் இடத்தை Deemed University-க்கு ஒப்படைப்பது குறித்த கருத்துரு அரசாங்கத்தினுடைய பரிசிலனையிலே இருந்து கொண்டிருக்கிறது. சிறைச்சாலையினுடைய இடத்தை மருத்துவமனைக்கு ஒப்படைப்பது என்றால், சிறைச்சாலைக்கு வேறு இடம் தேட வேண்டியிருக்கிறது. அதற்கும் அரசாங்கம் இடத்தைத் தேடிக்கொண்டிருக்கிறது. மற்றொன்று. நிகர்நிலை பல்கலைக்கழகத்திற்கு வழங்கவேண்டிய கருவியைப் பற்றிச் சொன்னார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கும்படி அரசிடம் கேட்டிருக்கிறோம். நிதி அநேகமாகக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி.

**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமாக இயங்கிவந்த திருக்கழுக்குன்றம் மருத்துவமனையில் 4 மருத்துவர்கள் பணியாற்றினார்கள். ஆனால் அதை அரசு மருத்துவமனையாக மாற்றிய பிறகு, அங்கே இரண்டு மருத்துவர்கள்தான் பணியாற்றுகிறார்கள். அதிலும் ஒருவர் மகப்பேறு விடுப்பில் சென்றுவிட்டார். இப்போது ஒருவர்தான் அந்த அரசு மருத்துவமனையில் பணியாற்றுகிறார். இந்த அவலநிலையைப் போக்குவதற்கு அரசு மருத்துவமனைகளில் உடனடியாக மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசவ காலத்திலே விடுப்பில் சென்றால் உடனடியாக அங்கே மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ், பொன்னம்மாள்:** கடைசியாகத்தான் வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி என்று யார் சொன்னார்கள்?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் நிறைய ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பித்திருக்கின்றோம். அப்படி ஆரம்பித்ததோடு மாத்திரமல்ல, நிறைய கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்குக்கூட இரண்டு

[1998 மார்ச் 20

கட்டடங்களுக்கு Sanction ஆகி, கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த அளவிற்கு நாம் செய்தும்கூட, டாக்டர்கள் அங்கே தங்கியிருந்து பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. அதற்குக் காரணம், ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சியின்போது ஒரு Block ஆரம்பிக்கும் போதெல்லாம் அங்கேயே அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகள்—B.D.O. Extension Officer அனைவருக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுத்தார்கள். அதேபோல் மாண்புமிகு அமைச்சரவர்கள், எங்கெங்கே குடியிருப்பதற்கு வசதிகள் இல்லாமல் இருக்கிறதோ, அங்கே ஒரு பெண் டாக்டருக்கு குடியிருப்பும், ஒரு ஆண் டாக்டருக்கு குடியிருப்பு வசதியும் செய்து கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டால், நாம் நம்முடைய காரியங்களை நல்லமுறையில் நிறைவேற்றமுடியும். மருத்துவர்களும் நல்லமுறையில் பணியாற்ற முடியும். அவ்வாறு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள 380 ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதன்முதலிலே தொடங்கப்பட்ட இடங்களிலே குடியிருப்பிற்கான வசதிகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு தொடங்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று டாக்டர்கள் தங்கி குடியிருப்பதற்கான வசதிகள் அங்கேயில்லை. இப்போதுதான் முதல் கட்டமாக மருத்துவமனைக்கான கட்டடங்களைக் கட்டி முடித்திருக்கிறோம். இன்னமும் கட்டிக்கொண்டிருக்கிறோம். இந்தப் பணி முடிந்தவுடன் அடுத்த கட்டமாக டாக்டர்களுக்கான குடியிருப்பும் கட்டித் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30,000 ஜனத்தொகை உள்ள இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்படும் என்ற மத்திய அரசின் உத்தரவு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் விதியைத் தளர்த்தி சில ஊராட்சி ஒன்றியங்களில், 2,3 ஆரம்ப சுகாதார நிலையங்கள்கூட ஆரம்பித்து இருக்கிறார்களே, அதனுடைய நோக்கம் என்ன என அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியம் என்று சொன்னால் குறைந்தது ஒரு லட்சத்திலிருந்து ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் வரை மக்கள் தொகை கொண்டதாக சில ஒன்றியங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம் 3 அல்லது 4 அல்லது 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள்கூட இயங்கிக் கொண்டிருக்கின்றன. மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்படுகின்றனவே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள் வசதியாக இல்லை, வேறு சிறைச்சாலைகளைத் தேடிக் கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறைச்சாலையை ஆஸ்பத்திரிக்காகத் தேடிக் கொண்டிருக்கிறோம்; ஏனென்றால், இந்தச் சிறைச்சாலையை புழலேரிக்கு மாற்றிவிடலாம் என்றிருக்கிறோம் என்றார்கள். அப்படியென்றால், புழலேரி சிறைச்சாலை என்ன ஆனது? ஏன் அதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புழலேரியிலே கட்டப்பட்ட சிறைச்சாலை திறந்தவெளி சிறைச்சாலை. அங்கே இன்னும் தேவையான வசதிகள் முழுமையாக இல்லை. எனவேதான், சென்னைக்கு அருகிலே வேறொரு இடத்திலே மத்திய சிறைச்சாலை புதிதாகக் கட்டப்படுமானால், இப்போதுள்ள மத்திய சிறைச்சாலை இடத்தை மருத்துவமனைக்கு எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பிருக்கும். அதைத்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 30,000 ஜனத்தொகை உள்ள இடத்திற்குத்தான் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற மத்திய அரசின் விதி இருப்பதாகவும், தமிழக அரசு அந்த விதிகளைத் தளர்த்தி 25,000 ஜனத்தொகை உள்ள இடத்திலே ஒரு மருத்துவமனை அமைக்கலாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை

செய்திருப்பதாகவும் முன்பொருமுறை கேள்வி நேரத்திலே பதில் அளித்தார்கள். மத்திய அரசினுடைய பதில் வந்திருக்கிறதா? அதுபோல் 25,000 ஜனத்தொகை இருக்கும் இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கிற நிலைமை ஏற்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25,000 கூட அல்ல. டெல்லியிலே சென்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசுகின்ற நேரத்தில் எங்களுடைய தமிழகத்தில் 20,000 மக்கள் வாழக்கூடிய சில பகுதிகளிலே மருத்துவமனைகள் இல்லாமல், கிராமப் பகுதிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இந்த விதியைத் தளர்த்தி இன்னமும் கொஞ்சம் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளிக்கலாமே என்று சொன்னபோது, இது தமிழ்நாட்டின் பிரச்சினையாக இருந்தால் செய்யலாம், இது இந்தியா முழுவதும் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை. ஆகவே, ஒரே கொள்கை முடிவுதான் இந்தியாவிலே எடுக்கப்பட முடியுமே தவிர, தமிழ்நாட்டுக்கு என்று தனியாக ஒரு கொள்கை முடிவு எடுக்க முடியாது என்று தெரிவித்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. பி.என். சுப்பிரமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**24—**

### கலவையில் மருத்துவமனை திறத்தல்

***8402—திரு. பி.என். சுப்பிரமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, கலவையில் அரசு மருத்துவமனை எப்போது திறக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆற்காடு தொகுதி, கலவையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக (Government Non-Taluk Hospital) 



1997-98-ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தில் தரம் உயர்த்தப்பட்டு இன்று அது செயல்பட்டு வருகிறது.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டநாள் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மருத்துவமனைகளில் மேலும் கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கும், மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களையும், செவிலியர்களையும், உதவியாளர்களையும் நியமனம் செய்யவும் கோருகிறார்கள். அங்கு செயல்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் ஆற்காடு தொகுதி வளையாத்தூரில் அமைக்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆற்காடு தொகுதிக்கு வருகை தந்த நேரத்தில் அறிவித்தார்கள். மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு உடனடியாக ஒரு வீடு கொடுக்கவும், 5 ஏக்கர் நிலம் இலவசமாகக் கொடுப்பதற்கும் அந்த ஊர் மக்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஆகவே, அந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு எப்போது செயல்படுத்தப்படும் என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில் அவர்கள் நாளைய தினமே 5 ஏக்கர் நிலத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வாரேயானால் உடனடியாக அந்த இடத்தில் மருத்துவமனை தொடங்கப்படும். ஏனென்றால், அதற்கான ஆணை 2 தினங்களுக்கு முன்னாலேயே பிறப்பிக்கப்பட்டு விட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

முற்பகல் 10-05

**25—**

### குளத்தூர் வட்டத்தைப் பிரித்தல்

***11128—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 20

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் எனது குளத்தூர் தொகுதி மீது மிகுந்த பரிவும் பாசமும் கொண்டவர்கள். ஏறத்தாழ 11 சரகங்களைக் கொண்ட தமிழகத்தின் மிகப் பெரிய தாலுக்காவான குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்கிற இந்தக் கோரிக்கையை இன்று நேற்று அல்ல, கிட்டத்தட்ட 30, 32 ஆண்டுகளுக்கு முன்னால் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, 1966-ஆம் ஆண்டு எனது தொகுதியிலுள்ள இலுப்பூருக்கு வந்தபோது பொதுமக்கள் அந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அப்போது எனக்கு வயது 6, இப்போது எனக்கு வயது 38. நான் இதே மாமன்றத்திலே 2 முறை இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வேண்டிக் கேட்டிருக்கிறேன். மேலும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்கள் சென்னையிலே நடைபெற்ற மாவட்ட ஆட்சியருக்கான கருத்தரங்கத்திலே வழங்கப்பட்ட கருத்துருத் தொகுப்பின் முதல் தீர்மானமே குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுக்கா உருவாக்க வேண்டும் என்கிற தீர்மானம்தான். எனவே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எமது மக்களின் நியாயமான இந்த நீண்ட நாள் நெடிய நாள் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து இந்த நிதியாண்டிலே.. [குறுக்கீடு]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர்களின் பணியாளர்கள் உள்ளே வரக்கூடாது.



1998 மார்ச் 20]

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** தலைவர் அவர்களே, குளத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து இலுப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுக்காவை உருவாக்க கனிவோடு மறுபரிசீலனை செய்வார்களா என்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, இந்த அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிசீலனை செய்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். பிறகு என்ன அடுத்த கேள்வி? திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, நம்முடைய குளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கவிதைப்பித்தன் அவர்கள் சொல்லியதைப் போல புதுக்கோட்டையை நம்முடைய கலைஞர் அவர்கள் மாவட்டமாகப் பிரித்ததற்குப் பிறகு தொடர்ந்து இலுப்பூரைத் தனி தாலுக்காவாகவும், திருமயத்தில் இருக்கக்கூடிய பொன்னமராவதியை தனி தாலுக்காவாகவும், கறம்பக்குடியை தனி தாலுக்காவாகவும் பிரித்து ஆலங்குடியை கோட்டமாக்கக்கூடிய கருத்துருக்கள் அரசிடம் பல ஆண்டுகளாக தேங்கிக் கிடக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயற் குறிப்பே இல்லை என்று பதில் தந்திருக்கிறார்கள். செயற்குறிப்பு அனைத்தும் மாவட்ட ஆட்சியரிடத்திலிருந்து வந்திருக்கிறது. சென்ற கூட்டத் தொடரிலேயே பரிவோடு இதை கவனித்து நிதிநிலைக்கு ஏற்றவாறு இந்தக் கோட்டங்கள், வட்டங்களைப் பிரிப்போம் என்ற உத்தரவாதத்தையும் தந்திருக்கிறார்கள். ஆகவே இதை மறுபரிசீலனை செய்து புதுக்கோட்டை மாவட்டத்தின்மீது தனிக் கவனம் செலுத்தி நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிற இந்த வட்டங்களை, கோட்டங்களைப் பிரிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, பரிசீலிக்கும் என்று எத்தனை முறை தெரிவிப்பது என்று எனக்குப் புரியவில்லை. பரிசீலிக்கும்.

[1998 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. ரா. சேதுநாதன், திரு. ச. அழகுவேலு மற்றும் திரு. செங்கை சிவம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**26—**

**திண்டிவனம் நகருக்குக் குடிநீர் வழங்குதல்**

***3868—திரு ரா. சேதுநாதன்:**

**திரு. ச. அழகுவேலு:**

**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரி மூலம் திண்டிவனம் நகருக்குக் குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீராணம் திட்டம் மூலம் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள திண்டிவனம் உட்பட 6 நகராட்சிகளும், 10 பேரூராட்சிகளும் இதர வழியோர கிராமங்களும் பயன்பெறும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம் என்று சொன்ன பிறகும் நீங்கள் துணைக் கேள்வி கேட்க வேண்டும் என்பது சட்டமா? திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் குடிநீர்த் திட்டம் பற்றி ஆளுநர் உரையில் பத்தி 20லே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இந்தக் கேள்வி இன்றைக்கு வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். காலத்தை நிர்ணயிக்க முடியுமா அல்லது குடிநீர் வாரியத்திடம் அது ஒப்படைக்கப்பட்டு



1998 மார்ச் 20 ]

விரைவில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் திண்டிவனத்திலே 30 ஆண்டுகளுக்கு முன்பாக போடப்பட்ட குழாய்கள் இன்றைக்கு துருப்பிடித்து அடைபட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைக் கருத்திலே கொண்டு 25,000 மக்கள் தொகை வாழ்ந்த காலத்திலே போடப்பட்ட குழாய்களை மாற்றி-இன்றைக்கு 1 இலட்சம் மக்கள் தொகை இருப்பதால்-குழாய்களைப் பெரிதுபடுத்தி வீராணம் திட்டம் நிறைவேறுவதற்கு முன்பாக இந்தக் குழாய்கள் மாற்றியமைக்கப்பட்டு திட்டம் வெற்றிபெறச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அத்தனை பிரச்சினைகளையும் பரிசீலிப்பதற்காகத்தான் சற்று காலதாமதம் ஆகியிருக்கிறது. அவ்வளவையும் பரிசீலனை செய்து வழியோர கிராமங்களைச் சில இடங்களில் பார்வையிட்டு 267 வழியோர கிராமங்களுக்கும் மற்றும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பல ஆய்வுகள் முடிந்த பிறகு நிச்சயமாக எல்லா மக்களுக்கும் கிராமப்புறம் என்றால் 40 லிட்டர் தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகுவேலு.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமக்களுக்குக் குடிநீர் வழங்குகின்ற இந்தப் புதிய வீராணம் திட்டத்தில் விக்கிரவாண்டி பேரூராட்சி இணைக்கப்பட்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விக்கிரவாண்டி ஒன்றியத்தில் 25 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் சென்னைக்கு வீராணத்திலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இப்போது அது

[1998 மார்ச் 20

நிறுத்தப்பட்டிருந்தாலும் கூட சென்னையின் புறநகரான ஆலந்தூர், தாம்பரம் போன்ற பகுதிகளில் இப்போது பாலாற்றின் நீர் குடிநீராகப் பயன்படுத்தப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. எனவே, இந்த வீராணம் திட்டம் திண்டிவனத்திலிருந்து வரும்போது சென்னையின் புறநகரான ஆலந்தூர், தாம்பரம் போன்ற தொகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இதர பகுதிகள் இதுவரை தனித் திட்டங்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அது முடியும் தருவாயில் இருக்கிறது. தேவைப்பட்டால் அதிலேயே இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம். இல்லை, வீராணம் திட்டம்தான் வர வேண்டும், இந்தத் திட்டத்தில் பயன் இல்லை என்றால் மீண்டும் அதற்குப் பிறகு பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. இராமலிங்கம்.

**திரு. ஏ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியிலிருந்து திண்டிவனம், விழுப்புரம் நகருக்குக் குடிநீர் வழங்கும்போது சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு விடும் தண்ணீரின் அளவு குறைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய திட்டத்தை உருவாக்குகின்றபோது பழைய திட்டத்தின் பயன்கள் நிச்சயமாக குறைக்கப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**27—**

## காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்தல்

***6434—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 20 ]

தமிழகம் முழுவதும் ஆபத்தான நிலையிலுள்ள காலனி வீடுகளைப் பராமரிப்பு செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தால் மட்டும் அல்ல; வீடுகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தாலும் தமிழகத்திலே பல்லாயிரக் கணக்கான வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே, வருடத்திற்கு இத்தனை வீடுகள் பராமரிக்கப்படும் என்று 3 ஆண்டுகளுக்கு ஒரு இலக்கை நிர்ணயம் செய்து தமிழகத்திலுள்ள வீடுகள் அனைத்தும் பராமரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் மானியமும், மாநில அரசின் மானியமும் இணைந்துதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. சென்ற ஆண்டு நிர்ணயித்த குறியீட்டின்படி 71 ஆயிரம் வீடுகளுக்கு நாம் திட்டத்தை நிறைவேற்றி முடித்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு ஏறத்தாழ 40 ஆயிரம் வீடுகளுக்கு மேல் கட்டக் கூடாது என்ற அளவுக்கு அவர்கள் ஒதுக்கீட்டை குறைத்து இருக்கிறார்கள். இதுவல்லாமல் ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்து இருக்கின்றன என்பதைத் தெரிவித்தபோது, அவர்களுக்குச் சொந்தமாகக் கொடுத்து விட்ட பிறகு அதிலே மீண்டும் அரசு தலையிடக் கூடாது என்ற அளவுக்கு மத்தியிலிருந்து ஒரு தகவல் வந்தது. இருப்பினும் பல வீடுகள் பழுதடைந்து இருக்கின்றன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததற்கிணங்கவும், போகிற இடங்களில் கொடுத்த குரல்களை ஒட்டியும் இரண்டு முறை ஆதி திராவிட நலத் துறையிலிருந்து முதலில் 15 கோடி ரூபாயும் மற்றும் ஒரு 15 கோடி ரூபாயும் 2 ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டு ஓரளவுக்கு அதை விநியோகிக்கிறபோது அதைச் சரியான முறையில் செயல்படுத்துகிற அளவுக்கு பல ஒன்றியங்களில் பல பயனாளிகள் அதைப் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை, முடியவில்லை. ஆகையினால்தான் கொஞ்சம் காலதாமதமாகக் கூட இந்தப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இது

முடிந்த பிறகு நிதிநிலையை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வரவர்கள் கருணை உள்ளத்தோடு, இலட்சக்கணக்கான இல்லங்களைத் தாழ்த்தப்பட்ட பெருமக்களுக்குக் கட்டித் தருகிறார்கள். ஆனால், C.M.D.A. பகுதியிலே வாழ்கிற காலனிகளுக்கு மட்டும் அந்த வசதி இல்லை என்று சட்டம் இருக்கிறது. அதைத் தளர்த்தி, அந்த மக்கள் எந்த பாவமும் செய்யவில்லை என்றால் அவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித்தர இந்த அரசு ஆணை பிறப்பிக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதற்குத் தனி வினா எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆண்டி அம்பலம்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட காலனி வீடுகள் இடிந்து நொறுங்கி ரொம்பவும் சேதம் அடைந்து அவற்றில் அரிசன மக்கள் இருக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்லாமல், கலைஞர் ஆட்சியிலேயே கட்டப்பட்ட வீடுகள்கூட எந்த இடத்தில் பார்த்தாலும் என் தொகுதியிலே இடிந்து கிடக்கிறது. எனவே ஆவன செய்து ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய அந்த எண்ணங்களை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். புதிதாகக் கட்டப்பட வேண்டிய இல்லங்களுக்கே எண்ணிக்கையைக் குறைத்து மத்திய அரசு நமக்கு நிதியுதவி தந்திருக்கிறது. அதிலும் அவர்களுக்கென ஒப்படைக்கப்பட்டவற்றில் எப்படித் தலையிடுவது என்பதையும் தெரிவிக்கிறார்கள். ஆனால் கட்டப்பட்டிருக்கிற வீடுகள் ரொம்ப நீண்ட காலத்திற்கு முன்னால், நம்முடைய கலைஞர் முதலில் ஆட்சி துவங்கிய காலத்தில் கட்டப்பட்ட வீடுகள், ரொம்ப நீண்ட காலமான காரணத்தாலே பழுதுகள் அதிகமாக இருக்கின்றன. சிலவற்றை





இடித்துவிட்டுக்கூட புதியதாகக் கட்டலாம். 55 சதவீதத்திற்கும் மேல் பழுது இருக்குமானால் அதை நீக்கிப் புதிதாகக் கட்டுகிற எண்ணிக்கையிலே சேர்த்துக் கட்டலாம் என்பதையும் தெரிவித்திருக்கிறேன். காமராஜர் காலத்திலே கட்டப்பட்ட ஓட்டு வில்லை வீடுகள்கூட தற்போது பல இடங்களில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன என்ற தகவலைத் தெரிவிக்கிறேன். ஆனால் அது போதுமானதாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதுபட்ட பழைய வீடுகள் எல்லாம் புதுப்பிக்க வேண்டிய நிலையில் இருந்தாலும். சென்ற ஆட்சிக் காலத்தில், கடைசி நேரத்தில் கட்டப்பட்ட பல வீடுகள் தரம் குறைந்தவையாக, அந்த கான்கிரீட் பகுதியை கையால்கூட உடைத்து விடக்கூடிய நிலைமையில் இருக்கின்றது. அதே சமயம், மழை பெய்தால் முழுவதுமாகத் தண்ணீர் ஒழுகி வீடுகளெல்லாம் நாசமாகின்றன. இப்படிப்பட்ட வீடுகளையும் அரசு கருத்திற்கொண்டு பழுது நீக்கித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவது உண்மை. பல இடங்களில் நான் நேரிலேயே சென்று பல வீடுகளைப் பார்த்து, அதற்குரிய நடவடிக்கையெடுத்து, பிறகு அதை rectify செய்கின்ற அளவிற்குச் சில வீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சில வீடுகள் கட்டப்பட்டு, முடிவுற்று கணக்குத் தீர்க்கப்பட்டு சில ஆண்டுகள் ஆனதற்குப் பிறகு நாம் பொறுப்பேற்று அவற்றைப் பார்த்து, அதிலே எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத அளவிற்குச் சிக்கலும் வந்திருக்கின்றது. இவ்வளவு சிக்கல்களையும் தாங்கிக்கொண்டு, அவர்கள் எடுத்துச் சென்ற பணம் ஏறத்தாழ அவர்கள் முதல் தவணையாகப் பெற்றுக்கொண்ட தவணை என்று இதுவரையில் முன்பணமே கொடுக்கக்கூடாது என்ற நிலை இருந்தும், பெற்ற அந்தப் பணம் திரும்பி வராமலும் பாக்கியிருக்கிறது. அதையும்கூட பார்க்காமல், பிறகு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று நடவடிக்கைக்குத் தனியாக அனுப்பிவிட்டு, நாம் ஈடு செய்து பல கட்டடங்களைக் கட்டி முடித்திருக்கிறோம் என்பதையும் தகவலுக்கு நான் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களுக்கு நாங்கள் செல்கின்றபொழுது கிராமங்களிலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் கும்பலாக வந்து, பழைய காலத்திலே கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளெல்லாம் ஒழுகி, விழுகின்ற நிலையிலே இருக்கின்றன. இதைக் கட்டித் தர வேண்டுமென்று பெரிய அவலத்தோடு எங்களிடத்திலே தெரிவிக்கிறார்கள். இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் அவசியம் அதைக் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா? பழைய ஓட்டு வீடுகளையும், இருக்கின்ற வீடுகள் அனைத்தையும் கட்டித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்படுகிற கிராமங்கள் தேர்வு செய்வது மாவட்ட ஆட்சித் தலைவர், பயனாளிகள் எண்ணிக்கையை முடிவு செய்வது ஊராட்சி மன்றத் தலைவர் என்ற முறை இப்போது நடைமுறையில் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியரிடம் கலந்து அப்படிப்பட்ட இடங்களைத் தேர்வு செய்வதற்கு சிபாரிசு செய்தால் எனக்கும் தகவல் வந்தால், நான் ஓரளவுக்கு நிர்ணயிக்கின்ற வீட்டின் புதிய இலக்குகளுக்கு உட்பட்டுச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 28. திரு. கு. ரவி அருணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**28—**

## தேங்காயை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை தொடங்குதல்

***11280—திரு. கு. ரவி அருணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி பகுதியில் தேங்காயை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) தென்காசிப் பகுதியில் தேங்காயை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை தொடங்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*முற்பகல் 10-20*

**திரு. கு. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசியைப் பொறுத்த அளவில் அது தொழிலிலே மிகவும் பின்தங்கிய வட்டமாக உள்ளது. அந்தப் பகுதியிலே பெரிய தொழிற்சாலை எதுவுமில்லை. ஆகவே, கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம் நிலவி வருகிறது. அங்கே ஏற்படுகின்ற ஜாதி மத மோதல்களுக்கு இந்த வேலையில்லாத் திண்டாட்டம்தான் முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சென்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு, அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் மலர் சாகுபடி எல்லாம் செய்தார்கள். ஆனால், அந்தத் தொழிற்சாலை இதுவரை அங்கே ஆரம்பிக்கப்படவில்லை. அந்த சென்ட் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு மீண்டும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, சென்ட் தயாரிப்பது பற்றியல்ல. தேங்காயை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றியதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. பா. கோபால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**29—**

## சாம்பார் பள்ளம் அணை கட்டுதல்

***3939—திரு. பா. கோபால்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 20

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் சாம்பார் பள்ளம் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேலத்திலுள்ள திட்ட உருவாக்கக் கோட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளருக்கு, இந்தத் திட்டம் குறித்து ஒரு விவர அறிக்கை அனுப்புமாறு 10-3-1998 அன்று துறை ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. அறிக்கை வந்த பின்னர் இந்தத் திட்டம் குறித்து அரசு இறுதி முடிவு எடுக்கும்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் ஒன்றியத்தில் ஆலமரத்துப்பட்டி மற்றும் சிங்கரிப்பட்டி ஊராட்சிகள் மிகவும் வறட்சியான பகுதிகள் ஆகும். எனவே, அந்தப் பகுதி விவசாயிகளுடைய நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று நமது அரசு விரைவில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து முடித்துக் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே ஒரு குட்டையைக் கட்டி அதன்மூலம் அங்கே இருக்கின்ற நிலத்தடி நீரைப் பெருக்குவது என்பதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். ஆனால், இப்போது இந்தக் குட்டையைக் கட்டுகின்ற இடத்தில் வேளாண்மைத் துறையினர் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில், நாங்கள் தேர்ந்தெடுத்த இடத்திலேயிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள் இரண்டு குட்டைகளைக் கட்டியிருக்கிறார்கள். ஒரு கிலோ மீட்டருக்குள் மேலும் குட்டைகளைக் கட்டுவதற்கு சாத்தியக்கூறு உண்டா என்பது பற்றித்தான் நாங்கள் இறுதி அறிக்கை கேட்டிருக்கிறோம். அது வந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, டாக்டர் எம். மோசஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1998 மார்ச் 20]

30—

## போக்குவரத்துக் கழக கட்டுமான வேலையை அரசே மேற்கொள்ளுதல்

*1693—டாக்டர் எம். மோசஸ்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு கட்டுமானம் மற்றும் இதர வேலைகளை ஒப்பந்தக்காரர்களிடம் கொடுக்கும் முறையை நீக்கி அப்பணிகளை அரசுத் துறையே மேற்கொள்ள ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திருமதி ஏ.ஆர். வேடம்மாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

31—

## மொரப்பூரில் பயணியர் விடுதி கட்டுதல்

*9800—திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் போக்குவரத்துத் துறை மூலமாக பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மொரப்பூரில் போக்குவரத்துத் துறை மூலமாகப் பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1998 மார்ச் 20

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தரும் முக்கிய பிரமுகர்கள், அரசு அலுவலர்கள், யாராக இருந்தாலும் இரயில் மூலமாக மொரப்பூர் வந்துதான் இறங்கிச் செல்வதும், திருப்பிச் செல்வதுமான நிலை உள்ளது. இந்நிலையில் வந்து போகும் மிக முக்கிய பிரமுகர்கள் ஓய்வெடுக்க மொரப்பூரில் நெடுஞ்சாலைத் துறை மூலமாக ஒரு பயணியர் விடுதியினைக் கட்டித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியில் போக்குவரத்துத் துறை மூலமாகக் கட்டப்படுமா என்று கேட்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறை மூலமாகக் கட்ட இயலாது. நெடுஞ்சாலைத் துறை மூலமாகப் பயணியர் விடுதிகள் கட்டுவதற்கு பல இடங்களிலேயிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**32—**

## அயல்நாட்டில் வாழும் தமிழர்களின் மேம்பாட்டிற்கு உதவி வழங்குதல்

***4479—திரு. சி.டி. தண்டபாணி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகில் எத்தனை நாடுகளில் எவ்வளவு தமிழர்கள் வாழ்கிறார்கள்?

(ஆ) அங்கு வாழும் தமிழர்களின் கல்வி, கலாச்சாரம் குறித்த மேம்பாட்டிற்கு உதவி கோரி எந்தெந்த நாடுகளிலிருந்து முறையீடுகள் வந்துள்ளன?



1998 மார்ச் 20]

(இ) அவற்றில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 36 அயல்நாடுகளில் ஏறத்தாழ 85,66,040 தமிழர்கள் வாழ்கிறார்கள்.

(ஆ) மற்றும் (இ): அயல்நாடுகளில் வாழும் தமிழர் அமைப்புகளிடமிருந்து நிதியுதவி தொடர்பாக விண்ணப்பங்கள் வரும்பொழுது இவ்வரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. பர்மா எனப்படும் மியான்மர், மொரீஷியஸ், போலந்து போன்ற நாடுகளிலிருந்து உதவி கோரி முறையீடுகள் வந்து அவை பரிசீலிக்கப்படுகின்றன.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினம் என்கிற ஒரு தனித் தன்மை பெற்ற இந்த இனத்திற்கு சமீபகாலமாக இந்தியாவிலேகூட ஒரு ஆபத்து நெருங்கி வந்திருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், உலகம் பூராவும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழர்களுக்கு தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுவது என்பது அவர்களுக்கு மகிழ்ச்சி தரத்தக்க ஒரு சம்பவம் என்றாலும்கூட, அந்தத் தமிழர்களையெல்லாம் ஒருங்கிணைத்து அவர்களுக்கு புது வாழ்வையும் ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். இருந்தாலும்கூட, இந்த அரசு இன்னின்ன உதவிகளையெல்லாம் வழங்கியிருக்கிறது என்பதை உலகமெங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்கு அறிவித்தால்தான் இன்னும் பல நாடுகளிலிருந்து அவர்கள் உதவி கேட்பதற்கு ஒரு வாய்ப்பாக அது அமையும். எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழர்களுடைய வாழ்க்கை முறை, அவர்களுடைய பண்பாடு இவற்றைப் பற்றியெல்லாம் அறிந்து கொள்வதற்கு, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அனுப்பி அந்த 36 நாடுகளிலும் வாழக்கூடிய தமிழர்களுடைய வாழ்க்கை நிலையை அறிந்துகொள்வதற்கு, அவர்களுடைய தேவையை உணர்ந்துகொண்டு அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா எனத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்கள் இப்போது எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அவர்களைப் பற்றிய செய்திகளைத் தமிழக அரசு அறிந்து கொள்ளவும், தமிழக அரசு செய்கின்ற பணிகளை உலகமெங்கும் இருக்கிற தமிழர்கள் அறிந்து கொள்வதற்குமான வாய்ப்புகள் இப்போது அறிவியல் பூர்வமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, எங்களுடைய துறையில் இணைக்கப்பட்டிருக்கிற 'இணையம்' என்ற அந்தக் கருவியின் வாயிலாக ஏதேனும் ஒரு செய்தியைப் பற்றி நாம் மியான்மருக்கோ, ஆஸ்திரேலியாவிற்கோ, சிங்கப்பூருக்கோ தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால் இங்கேயே அதைப் பதிவு செய்து, சில மணித்துளிகளில் விடையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் ஒரு வாரத்தில் எங்களுடைய அறையிலே வந்து அவற்றை நீங்கள் பார்த்து தெரிந்து கொள்ளலாம். எனவே அப்படிப்பட்ட நிலையில் ஒரு குழுவை அனுப்பி தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு இப்போது செய்திகளில் வறட்சியில்லை. தமிழக அரசு, வெளிநாடுகள் என்று சொல்லப்படுகின்ற 36 நாடுகளில் வாழ்கிற தமிழர்களைப் பற்றிய விவரங்களையும், ஏற்கெனவே 'அயல்நாடுகளில் தமிழர்' என்று வெளிவந்த நூலையும் கூர்மையாகப் படித்து, ஒவ்வொரு நாட்டினுடைய தமிழர்களுடைய தேவைகளைப் பற்றி முற்றாக அறிந்து வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் உதவிகளை வழங்கவும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் முதல்வராக இருந்து எங்களைப் போன்ற மாணவர்களுக்கு 'கற்றலிற் கேட்டலே நன்று' என்ற வாசகத்தை கற்றுத் தந்தவர்கள். எனவே, அண்ணன் திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் வைத்த கோரிக்கையில் ஒரு சிறு மாற்றம் செய்து நம்முடைய மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அனுப்பி, நேரிலே பார்த்து, அவர்களுடைய நிலைமைகளைக் கண்டறிய ஆவன செய்வார்களா என அறிய





விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமொழியில் 'கற்றலிற் கேட்டலே நன்று' என்று இருக்கிறதே தவிர, 'கற்றலில் காணலே நன்று' என்று இல்லை. எனவே, நீங்கள் என் அறையிலே வந்து கேட்கலாம். மீதியை என்னிடத்தில் நேரிலே கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிற்கு மியான்மர், போன்ற நாடுகளிலேயிருந்து அகதிகளாகவும், மணிப்பூர் எல்லையான மோரேயிலிருந்து வந்த தமிழர்களும் சுமார் 5000 பேர் வாழ்கிறார்கள். அவர்கள் தமிழ் கற்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறார்கள். நான் மோரேவிற்குச் சென்ற நேரத்தில், அங்கேயுள்ள தமிழர்களைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. தாங்கள் மொரீஷியஸ் தமிழர்களுக்குப் புத்தகங்கள் அளித்துள்ளீர்கள். அதைப் போல் மோரேயில் உள்ள தமிழர்களுக்கும் அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மர்ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி கடந்த ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மொரீஷியஸ் நாட்டிற்குத் தேவையான உதவிகள் அனைத்தும் அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் என்னுடைய தலைமையில் ஒரு குழு அங்கே சென்று முழுமையான விவரத்தைத் திரட்டி வந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தின்படி செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல் வெளிநாடுகளில் இருக்கிற தமிழர்கள் கேட்கின்ற அளவிற்கு அரசின் சார்பில் ஒவ்வொரு வெளிநாட்டிலும் உள்ள நூலகங்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட 100 சிறந்த நூல்களை வழங்குவதற்கு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கி 22 நாடுகளுக்கு இந்த முறை வழங்கப்படவிருக்கிறது. ஏற்கெனவே சில நாடுகளுக்குச் சென்று சேர்ந்திருக்கின்றன. அதேபோல், தமிழ்நாட்டினுடைய எல்லைக்கப்பால் இருக்கின்ற பிற மாநிலங்களில் பல இடங்களில் தமிழ் படிப்பவர்கள் தங்களுக்குத் தமிழ்ப் புத்தகம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தமிழ்ப் புத்தகங்களை வெளியிடுவது கல்வித் துறை என்பதனால் எங்களுடைய வேண்டுகோள்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பரிசிலனை

செய்து இயன்றவரைக்கும் வெவ்வேறு மாநிலங்களுக்கு அவர்கள் நூல்களை அனுப்பியிருக்கிறார்கள் என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வாயிலாக அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அரங்கிலே தமிழர்களுடைய கலாச்சாரமும், பண்பாடும் தொன்மை வாய்ந்தது. ஆனால் இன்றைய நிலையிலே உலக நாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்களெல்லாம் தமக்கு என்று இருக்கக்கூடிய தாய்நாடு தமிழ்நாடு. அந்தத் தமிழ்நாட்டிலிருந்து தமக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லேயே என்று சொல்லி ஒருசில நாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்கள் ஏங்கக்கூடிய குரல் நமக்கு கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்த நிலையை உணர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் கருணையுள்ளத்தோடு தமிழர்களுக்கு இந்த வகையிலே பாதுகாப்பு இருக்கிறது, தொன்மை வாய்ந்த இந்தக் கலாச்சாரமும், பண்பாடும் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்று உலக அரங்கிலே இருக்கக்கூடிய தமிழர்களையெல்லாம் ஆண்டுக்கு ஒருமுறையாவது அழைத்துப் பேசி இந்தக் கலாச்சாரமும் பண்பாடும் பாதுகாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட வினாவில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அயல்நாடுகளில் இருக்கின்ற தமிழர்கள், அவர்களுக்கு உதவி கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுகிறார்கள் என்று உறுப்பினர் சுட்டிக்காட்டினார். எல்லா நாடுகளிலும் இருக்கின்ற தமிழர்களுக்கு தமிழக அரசு முழு உதவி செய்து வருகின்றது என்பதை இப்பொழுது அனைவரும் அறிந்து வைத்திருக்கிறார்கள். அதுகுறித்து ஏதேனும் கருத்துக்கள் மாண்புமிகு உறுப்பினரிடத்திலே இருக்குமானால் என்னிடத்திலே நேரடியாகத் தெரிவித்தால் தீர்வு காணப்படும். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மியான்மர் பகுதியில் தாட்கோ நகரில், தலைவர் கலைஞர் தமிழகத்தில் நிறுவிய வள்ளுவர் கோட்டம்



போன்றே உருவாக்கவேண்டுமென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான விவரங்கள் கோரப்பட்டிருக்கின்றன. திட்ட மதிப்பீடும் கோரப்பட்டு இருக்கின்றது. அதேபோல, போலந்து நாட்டில் இருக்கின்ற வார்சா பல்கலைக்கழகத்திற்கு உதவிகள் தேவைப்படுகின்றன என்று கேட்டார்கள். அதுவும் வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோக, மொரீஷியசுக்கு முழு உதவி செய்ததைப் போலவே சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் அஞ்சல் வழியிலே கல்வி தொடர, பட்டப்படிப்புகள் உருவாக்கி, அதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, உலக் உறவுகள் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவதாக அவர் கேட்ட கேள்வி, அங்கிருக்கின்ற அறிஞர்களை வரவழைத்து ஒருங்கிணைத்துப் பேசப்படுமா என்பது. தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லாப் பல்கலைக்கழகங்கள் அதுபோன்று உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வருகை தரும் பேராசிரியர்கள்—Visiting professors—என்ற முறையில் அவர்களை வரவழைத்து சிறப்பாகச் செய்கிறார்கள். இப்பொழுதும்கூட, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் மாஸ்கோவைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த ஒரு பேராசிரியர் இங்கு வந்து ஆறு மாதங்கள் அயல் பணியிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, உலக அறிஞர்கள் அனைவரும் பல்வேறு கோணங்களில் ஒருங்கிணைக்கப்படுகிறார்கள்: ஒருங்கிணைத்து அந்தப் பணிகள் தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்,

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'கற்றலிற் கேட்டற் நன்று' என்று அவர்களுடைய அறையிலே வந்து கேட்கச் சொல்கிறார்கள்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கேட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!.

[1998 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் இதையும் அமைச்சருடைய அறையிலே போய்ப் பேசுங்கள்-(சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாடினான் பாரதி.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக'

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தமிழைச் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் மற்ற நாடுகளுக்குச் சென்று பரப்ப வேண்டுமென்ற வகையிலேதான் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் போன்றவர்கள் எல்லாம் வெளி நாடுகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பி தமிழைப் பரப்ப ஏற்பாடு செய்ய முடியுமா என்ற வினாவைத் தொடுத்து, அதை நானும் வழி மொழிந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னைப் போன்றவர்களை (சிரிப்பு) அதேபோன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் போன்றவர்களை (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர்களையெல்லாம் வெளிநாடுகளுக்கு அனுப்பி தமிழைப் பரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா? எப்படி அயல்நாடுகளிலிருந்து தமிழ் அறிஞர்களை அழைத்து இங்கு பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வந்து பேசி நீங்கள் கருத்துப் பரிமாற்றம் செய்கிறீர்களோ அதைப் போல, எங்களையும் நீங்கள் வெநாடுகளுக்கு அனுப்பி, அங்கிருக்கின்ற பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி நாங்களும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் சிறந்த தமிழறிஞர் என்று அவருடைய கவிதையிலிருந்து நான் கருதுகிறேன். (சிரிப்பு) (குறுக்கீடு) இல்லையா! மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் சொன்னால் அது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு) எனவே, தமிழ் அறிஞர்களை அனுப்புவது பற்றிக் கருதப்படும். ஆனால் தமிழ் ஆர்வமுள்ளவர்கள் பற்றிக் கருதப்படுமா என்பது சிந்திக்கப்படும். ஆனால் தமிழ்ப் பல்கலைக் கழகம் போன்று தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலிருந்தும் சில தமிழறிஞர்கள் வெவ்வேறு அயல் பணிகளில் வெளிநாடுகள் அனைத்துக்கும் சென்று வருகிறார்கள்.



1998 மார்ச் 20 ]

முற்பகல் 10-35

அங்கிருக்கின்ற பரிமாற்றங்களும் இங்கே நிகழ்கின்றன. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் தாங்கள் சென்று பார்க்கக் கூடாது என்பதல்ல. இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற எல்லா அறிஞர்களுக்கும் உலகத்தில் இருக்கிற அறிஞர்களுக்கும் இடையே தற்போது நல்ல உறவு இருக்கிறது.

அதேபோன்று உலகத் தமிழ் மாநாட்டை நடத்துகின்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி அமைப்பினுடைய தலைவரே ஜப்பானைச் சேர்ந்தவர்தான். அவரைப் போன்றவர்கள் தொடர்ந்து இந்த நாட்டுக்கு வந்து பல்வேறு உறவுகளை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல கருத்தை ஏற்று, அவர் முதலில் உள்ளூரில் தமிழை வளர்ப்பதற்கு முழு முயற்சி எடுத்து, அந்தந்த ஊர்களில் உள்ள விளம்பரப் பலகைகள், மற்றவற்றையெல்லாம் தமிழில் மாற்றுவதற்கு பெருமுயற்சி எடுக்கின்ற ஆர்வத்தின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, தமிழர், தமிழர் என்ற வாசகம் ஒலிக்கப்படுகிறது. தங்கள் வீட்டிலே தமிழ் மொழி பேசாமல் வேறு மொழி பேசுகிறார்கள். லண்டன் போன்ற இடங்களுக்குச் செல்கிறபோது, நீங்கள் தமிழர்களா என்று அவர்கள் கேட்டு, வீட்டிலும் தமிழ் பேசுகிறீர்களா என்று விளக்கம் கேட்கிறார்கள். ஆகவே தமிழர் என்று சொல்கிறபோது, வீட்டிலே தமிழ் பேசுகிறவர்களா அல்லது தமிழைத் தங்களது தாய் மொழியாகக் கொண்டவர்களா, யார் தமிழன் என்ற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக ஏராளமான நூல்கள் வெளிவந்து இருக்கின்றன. அவற்றைக் கேட்டறிய வேண்டும்; படித்தறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இது தொடர்பாக தக்க

[1998 மார்ச் 20

தெளிவுரைகளை தன்னுடைய நூல்களின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றை ஆழ்ந்து படித்து இதில் ஒரு தெளிவான முடிவுக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நாடுகளில் தமிழ்ச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இப்போது பல்வேறு நாடுகளிலே தமிழர்கள் வாழ்கிறார்கள் என்ற விவரத்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு நாடுகளில் முறையான, பதிவு செய்யப்பட்ட தமிழ்ச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன? தமிழர்கள் வாழ்ந்து, தமிழ்ச் சங்கங்கள் இல்லாத நாடு ஏதாவது உள்ளதா? கேரள சமாஜம் போன்ற அமைப்புகள் அந்தந்த நாட்டினுடைய அரசுகளோடு சரியான தொடர்பு கொண்டு அங்கிருக்கக்கூடிய மலையாள மொழி வளர்ச்சிக்காக, கேரள மக்களுடைய வளர்ச்சிக்காக சரியான முறையில் ஓர் அணுகுமுறையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழர்களுக்கு அத்தகைய ஒரு முறை இன்று வரையில் இல்லாமல் இருக்கிறது. அங்கு நேரிடையாகச் சென்று பார்த்தபோது இந்தக் குறையை நம்மால் அறிய முடிகிறது. எனவே அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து, கேரள சமாஜம் பெற்றிருக்கின்ற முக்கியத்துவத்தை, தமிழ்ச் சங்கங்களும் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உலகில் எத்தனை தமிழ்ச் சங்கங்கள் தற்போது இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அவர்களுக்கு எந்தெந்த வகையில் நம்முடைய தாய்நாடு உதவி செய்கிறது என்பதை அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் எங்கெங்கெல்லாம் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன என்ற புள்ளி விவரத்தைத் தருவதற்கு தனி வினா கொடுக்க வேண்டும். எனினும் அடிப்படையில் அவருடைய வினாவில் கேரள சமாஜம் போன்ற அமைப்புகள் மொழியோடு தொடர்பு கொண்டு கேரள மாநிலத்தின் மலையாள மொழிக்காகப் பாடுபடுகின்றன என்று குறிப்பிட்டார். அதேபோன்று தமிழ்நாட்டில் ஏராளமான மொழி அமைப்புகள் தமிழுக்காக அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அதேநேரத்தில் நம்மிடத்திலே தமிழை வளர்ப்பதற்காகவும், ஆழமாக இதனைப் பயிற்றுவிப்பதற்காகவும் தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற



1998 மார்ச் 20]

அமைப்புகள் இருக்கின்றன. வெளி நாடுகளில் நாங்கள் நேரிடையாகப் பார்க்கிறபோது—எல்லா நாடுகளிலுமே, ஏறத்தாழ 15 நாடுகளில்—தமிழ்ச் சங்கங்கள்தான் நம்மை வரவேற்கின்றன. அவைதான் அந்த நாட்டோடு எல்லாவகையான தொடர்பும் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக சிங்கப்பூரில் இருக்கிற சிங்கப்பூர் தமிழர் இயக்கம் மற்றும் வேறுவகையான தமிழ் அமைப்புகள் நேரிடையாக அரசோடு தொடர்பு வைத்திருக்கின்றன. மலேசியாவில் இருக்கின்ற தமிழர் அமைப்புகள் அந்த நாட்டு அரசோடு நேரிடையாகத் தொடர்பு வைத்திருக்கின்றன. வெளிநாடுகளுக்கு என்ன உதவி செய்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்டினேன். வெளி மாநிலங்களுக்கும் நிறைய உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அண்மையில்கூட காஷ்மீரில் ஒரு தமிழ் இருக்கை நிறுவுவதற்கு ரூபாய் 15,000 இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தில்லிக்குச் சென்றபோது, தில்லி தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்காக ரூபாய் 10 இலட்சத்தை வழங்கியிருக்கிறார்கள். இப்போது மும்பையில் இருக்கிற தமிழ்ச் சங்கத்திற்கும் நிதியுதவி வழங்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது வேறு சில தமிழ்ச் சங்கங்களும் இத்தகைய கோரிக்கையை வைத்திருக்கின்றன. 'கேரள தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு' என்ற அமைப்பு என்னிடத்திலே உதவி கோரியிருக்கிறது. அனைத்தும் கவனித்து ஆவன செய்யப்படும். உலகத் தமிழ்ச் சங்கங்கள் பற்றிய புள்ளி விவரங்களை மற்றொரு வாய்ப்பில் நானே உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

முற்பகல் 10-40

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றாலம் சிறந்ததொரு சுற்றுலாத் தலமாகும். ஆயிரக்கணக்கான தமிழர்கள் அங்கே சென்று, இரண்டு மாத காலம் வரை அங்கே தங்கி, அங்குள்ள இனிய சூழலை அனுபவித்து வருகின்றனர். மேலும், குற்றாலக் குறவஞ்சி என்பது மிகவும் பிரசித்தி பெற்ற பாடல். ஆனால், குற்றாலக் குறவஞ்சியினுடைய வாசகங்கள் அங்கு எந்தப் பகுதியிலும் இல்லை. ஆகவே, தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, குற்றாலக் குறவஞ்சியினுடைய வாசகங்களை அங்கே எழுதுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 மார்ச் 20

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதேநேரத்தில், திருஞானசம்பந்தர் பாடியதைப் போன்றோ அல்லது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியதைப் போன்றோ, ஒரு குறிப்பிட்ட கோவிலைப் பற்றி 10 அல்லது 20 பதிகங்களாக இருந்தால், தமிழக அரசு அறநிலையத் துறையின் சார்பில் அவர்கள் பாடிய அத்தனையும் அந்தந்தக் கோவில்களில் பொறிக்கப் பெறுகின்றன. ஆனால், குற்றாலக் குறவஞ்சி என்பது ஒரு நூல். ஏறத்தாழ 100 முதல் 200 கவிதைகளுக்கு மேல் இடம் பெற்றிருக்கிற, பல்வேறு சந்தங்களைக் கொண்ட பாடல். எனவே, முழுவதையும் பொறிப்பது என்பது இயலாது. எனினும், தேவைப்படுகின்ற பகுதிகள், குறிப்பாக குற்றாலநாதர் கோவிலில் பொறிக்கப்படும். மற்ற சந்தங்கள் படிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகளில் வாழும் தமிழர்களுக்குப் புத்தகங்களை வழங்கி தமிழை வளர்க்க நமது அரசு பாடுபட்டு வருகின்றது. அதேநேரத்தில் பல நாடுகளில் தமிழ்ப் பள்ளிகள் இல்லாத காரணத்தால் அங்கே வாழும் தமிழர்களின் குழந்தைகள், தமிழைக் கற்றுக் கொள்வதற்கோ அல்லது தமிழின் உச்சரிப்பை முறையாகப் புரிந்து கொள்வதற்கோ வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். குறிப்பாக, பஹ்ரைன் நாட்டில் தமிழ்ச் சங்கம் ஒன்று உள்ளது. அதிலே எனது மூத்த சகோதரர் திரு. M.G.K. ஹுசைன் மாலிம் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்றார். அவர்கூட வெளி நாடுகளில் உள்ள தமிழர்கள் தமிழ் மொழியினைக் கற்றுக்கொள்ள வசதியின்றி இருக்கிறார்கள் என்று தெரிவித்தார். இந்த நிலையினைப் போக்கிட ஆடியோ, வீடியோ கேசட்டுகளில் தமிழை உச்சரிப்பதற்கும், கற்றுக்கொள்வதற்கும் இந்த அரசு ஆவன செய்து ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி முறையானது; சிறப்பானது. இது தொடர்பாக, இப்போது இருக்கின்ற வானொலி நிலையத்தினுடைய பொறுப்பாளர்கள், தனியார் தொலைக்காட்சியின் பொறுப்பாளர்கள், திரைப்படத் துறையின் இயக்குநர்கள் மற்றும் தலைவர்கள் ஆகிய அனைவரையும் கொண்ட



1998 மார்ச் 20]

கூட்டம் ஏற்கெனவே நடத்தப்பட்டு, இப்போது அது தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வெகுவிரைவில் அது தொடர்பான ஒலி நாடாக்கள், ஒலிப் பேழைகள் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:

**33—**

## விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த கடன் வழங்குதல்

***8471—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் வட்டங்களில் உள்ள விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் வட்டங்களில் நிலத்தடி நீர்வளத்தின் அடிப்படையில் சாம்பல் பகுதியாக பாகுபாடு செய்யப்பட்டிருக்கும் ஆலங்காயம், நாட்ராம்பள்ளி, ஜோலார்பேட்டை மற்றும் காட்பாடி ஒன்றியங்களில் உள்ள விவசாயிகளின் கிணறுகளை ஆழப்படுத்த, வேலூர் மற்றும் திருப்பத்தூர் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை அணுகினால், தேவைக்கேற்ப திட்டங்கள் தீட்டி, நபார்டு வங்கியின் ஒப்புதல் பெற்று, இடைவெளி தூர விதிகளுக்கு உட்பட்டு, கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி, வேலூர், திருப்பத்தூர் போன்ற வட்டங்களில் விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு நிலவள வங்கிகளில் மனு செய்துவிட்டு, லோன் கிடைக்குமா என்ற ஏக்கத்தில்

காத்திருக்கிறார்கள். காரணம், எங்களுடைய மாவட்டத்தில் பாலாற்றில் நீர் இல்லாதுபோன காரணத்தினாலும், அது பாழாறாக மாறிவிட்ட காரணத்தினாலும் நிலத்தடி நீரை மட்டுமே விவசாயத்திற்கு நாங்கள் பெரிதாக நம்பியிருக்கிறோம். கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு லோனிற்காக மனுச் செய்கின்றபோது, நீங்கள் சில கடுமையான விதிகளையெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இடைவெளி என்றெல்லாம்கூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடைவெளி என்று சொல்லி, அதிலேகூட சில குளறுபடிகள் இருக்கின்றன. அங்கிருக்கின்ற அதிகாரிகள் விவசாயிகள் லோனைப் பெற முடியாத அளவிற்கு எப்படியெல்லாம் செய்ய முடியுமோ, அப்படியெல்லாம் செய்து, விவசாயிகளுக்கும் வங்கிகளுக்கும் இடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்திவிடுகிறார்கள். அதுபோல. கிளியரன்ஸ் என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். பாலாறு இங்கே இருக்கிறது. ஆலங்காயம் பகுதிக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லை. ஆயினும் அங்கும் அந்த கிளியரன்ஸ் வாங்கித்தான் கிணறே வெட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். நாங்கள் மேட்டுப் பகுதியிலே, மலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். மலைக்கும், அந்தப் பாலாற்றிற்கும்கூட 12, 16 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. எனவே, அந்த வரைமுறைகளையெல்லாம் தளர்த்தி, உடனடியாக நபார்டு வங்கியின் அனுமதியினைப் பெற்று லோன் வழங்கிடவும், எவ்வளவு காலத்திற்குள் இந்த லோன் வழங்கப்படும் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். மேலும், தேசியமயமாக்கப்பட்ட மற்ற வங்கிகளிலே எப்படி, எந்தெந்த வகைகளுக்கெல்லாம் லோன் கொடுக்கிறார்களோ அதேபோல, எல்லா தரப்பு நிகழ்ச்சிகளுக்கும் நில வள வங்கிகள் மூலம் லோன் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் 80 விழுக்காட்டிற்கு மேல் பயன்படுத்தப்பட்ட பகுதி என்று தமிழ்நாட்டில் இருக்கின்ற 384 ஊராட்சி ஒன்றியங்களில் கிட்டத்தட்ட 98 ஊராட்சி ஒன்றியங்களைக் கண்டறிந்திருக்கிறார்கள். அதேபோல், நிலத்தடி நீரை, 60 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரை பயன்படுத்திய பகுதி என்று கிட்டத்தட்ட 90 ஒன்றியங்களை நிர்ணயித்து





இருக்கிறார்கள். மீதம் 196 ஒன்றியங்களில் இருக்கிற பகுதிகளிலேயுள்ள விவசாயிகள் கேட்டால், உடனடியாக கடன்கள் வழங்குவதற்குரிய அத்தனை தகுதிகளும் அந்த வங்கிகளுக்கு இருக்கின்றன. திருப்பத்தூர் பகுதியில் முழுவதுமாக 80 சதவிகிதத்திற்கு மேல் நிலத்தடி நீரைப் பயன்படுத்திய பகுதி என்று இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி விவசாயிகள் கேட்டவுடன் கடன் வழங்குகின்ற தகுதி அந்த வங்கிகளுக்கு இல்லாமல் இருக்கிறது. நாட்ராம்பள்ளி, ஆலங்காயம், ஜோலார்பேட்டை ஆகிய பகுதிகளிலே 60 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரை நிலத்தடி நீரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே இருக்கிற விவசாயிகள் கேட்டால், 'நபார்டு' வங்கியின் அனுமதியோடு கடன் வழங்குவதற்குரிய முழு முயற்சியை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், வேலூர் பகுதியை எடுத்துக் கொண்டால், காட்பாடி பகுதிக்கு மட்டும் தருவதற்குரிய தகுதி அங்கே இருக்கிறது. அவர்கள் 60 சதவிகிதம் முதல் 80 சதவிகிதம் வரைதான் நிலத்தடி நீரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். வேலூர், அணைக்கட்டு, கணியம்பாடி ஆகிய பகுதிகளில் எல்லாம் 80 சதவீதத்திற்குமேல், தண்ணீரைப் பயன்படுத்திவிட்ட காரணத்தினால், அங்கே ஆழ்கிணறு வெட்டுவதற்குரிய கடனை வழங்குவதற்கு இயலாத நிலையில் அந்த வங்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 80 சதவிகிதம் ஏற்கெனவே நீரைப் பயன்படுத்தி விட்டார்கள் என்ற ஒரு கணக்கை, அதிகாரிகள் சொல்கிற கணக்கையெல்லாம் சொல்கிறார்கள். எங்களைப் போன்ற விவசாயிகள், எங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்துவது, எங்களுடைய பயிர்கள் வாடாமல் இருக்க வேண்டும் என்பது குறித்துதான் நாங்கள் கவலைப்படுகிறோமே தவிர, மற்ற பகுதிகளிலெல்லாம் 80 சதவிகிதத்திற்கு மேல் தண்ணீரை எடுத்து விட்டார்கள் என்று சொன்னால், உங்களுடைய கணக்கு எங்களுக்கு உதவாது. ஆகவே, எங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு நீங்கள், 80 சதவிகிதம்; 60 சதவிகிதம் என்று இருக்கிற விதிமுறைகளை எல்லாம் விடுத்து, விவசாயிகள் பயிர் வாடுகிறது; அதற்குத் தீர்வு காண வேண்டுமென்ற அடிப்படையில் கொஞ்சம் மனிதாபிமான அடிப்படையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த சதவீத கணக்கையெல்லாம் விட்டுவிட்டு, எங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு, குறிப்பாக, வேலூர் பகுதியிலே

[1998 மார்ச் 20

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் காட்பாடி பகுதியைப் பற்றிச் சொல்கிறார். ஆனால் எங்களுடைய பகுதியில் அல்ல; அதேபோல் திருப்பத்தூர் பகுதியிலும் முழுமையாக இல்லை. இப்படி ஒவ்வொரு பகுதியிலும் பக்கத்திலே இருக்கிற ஒன்றியங்களிலே இல்லை; கிராமங்களிலே இல்லை என்கிற குறை வருகிறபோது. பெருத்த ஏமாற்றம் விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. ஆகவே. கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு. இதுபோன்ற விதிமுறைகளை. அதிகாரிகள் சொல்லக்கூடிய கணக்குகளைக் கொஞ்சம் தயவுசெய்து ஓரம் தள்ளிவிட்டு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவரவர்களுடைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ஆவன செய்ய முற்படுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு வங்கி ஒரு விவசாயிக்குக் கடன் தருகிறது என்று சொன்னால். அந்த விவசாயிக்கு நல்ல முறையிலே விளைச்சல் ஏற்பட்டு. கடனைத் திருப்பித் தருகிற வகையிலே இருந்தால்தான் இரண்டு பேரும் மகிழ்ச்சியாக இருக்க முடியும். அருகிலே. அருகிலே 150 மீட்டர் இடைவெளி இல்லாமல் அல்லது 150 அடி இடைவெளி இல்லாமல் ஒவ்வொருவருக்கும் கடன் வழங்குவோமானால். இரண்டு விவசாயிகளுமே நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியாமல்போய். கிட்டத்தட்ட விவசாயம் முழுமையாக பாதிக்கப்படும் என்ற காரணத்தினால். தமிழ்நாடு அரசின் மூலம் முழுமையாக இல்லாமல். 'நபார்டு' வங்கியின் மூலமாகக் கடனைப் பெற்றுத் தருகிற நிலை இருக்கிறது. எனவே. அவர்கள் சில சட்டதிட்டங்களை நமக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்தச் சட்டதிட்டங்களின்படிதான். இந்தக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை. அதாவது அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டுமென்று சொன்ன கருத்தை ஆராய்ந்து. அந்த வங்கியை அணுகி விதியை கொஞ்சம் தளர்த்தி வழங்க முடியுமா என்பதை ஆலோசித்துப் பிறகு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34. திரு. அ. சுடலைமுத்து. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.



1998 மார்ச் 20]

**34—**

## பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

***9188—திரு. அ. சுடலைமுத்து :**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போடிநாயக்கனூரில் ப்ரல் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் தொகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் மக்கள் விவசாயம் மற்றும் கால்நடைகளையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். போடிநாயக்கனூர் தொகுதி, கேரள மாநில எல்லையை ஒட்டியுள்ளதாகும். பசுமை நிறைந்த கிராமங்களில் வாழும் மக்கள், பால் உற்பத்தியில் மிகவும் நாட்டம் கொண்டிருக்கிறார்கள். தேனியிலுள்ள ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்திற்குப் பால் வழங்குவதில் முதலிடம் வகிப்பது போடிநாயக்கனூர் தொகுதிதான். அவ்வாறு தேனிக்குக் கொண்டு செல்கிற வகையில், பால் வீணாகச் செலவாகிறது. எனவே, பால் உற்பத்தியைப் பெருக்க. போடிநாயக்கனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. போடிநாயக்கனூர் பகுதியில் நாள் ஒன்றுக்கு 8,200 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள தேனியில் இயங்கி வரும் 50 ஆயிரம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையத்திற்கு எவ்வித சிரமமுமின்றி பால் எடுத்துச் செல்லப்பட்டு குளிரூட்டப்படுகிறது. ஆகவே, பால் குளிரூட்டும் நிலையம். போடிநாயக்கனூரில் அமைக்க சாத்தியம் இல்லை.

[1998 மார்ச் 20

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**35—**

### இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்துதல்

***669—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறையில் பணிபுரியும் 2000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு இந்த திருந்திய விடையை வாசிக்கிறேன். பெருந்துறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையைத் துவக்குவதற்கு அப்பகுதியை ஆய்வு செய்து, கோவை மண்டல மருத்துவ இயக்குநர் 5-3-1998 அன்று அறிக்கை ஒன்றை அளித்தார். அவ்வறிக்கையை ஆய்வு செய்து சாத்திய அறிக்கை (Feasibility Report) அனுப்புமாறு சேலம் மண்டல மருத்துவ நிர்வாக அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார். இதுகுறித்து அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் மத்திய ஈட்டுறுதித் திட்டக் கழகத்தின் இசைவைப் பெற்று பெருந்துறை பகுதியில் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், திருத்திய விடையை பேரவைத் தலைவருக்கு முதலிலேயே கொடுக்க வேண்டும். என்னிடம் அது இல்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறையில் ஏறத்தாழ 5000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மத்திய ஈட்டுறுதி திட்டக் கழகத்தின் இசைவைப் பெற்று நடவடிக்கை



1998 மார்ச் 20]

எடுக்கப்படும் என்ற பதிலைத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, தமிழகம் முழுவதும் தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்கள் எண்ணிக்கையும் பல்வேறு இடங்களில் பெருகி வந்திருக்கின்றன. அதற்குத் தக்கபடி இ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பெருந்துறையைப் பொறுத்தமட்டில் 2200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், 36-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள், 11 வருவாய் கிராமங்கள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே இந்த இ.எஸ்.ஐ. மருந்தகம் உருவாக்கப்பட வேண்டும் என்பது குறித்து பாதகமான பிரச்சினை இல்லை. கட்டடங்கள் கூட பரிசிலிக்கப்பட்டு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அறிக்கை அனுப்பப்பட்டுவிட்டது. குறிப்பாக சேலம் மண்டல மருத்துவ அலுவலர் அதை ஆராய்ந்து வருகிறார். விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**36—**

### நீதிமன்றங்களை காரைக்குடிக்கு மாற்றுதல்

***1324—திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் உள்ள சில நீதிமன்றங்களை காரைக்குடிக்கு மாற்றும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேவகோட்டையில் 3 நீதிமன்றங்கள் உள்ளன. எந்த நீதிமன்றத்தையும் காரைக்குடிக்கு மாற்றுகிற உத்தேசம் அரசிடம் இல்லை.

[1998 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**37—**

## பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுதல்

***11429—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் எதுவும் செயல்படவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி மட்டுமே செயல்பட்டு வருகிறது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கிட்டத்தட்ட 18-க்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரசு உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஏறக்குறைய 20,000 மாணவர்களுக்கு மேலாக அதில் பயிலுகிறார்கள். ஆனால் அரக்கோணம் நகரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கென்று தனியாக ஒரு விடுதி இதுவரையில் இல்லை. எனவே அது இப்போது ஏற்படுத்தித் தரப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அதேசமயம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு என்று இயங்கி வருகிற விடுதிக்கும் சொந்தக் கட்டடம் இல்லை. எனவே அதற்கும் ஒரு சொந்தக் கட்டடம் இந்த நடப்பு நிதியாண்டிலேயே கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரில் மிகவும்



1998 மார்ச் 20]

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி இயங்குவதால் அதே இடத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி துவங்கிட வாய்ப்பில்லை. அரக்கோணம் நகரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**38—**

## வீடுகட்ட முன்பணம் வழங்கும் கால அளவைக் குறைத்தல்

***7991—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் வீடு கட்டும் முன்பணம், விண்ணப்பம் செய்யும் நாளிலிருந்து 3 வருடம் கழித்துத்தான் கிடைக்கிறது. இதை 6 மாத கால அளவிற்குள் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்று வள்ளுவர் கூறினார். அதற்கேற்ப நமது அரசு ஊழியர்கள் தங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள அரசு அலுவலகங்களிலிருந்தும், மாநகராட்சியிலிருந்தும், நகராட்சிகளிலிருந்தும், ஒன்றியங்களிலிருந்தும் வரைபடங்களுக்கு எல்லாம் அனுமதி பெற்று அதை அரசுக்கு அனுப்பி 3 ஆண்டுகள், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் ஆகின்றது. நமது அரசு விரைவிலே அரசு ஊழியர்களுக்கு 6 மாத காலத்திற்குள்ளே கடனை

வழங்க முன்வருமா? எந்தெந்தத் திட்டங்களின் அடிப்படையில் அவர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு கேட்டது 94 கோடி; வழங்கப்பட்டது 47.25 கோடி. தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் சீனியாரிட்டி அடிப்படையில் வழங்குகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**39—**

## நாடகங்களுக்கு காவல் துறை அனுமதி

***2000—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், கிராமங்களில் நடத்தப்படும் நாடகங்களுக்கு காவல் துறையிடமிருந்து அனுமதி பெறும் முறையை எளிதாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளே எளிதாக உள்ளதால், இதனை மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் திருவிழாக் காலங்களில்தான் அந்த கிராமவாசிகள் நாடகங்களை நடத்துகிறார்கள். ஆனால், இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், டி.எஸ்.பி., எஸ்.பி., போன்றவர்கள் எல்லாம் கதையைப் படித்துவிட்டுத் தருகிறோம் என்று சொல்லி திருவிழா



முடிந்த பிறகுதான் அந்த நாடகத்திற்கான அனுமதியைக் கொடுக்கிறார்கள். இதை எல்லாம் நீக்கும் அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதுமட்டுமல், உண்மையே பேசக்கூடிய அரிச்சந்திர ராஜா நாடகக் கதை ஒன்று தடைப்பட்டிருக்கிறது. அதற்கு அரசு தடை விதித்திருக்கிறது. அந்தத் தடையை அரசு நீக்குமா? அதுபோல் எத்தனை நாடகங்களை கிராமங்களில் போடக் கூடாது என்று அரசு தடை விதித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு நாடகங்கள் அரங்கேற்ற சட்டம் 8-ஆம் பிரிவின்படி நாடகங்களை நடத்துகிறவர்கள் அல்லது நாடக அமைப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும். சென்னை மாநகரம் போன்ற இடங்களில் ஆணையரிடம் அனுமதி பெறவேண்டும். கதையினுடைய இரண்டு பிரதிகளை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தால் அவர் அதை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து சட்டத்திற்குப் புறம்பான கருத்துக்கள் ஏதாவது இடம் பெற்றிருக்குமானால், ஆட்சேபகரமான கருத்துக்கள் இடம் பெற்றிருக்குமானால் அவற்றை மாற்றம் செய்யச் சொல்லுவார். மற்றபடி ஆட்சேபணை ஏதும் இல்லை என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அனுமதி வழங்கி விடுகிறார்கள். எனவே, அனுமதி வழங்குவதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆகவே இந்த நடைமுறையையே தொடர்ந்து பின்பற்றலாம் என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையைத் தடை செய்வதுபோல் அரிச்சந்திரா நாடகத்தைத் தடை செய்து இருப்பதாக திரு. தாமரைக்கனி அவர்கள் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். உண்மையைத் தடை செய்வதற்காக அரிச்சந்திரா நாடகம் தடை செய்யப்படவில்லை. சில இடங்களில், அந்த நாடகத்தினுடைய இறுதிப் பகுதியில் வருகின்ற மயான காண்டத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் இழிவுபடுத்தப்படுவதாகக் கருதப்படுகின்ற காரணத்தால் அந்தக் காட்சி இடம்பெறக் கூடாது என்று சொல்லப்படுகிறது. அந்தக் காட்சி இடம்பெற்றாலும், குறிப்பிட்ட சமுதாயத்தை இழிவுபடுத்துகின்ற வசனங்களோ அல்லது பாடல்களோ இல்லாமல் பார்த்துக் கொள்வதுதான் அரசினுடைய கடமையே தவிர, முழு நாடகத்தையும் தடை செய்வதாக எண்ணிக்கொள்ளக் கூடாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நாடகமே தடை செய்யப்பட்டிருக்கிறது. இன்னொரு முறை அதைப் பரிசீலனை செய்யுங்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன். இதைப்போல வேறு ஏதாவது நாடகங்களுக்குக் தடை விதிக்கப்பட்டிருக்கிறதா? அதுமட்டுமல்லாமல், சாதி வெறியை, மத வெறியை, தீவிரவாதத்தைத் தூண்டுகிற அளவில் நாடகம் நடித்து அதை கேசட்டாக பதிவு செய்து கிராமப்புறங்களில் இரவு நேரங்களில் போடுகிறார்கள். இது போலீசுக்கும் தெரியும். ஆனால் அதைக் கைப்பற்றமாட்டார்கள்; பறிமுதல் செய்யமாட்டார்கள். அப்படி ஏதாவது பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதா? பறிமுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்கிற காரணத்தால் நானே பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அப்படிப்பட்ட சாதி வெறியை, மத வெறிதை, தூண்டக்கூடிய அத்தகைய நிகழ்ச்சிகள் அடங்கிய டேப்புகள் எங்காவது போடப்பட்டால் அல்லது ஒளிப்பேழைகள் எங்காவது போடப்பட்டால் அதைப்பற்றித் தனியாக அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் தெரிவிப்பார்களேயானால் உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத். மாணபுமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**40—**

## சுற்றுலாத் துறையின் மூலம் அந்நியச் செலாவணி

***7901—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996-97-ல் சுற்றுலாத் துறையின் மூலம் தமிழக அரசுக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி எவ்வளவு?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





1996-ஆம் ஆண்டு சுற்றுலா மூலம் ரிசர்வ் வங்கியில் கணக்கிடப்பட்டு அகில இந்திய அளவில் கிடைத்துள்ள அந்நியச் செலாவணி ரூபாய் 10061.76 கோடி என மத்திய அரசு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. சுற்றுலாத் துறை மூலம் தமிழக அரசிற்கு மட்டுமின்றி எந்த மாநிலத்திற்கும் அந்நியச் செலாவணி தனியாகக் கணக்கிட்டு அறிக்கை வெளியிடுவதில்லை. எனவே, தமிழக அரசிற்கு என கிடைத்த அந்நியச் செலாவணியைத் தனியாக மதிப்பிட முடியாது.

*முற்பகல் 11-00*

**திரு. ஜே. எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 4 கோடை வாசஸ்தலங்கள் இருக்கின்றன. ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி போன்ற இடங்கள் இருக்கின்றன. ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்கள் அந்நிய நாட்டு டூரிஸ்ட் கைடிலே வருகின்றன. அதே போன்று அயல் நாட்டிலே இருக்கின்ற சாதாரண மக்கள் Affordable Rate-லே 10 டாலர், 15 டாலர் என்ற அளவில் தங்கக் கூடிய இடங்கள் ஏலகிரி மலையிலே இருக்கின்றன. அங்கே அவர்கள் வந்து தங்கலாம்; ஏற்காட்டிலே நிறைய ஹோட்டல்கள் இருக்கின்றன, அங்கே வந்து தங்கலாம் என்பதை சுற்றுலாத் துறை மூலமாக விளம்பரங்களை அயல்நாட்டு கைடுகளிலே தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய துணை வினாவிற்கும், மூல வினாவிற்கும் தொடர்பேயில்லையே! சுற்றுலாத் துறை மூலமாக மாநில அரசிற்கு அந்நியச் செலாவணி கிடைப்பது பற்றி தனியாகக் கணக்கு இல்லை என்று அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். அதுதான் முக்கியமான பதில். அந்நிய நாட்டிலிருந்து வருகிறவர்கள் இங்கே ரூபாயாக மாற்றித்தான் செலவு செய்கிறார்கள். அது நம்முடைய அரசுக்குச் சேருவதில்லை. உட்காருங்கள்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 3. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

### 19-3-1998-ஆம் தேதி நடைபெறும் என அச்சுறுத்தப்பட்ட வெடிகுண்டுச் சம்பவங்கள் நிகழாமல் விழிப்புடன் செயலாற்றிய காவல் துறையினருக்குப் பாராட்டும் ரொக்கப் பரிசு அளித்தலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு அளிக்க விரும்புகிறார்கள். அதற்கு அனுமதி அளிக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன் கீழ் இந்த அறிக்கையை தங்கள் அனுமதியோடு அவையின் முன் வைக்கின்றேன்:

கோவை குண்டு வெடிப்பு தொடர்பாக அரசின் சார்பில் மின்னல் வேக நடவடிக்கை எடுத்ததற்குப் பெரும் ஒத்துழைப்பு தந்து கடமையாற்றியுள்ள காவல் துறையினர் தங்கள் உயிரினையும் பொருட்படுத்தாமல் உறக்கமின்றி, ஓய்வு சிறிது கூட இல்லாமல் விழிப்புடன் இருந்து வன்முறைத் தீவிரவாதிகளைப் பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தியும், கைது செய்தும், வெடிக்க இருந்த குண்டுகளைக் கைப்பற்றியும் அதிலும் குறிப்பாக நேற்று 19-ம் தேதி அன்று நடைபெறும் என்று அச்சுறுத்தப்பட்ட வெடிகுண்டுச் சம்பவங்கள் எங்கும் நடைபெறாமல் விழிப்போடு இருந்து, பொது மக்களின் உயிரையும் உடைமையையும், பொதுச் சொத்துக்களையும் காப்பாற்றியமைக்காகக் காவல் துறையினருக்கு இந்த அரசும், பொது மக்களும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பதை உணர்வுப் பூர்வமாக அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்திலும் இதே விழிப்புணர்வுடன் காவல் துறை பணியாற்றும் என்ற நம்பிக்கையுடனும், பணியாற்ற வேண்டுமென்ற ஆவலுடனும் காவல் துறையில் சாதாரணக் காவலர் முதல் டி.ஜி.பி. வரையுள்ள 86000-க்கும் மேற்பட்டவர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு அளிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து..

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையைக் காண்பிக்கின்றீர்கள், என்னவென்று கேட்கிறேன். ஒழுங்குப் பிரச்சினையா? விதி 110-லே விவாதம் கிடையாது. ஒழுங்குப் பிரச்சினை என்றால் கேளுங்கள்.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 145 கிலோ உள்ள வெடி மருந்துகளை சென்னை கோடம்பாக்கத்திற்கு சில பேர் கொண்டு வந்ததாகவும் அதில் 45 கிலோ கைப்பற்றப்பட்டதாகவும் இன்னும் 100 கிலோ வெடிகுண்டோடு சங்கீதா என்கின்ற ஆயிஷா போய் இருக்கிறாள் இதனால் தமிழ்நாட்டிற்கே ஆபத்து என்றும் சொன்னார்கள். இன்னும் நான்கு தீவிரவாதிகளைப் பிடிக்கவில்லை என்றும் சொன்னார்கள். அவர்களாலே ஆபத்து இருக்கிறதே, எப்போது பிடிக்கப் போகிறார்கள்? என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து அந்த முயற்சிகள் காவல் துறையால் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு, பொது மக்களுடைய ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய ஒத்துழைப்பும் கோரப்படுகிறது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"

எனக் கோருகிறேன்.

[1998 மார்ச் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்., டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் துவக்கி வைப்பார்கள்.

(முற்பகல் 11-05

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1998-ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரை மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, தமிழகத்தைச் சார்ந்த மாமேதை, விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கும், இசைமேதை டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், மராட்டிய முன்னாள் ஆளுநரும், அரசியல் மேதையுமான திரு சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டதற்குப் பாராட்டு தெரிவித்துள்ளதற்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 மார்ச் 20] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அதேபோல், ஆளுநர் உரையில் 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் ரூ. 24.61 கோடி மதிப்பீட்டில் 3,658 பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், 'அண்ணா மறுமலர்ச்சி' திட்டத்தின் கீழ் ரூ.224 கோடி அளவில் 33,282 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருப்பதற்கு நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் நெல்லுக்கு ஆதரவு விலையாக 35/- ரூபாய் அதிகப்படுத்தியிருக்கிறீர்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இந்தநேரத்தில், உங்கள் மத்தியில் ஒரு கோரிக்கையும் வைக்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு ஆகிய இரண்டு தாலுக்காக்களிலும் அதிக அளவு ரப்பர் உற்பத்தி செய்யப்படுகிறது. ரப்பரின் விலை ரூபாய் 67 வரை சென்றது. இன்றைக்கு 22 ரூபாய் 23 ரூபாய் என்ற அளவுக்கு விலை கீழே வந்துவிட்ட சூழ்நிலையில், கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெறும் கேரள மாநிலத்தில் ரப்பர் விலை விழ்ச்சி ஏற்பட்டவுடன் அதற்கு ஈடாக ஒரு கிலோவுக்கு ரூ.45 என்று விலையை நிர்ணயித்து ரப்பரைக் கொள்முதல் செய்ததன் அடிப்படையில் விவசாயிகள் சிரமப்படாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். எனவே, நமது அரசும் ரப்பர் விலை வீழ்ச்சி அடைந்திருக்கின்ற இந்த நேரத்தில், விவசாய மக்களைப் பாதுகாக்கும் முகத்தான்—பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள்; முதலாளிகள் இருக்கிறார்கள்—இவர்கள் இருவரையும் பாதுகாக்கின்ற முகத்தான் கேரளாவைப் போல் ரப்பரின் விலையை நிர்ணயம் செய்ய—ரூ.23 என்று சொன்னால் அது அவர்களுக்குக் கட்டுப்படி—ஆகவே ஆகாது. ரப்பர் வாரியம் ஒன்று அமைத்து 45 ரூபாய் என்ற அளவுக்கு ரப்பரைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 1,416 கோடி ரூபாயில் தமிழகம் முழுவதும் சாலைகளும், பாலங்களும் அமைப்பதற்கு அரசு உத்தேசித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், இந்தத் திட்டப் பணிகள் அறிவிக்கப்படுகின்ற நேரத்தில், தமிழ்நாடு கட்டுமானப் பிரிவு என்ற அமைப்பின் கீழ் பெருவாரியான பணிகளைக் கொடுத்து விடுகின்றீர்கள். சுமார் ஆறு மாதத்தில் முடிக்கப்பட வேண்டிய

பணியினை மூன்று ஆண்டுகளானாலும் அவர்கள் செய்து முடிப்பது கிடையாது. எனவே, தரமான கான்ட்ராக்டர்களிடம் பணிகளை ஒப்படைத்து, உடனடியாகச் செய்து முடிப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் நீங்கள் அறிவித்த திட்டங்களை நிறைவேற்றிய பெருமை உங்களுக்குக் கிடைக்கும் என்றும் சொல்லிக் கொள்கிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் எஸ்.டி.எம். அங்காடி என்ற பகுதியில் ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் பாலம் ஒன்று அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, டெண்டரும் முடிவாகி, தமிழ்நாடு கட்டுமானப் பிரிவிற்கு அப்பணி கொடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஆகிவிட்ட நிலையிலும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. மக்கள் இரண்டு பக்கமும் செல்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை உள்ளது. எனவே, அரசு அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த 22 மாதங்களில் ரூ.15,576 கோடி வெளிநாட்டு முதலீடுகள் நமது மாநிலத்திற்கு வந்து சேர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்தில் நம்முடைய மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற பெரிய தொழிற்சாலைகளையும் மூடி விடாமல் நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் உங்கள் மத்தியிலே வைக்க விரும்புகிறேன்.

மிகச் செழிப்பான கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு பால் வார்க்கும் முகத்தான் ஒரு திட்டத்தைத் துவங்கி இருக்கிறீர்கள். குளச்சல் துறைமுகத் திட்டத்தை அறிவித்து, அதை மேம்பாடு செய்வோம் என்று சொல்லப்பட்டுள்ளதை நான் உளப்பூர்வமாக, இதயபூர்வமாக, எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி நல்ல திட்டங்களை அறிவித்திருக்கின்ற நேரத்தில், நடந்து முடிந்த தேர்தலிலே சருக்கலை நாம் சந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. தேர்தலிலே நமது கூட்டணி வெற்றி வாய்ப்பை இழந்தாலும், வென்றவர்கள் கொக்கரிக்கின்ற நிலையைப் பார்க்கின்ற போது மிகவும் வேதனையாக இருக்கிறது. அவர்கள் வாங்கிய வாக்குகள் 1 கோடியே 22 இலட்சம். நாம் பெற்றிருப்பது ஒரு கோடியே ஒன்பது இலட்சம் வாக்குகள். கிட்டத்தட்ட 13 இலட்சம் வாக்குகள்தான்



நம்மைவிட அவர்கள் அதிகம் பெற்றிருக்கிறார்கள். அவ்வளவுதான். அதிலும்கூட, இன்னொரு கணக்கை நாம் சொல்வோம் என்றால், 1996ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலே 66.92 சதவீதம் வாக்குகளை நாம் பெற்றிருக்கிறோம். இப்போது பதிவான வாக்குகள் 60 சதவீதம். இதிலேயிருந்து எனக்குத் தோன்றுவது என்னவென்றால், நம்முடைய தோல்வி நம்மேல் ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக இருக்க முடியாது என்று நம்புகிறேன். எப்படியும் இவர்கள் ஜெயித்துவிடுவார்கள் என்கின்ற நம்பிக்கையில் கிட்டத்தட்ட 6 சதவீத மக்கள் வாக்களிக்காமல் இருந்திருக்கிறார்கள். இன்னும் ஒன்று, கடந்த முறை ** தண்டிக்க வேண்டுமென்று வாக்களித்த பிறகும், இவர்கள் தண்டிக்கவில்லையே என்ற கருத்தின் அடிப்படையாகவும் வாக்களிக்காமல் இருந்திருக்கக்கூடும் என்பது என்னுடைய கருத்து.

முற்பகல் 11-10

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதை வைத்துச் சொல்கிறார் ? ஆதாரம் இருக்கிறதா..

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் இரண்டு பேரும் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். வாய்ப்பு வரும்போது பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக 6 சதவீத மக்கள் அதிகமாக நமக்கு வாக்களித்திருந்தால், இப்படிப்பட்ட தோல்விகள் வந்திருக்காது என்று கருதுகிறேன்....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் என்ன ஆதாரத்தோடு பேசுகிறார்? நாங்கள் பேசினால் ஆதாரம் கேட்கிறீர்கள். ஆதாரம் கொடுத்துவிட்டுத்தான் பேசுகிறார்களா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்களில் சொன்னது மாத்திரம் அல்ல, உறுப்பினர் தாமரைக்கனிக்குத் தேவை என்றால் தேர்தல் கமிஷனிடம் சென்று புள்ளி விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுப் பேசுகிறார்களா? ஆதாரத்தைக் கொடுக்கச் சொல்லுங்கள்.....

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் சபாநாயகரிடம்தான் கொடுக்க வேண்டும், தாமரைக்கனியிடம் அல்ல. எங்களைப் பொறுத்தவரையில், **தண்டிக்க இந்த அரசு தயங்குகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசியவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்கம் செய்யுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடித்த பிறகு, நீங்கள் வாய்ப்புக் கேளுங்கள், கொடுக்கிறேன். அப்போது பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் இருக்கையில் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. குமாரதாஸ் பேசி முடிக்கட்டும். திரு. தாமரைக்கனி, உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கடந்த கால ஆட்சியிலே ஊழல் நடைபெற்றது என்பது போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துவது என்பதில் தவறு இல்லை. ஆனால் ஊழல் என்பதோடு ** என்று பயன்படுத்திய சொற்றொடரை மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்களும் அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிடுவதுதான் இந்த அவையின் பண்புக்கும் மரபுக்கும் ஏற்றதாக இருக்கும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் கேட்கிறார்கள். ஸ்பிக் ஊழல் பற்றி நண்பர் படித்திருக்க மாட்டாரா? அந்தத் தீர்ப்பைப் பற்றித் தெரியாதா? சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்களே, அது தெரியாதா?

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூப்பனார் 1,500 கோடி ரூபாய் அளவில் பேங்கில் கொள்ளையடித்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி இப்படி வரிக்கு வரி எழுந்து நீங்கள் பேசக் கூடாது. இருக்கையில் உட்காருங்கள். அவைத் தலைவர் உட்காரச் சொன்னால் உறுப்பினர் உட்கார வேண்டும். திரு. குமாரதாஸ் தொடர்ந்து பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் மீது எந்தவித வழக்குகளும், கிடையாது. தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஏன்யா, தகுதியில்லாதவர்களுக்கு எல்லாம் லோன் கொடுக்கவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "ஏன்யா" போன்ற வார்த்தைகளையும் ஒருமையிலும் அவையில் பேசக்கூடாது. திரு. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியன் வங்கியில் முன்னாள் முதலமைச்சர் கடன் வாங்கியிருக்கிறார். அவர் தகுதியில்லாதவர் என்று உறுப்பினர் சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் கருப்பையா மூப்பனார் பரிந்துரை செய்த லிஸ்டில் எங்கள் புரட்சித் தலைவி வருகிறார்களா? அவர்கள் தகுதி உள்ளவர்களுக்குத்தான், பார்த்து கடன் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடன் கொடுக்கும்போது தகுதி உள்ளவரா, இல்லையா என்பது பற்றி பாங்க் மேனேஜர்

பார்த்துக் கொள்வார். நீங்கள் உட்காருங்கள். திரு. குமாரதாஸ், ஆளுநர் உரை பற்றி மட்டும் பேசுங்கள். திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். அவையில் இல்லாதவரைப் பற்றிப், பேசக் கூடாது. அவைக்கு இடையூறு செய்யக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியன் வங்கி பற்றி எந்தவிதமான வழக்குகளும் தொடரப்படவில்லை; யார் மீதும் குற்றம் சாட்டப்படவில்லை. பத்திரிகையில் வருகின்ற ஹேசியங்களை வைத்து நாம் இங்கே விவாதம் செய்வது அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேசும் அதே நேரத்தில், சில நடப்புகளை நான் சொல்லாமல் போனால் அது சரிப்பட்டு வராது. அதனால் கொஞ்சம் லீனியன்ட்டாக எனக்கு அனுமதி கொடுங்கள். இதிலே மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள், வங்கியிலே பணம் வாங்கவில்லை என்றால், வங்கிகளுக்கே பணம் கொடுக்கக்கூடிய அளவுக்கு அவர்களிடம் வசதி இருக்கிறது. அதனால் அவர்கள் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது. அது ஒருபக்கம் இருந்தாலும்....

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் தானே பேசுகிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக் கொண்டு இருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். திரு. குமாரதாஸ், நீங்கள் நேராக இந்த இருக்கையைப் பார்த்துப் பேசுகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இல்லை, இல்லை. நான் உங்களைப் பார்த்துத்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இப்போது புதிய மந்திரிசபை மத்தியிலே பதவி ஏற்று இருக்கிறது. அந்த மந்திரிசபையில் முன்னாள் சபாநாயகரைப்பற்றி, அவர்கள் கூட்டணியில் இருக்கக்கூடிய



சுப்பிரமணிய சுவாமி- அகில இந்திய ஜோதிடர் என்று வர்ணிக்கப்பட்ட சுப்பிரமணிய சுவாமி என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? ** மந்திரி பதவி கொடுத்து இருப்பதாக இன்றைக்குப் பத்திரிகைச் செய்தி; இதை நான் சொல்லவில்லை; அவர்களுடைய கூட்டணியில் இருக்கக்கூடியவர்களே சொல்கிறார்கள். ** என்று (சிரிப்பு)

**திரு. இரா. தாமரைக்கனி;** துணைத் தலைவர் அவர்களே . . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சுப்பிரமணிய சுவாமியைப் பற்றி......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை அனுமதிப்பதும் அனுமதிக்காததும் என்னுடைய உரிமை; உட்காருங்கள்; அவர் என்ன சொன்னார்?

**திரு. இரா. தாமரைக்கனி:** சபையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசலாமா? உங்களுக்குத் தோதாக இருந்தால் பேச என்கிறீர்கள். மத்திய அமைச்சரைப் பற்றிப் பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** முறைகேடாகப் பேசினால், நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். மத்திய மந்திரியைப் பற்றி எப்படிப் பேசலாம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், முதலில் திரு. குமாரதாஸைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு) அவராக அதைச் சொல்லவில்லை; சுப்பிரமணிய சுவாமி சொன்னார் என்றுதான் சொல்லி இருக்கிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது, பார்த்துக்கொள்ளலாம்; உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, தயவுசெய்து உட்காருங்கள்; சபையை நடத்த வேண்டும். இந்தமாதிரி அடிக்கடி எழுந்து இடையூறு செய்தால் எப்படி? சபையை ஒழுங்காக நடத்த வேண்டுமல்லவா? நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர், அனுபவம் வாய்ந்தவர்; (சிரிப்பு) உட்காருங்கள்; உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 மார்ச் 20

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபையில் இல்லாதவரைப் பற்றிப் பேசக் கூடாது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை ஆரம்பித்து வைத்ததே நீங்கள் தானே, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய மந்திரியைப் பற்றிப் பேசலாமா? அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று நாமே பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்; நேரமாகிறது. திரு. குமாரதாஸ், நீங்கள் பேசி முடியுங்கள்... (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சுவாமி சொன்னதாக வந்திருப்பது என்னவென்றால், சேடப்பட்டி முத்தையா மீது இருக்கின்ற வழக்கு.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் அவரும் சொன்னார்; வேறு ஒன்றும் சொல்லவில்லை; உட்காருங்கள். (சிரிப்பு) அதோடு போதும்; உட்காருங்கள், திரு. குமாரதாஸ், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** துணைத் தலைவர் அவர்களே, பேசுகிறேன். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மைக்கைப் பிடித்துக் கொண்டு திசைமாறி, இந்தமாதிரிப் பேசக் கூடாது; உட்காருங்கள் என்று சொன்னால் உட்கார வேண்டும்: இரண்டு பேரும் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நீக்கி விடுங்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மார்ச் 20]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. குமாரதாஸ் பேசியதையும் தாங்கள் இங்கே அனுமதித்தீர்கள். அதற்கு நம்முடைய திரு. சுந்தரம் அவர்கள் விளக்கம் அளிப்பதற்கும் அனுமதித்து இருக்கிறீர்கள். ஆகவே, பேச்சும் விளக்கமும் சரிக்குச் சரியாகிவிட்டது. இவை இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கலாம். இத்துடன் குமாரதாஸ் அவர்கள் வேறு திசைக்குச் செல்வது நல்லது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் உட்கார வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்; உட்காருங்கள்; முதலில் உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல நமது மரியாதைக்குரிய வாஜ்பாய் அவர்கள் இப்போது பாரதத்தின் பிரதமராகப் பொறுப்பேற்று இருக்கிறார்; மனம் நிறைந்த வாழ்த்துக்கள்; அதிலே மாற்றுக் கருத்து ஒன்றும் கிடையாது. பிரதமராக ஆகிவிட்டார். இதிலே என்ன சிக்கல் என்றால், அவருக்கு ஒரு அட்வைஸ், ** (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதைப்பற்றி திரு. வாஜ்பாய்தான் கவலைப்பட வேண்டும். நீங்கள் முதலில் சப்ஜெட்டுக்கு வாருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே யாரையும் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன் அல்லவா? திரு. குமாரதாஸ், பேசுங்கள்.

முற்பகல் 11-20

**டாக்டர் தே. குமாரதாஸ் :**** தேர்தல் முடிந்துவிட்டது. கூட்டணித் தலைவர்களுடைய கர்மம் முடிந்து விட்டது. (குறுக்கீடு) நான் எண்ணிப் பார்க்கிறேன். இப்படிப்பட்ட நினைவுகளை நான் இந்தச் சபையிலே கூறுவதற்குக் காரணங்கள் உண்டு. தெரிந்தவர்கள் தெரிந்து கொள்ளட்டும். புரியாதவர்களை விட்டு விடுகிறேன். ஆகவே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தேர்தலும் நடைபெற்று, மத்தியிலே ஆட்சிக்கு வந்தவுடன் இங்கே கலைத்துவிடுவோம் என்று சொன்னார்கள். நான் முதலிலேயே சொன்னதைப்போல, நாம் 1 கோடியே 9 லட்சம் வாக்குகள் பெற்றிருக்கிறோம். அவர்கள் 1 கோடியே 22 லட்சம் வாக்குகள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே 13 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றிருக்கிறார்கள். அப்படி என்று சொன்னால், அவர்கள் கலைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு ஒரு கோடி வாக்காளர்கள் தமிழ்நாட்டிலே கோழைகளாக இருப்பார்கள் என்று அண்ணா தி.மு.க. கருதுகிறதா என்று எனக்குப் புரியவில்லை.

**ஆகவே ஒரு நல்லாட்சி, ஒரு நேர்மையான ஆட்சி இங்கே நடந்து கொண்டிருக்கிற நேரத்தில், அதைக் கலைக்கவேண்டும் என்று ஏன் அவர்கள் அவசரப்படுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

நான் இவற்றையெல்லாம் சொன்னாலும், நம்முடைய அரசியலில் கூட அரசியல் சாணக்கியராக, பலமுறை பல்லாண்டுக்காலம் முதல்வராக, நம்முடைய கலைஞர் அவர்கள் இருந்தாலும் சில குறைகள் உள்ளன. மன்னிக்கவேண்டும். இது என்னுடைய குற்றச்சாட்டு. நடந்து முடிந்த தேர்தலில் நீங்கள் ஒரு விளம்பரம் கொடுத்தீர்கள். அந்த விளம்பரத்தில் அண்ணா தி.மு.க.-வுடைய ஆட்சியில் நடைபெற்ற வெடிகுண்டு வெடித்த சம்பவங்கள் 333 என்று சொன்னீர்கள். அதைப்போல இந்த அரசு வந்தபிறகு வெடிகுண்டுச் சம்பவங்கள் நடந்து அவற்றில் 135 பேர் இறந்தார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். நம்மைப் பொறுத்தவரையில், டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி, நமது ஆட்சி, அரசுப் பொறுப்புக்கு வருகிறபோது, 1996-ல் நடைபெற்ற ஆளுநர் உரையில் வேகமான கருத்துக்களை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். பழுதடைந்து போன காவல் துறையை, 75 சதவிகிதம் ஈரல் கெட்டுப்போன காவல் துறையைப் புதுப்பிப்பதற்காக இந்த அரசு சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று சொல்லியிருந்தீர்கள். ஆனால் இன்றைக்கும் அவை பல நிலைமைகளில் சிலபல இடங்களில் அப்படியேதான் இருக்கின்றன. இப்போது அதனுடைய வேகம் முடுக்கிவிடப்பட்ட காரணத்தால் சில இடங்களில் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனாலும் அதனுடைய வேகம் போதாது என்று நான் கருதுகிறேன். எனவே காவல் துறையினரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

D 124, 31 N98



N98.59.2

அதைப்போல கோவையில் நடைபெற்ற சம்பவங்கள். மனிதநேயம் உடையவர்கள் யாரும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தேவையில்லாத சம்பவங்கள் மூலம், மனிதநேயம் சிதறஅடிக்கப்பட்டதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது. கழிந்த முறை நான் சொன்னதைப்போல, ஒரு குழுவை அமைத்து, அதுவும் முதியவர்கள், நல்லவர்கள், வல்லவர்கள் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி, சமாதான உறவை ஏற்படுத்தும் முகத்தான் இந்த அரசு மீண்டும் ஒரு புனிதமான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். இரண்டாவதாக விவசாயிகள், தொழிலாளர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளை எல்லாம் சேர்த்து நீங்கள் கணக்கிடாதீர்கள். 5 நிமிடங்கள் கொடுங்கள். நான் பேசி விடுகிறேன்.

1969-லே, ஒரு குழுபோட்டு விவசாயிகள், தொழிலாளர்கள், வணிகர்கள், நெசவாளர்களுடைய குறைகளை, நாங்கள் களைந்ததைப் போல இப்போதும் களைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று சொன்னீர்கள். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அடுத்ததாக, குடும்ப அட்டை சமாச்சாரம். உண்மையிலேயே அது ஒரு தலைவலி பிடித்த சமாச்சாரம். ரேஷன் கார்டு என்பது இப்போது இந்திய நாட்டின் பிரஜை என்று காட்டுவதைப்போல, ஒரு அடையாள அட்டைபோல ஆகிவிட்டது. அது இல்லாமல் எங்கும் போக முடியாது. எதுவும் செய்யமுடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் அது அவசியத் தேவையாகிறது. இப்போது இளம் சிவப்பு நிற அட்டைகளும், மஞ்சள் நிற அட்டைகளும் கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அதையே காரணம் காட்டி, பல்வேறு நிலைகளில் காலதாமதம் ஏற்படுகின்றது. கடந்த தேர்தல் சமயத்தில் சரக்கு விநியோகமே சரியாக பல்வேறு பகுதிகளில் நடைபெறவில்லை. இது என்னுடைய கருத்து. எனவே அதிலே நீங்கள் முன்னுரிமை கொடுத்து உடனே வழங்கவேண்டும்.

சாலைப் பணியாளர்கள் நியமனத்தில் குலுக்கல் முறையில் ஆட்கள் எடுத்ததில் ஒரேயொரு வேடிக்கை என்னவென்றால் அத்தனை லாட்டரிகளிலும் பரிசு அடித்தது தி.மு.க.வினருக்குத்தான். தயவுசெய்து தப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது. என்னுடைய வட்டத்தில்

28448

தி.மு.கவைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் பெருவாரியாகக் கிடைத்தது. ஒரு எம்.எல்.ஏ. என்ற முறையில் பாவப்பட்டவர்களுக்கு நாங்கள் பரிந்துரை செய்வது வழக்கம். அப்படி நான் பரிந்துரைத்ததில் 2-3 பேருக்குத்தான் கிடைத்தது. பாக்கி எல்லாவற்றையும் பார்த்தால், அவர்களுக்குத்தான் கிடைத்தது. ஆகவே இது ஒரு நிறைவை ஏற்படுத்தவில்லை. எங்கள் கட்சிக்காரர்களுக்கு வேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு கட்சியில்தானா பொதுமக்கள் இருக்கிறார்கள்? அதை நீங்கள் பகிர்ந்து கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை. அப்படிக் கொடுப்பதாக இருந்தால் எங்களுக்கும் சரிபங்கு கொடுக்கவேண்டும்.

*முற்பகல் 11-25*

பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். கொடுப்போம் என்று கடந்த ஆளுநர் உரையில் சொல்லி இருந்தீர்கள். அதாவது, மது அருந்தக்கூடாது, நாட்டிலே நல்ல திட்டங்களை பெண்கள் பரப்ப வேண்டும், அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும், 1,000 பேரை வேலையில் அமர்த்துவேன் என்று சொன்னீர்கள். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே இவற்றை நீங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூட்டுறவு சங்கத் தேர்தல் முடிந்தாகி விட்டது. உள்ளாட்சி அமைப்புகளிலே இருக்கிற பஞ்சாயத்து பிரசிடெண்ட், யூனியன் சேர்மேன், கவுன்சிலர்ஸ், இவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று அவர்களுகே தெரியவில்லை; என்ன செய்வது என்று புரியவில்லை. இவர்கள் சொன்னால் மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் காதிலே போட்டுக்கொள்வதில்லை. எனவே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலையாய இலட்சியம் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறவர்கள் இதுவரையில் இன்னின்ன அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை; இதைத் கொடுக்க வேண்டும் என்று கமிட்டிக்கும் அனுப்பவில்லை. எவற்றைக் கொடுக்க வேண்டும் என்று நேரிலும் சொல்லவில்லை தயவுசெய்து, இப்போதுகூட அப்படி நீங்கள் விரும்புவது சரியாக இருந்தால் பரிசிலித்து, கமிட்டியிலே பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம்; நீங்களும் சொல்லலாம்.



**டாக்டர் தே. குமாரதாஸ்:** பொதுவாக, இப்போது பஞ்சாயத்து யூனியனிலே, உள்ளாட்சி ஒன்றியப் பெருந்தலைவர் ஒரு பணியைக் குறிப்பிட்டு, இதற்கு எஸ்டிமேட் எடுத்துச் செய்ய வேண்டும் என்று சொன்னால், அதற்குப் பிறகு, அது புராஜக்ட் ஆபீஸரிடம் போகிறது. அவர் இதைச் செய்யலாம், செய்ய முடியாது என்று முடிவு எடுக்கிறார். அதற்கு அடுத்தபடியாக கலெக்டரிடம் சென்று, இதை எடுத்துக்கொள்ளலாம், அல்லது எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லி, ஜனநாயக அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஊராட்சி ஒன்றியத்தின் உறுப்பினர் செய்யக்கூடிய பரிந்துரை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தடை செய்யப்படுகிறது. ஆகவே ஜனநாயகத்தின் அடிப்படையிலே தேர்வு செய்யப்பட்டு, மேலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வேலையைச் செய்வதற்கு அனுமதி அளிக்க அவர்களுக்கு உரிமை இருக்கலாம். ஆனால் Project ஆனது technically possible or feasible என்று அறிக்கை கொடுப்பதற்கு technical men தான் சாங்ஷன் செய்ய முடியும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே கருத்து வேறுபாடு கொள்கிறேன். ஏன் என்று சொன்னால், அந்தப் பகுதிக்குப் போகும்போது, மக்கள் கேட்பது, அங்கு சாலை வேண்டும், இணைப்புப் பாலம் போடுங்கள் என்று சொல்கிறார்கள். அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது ஜனநாயக அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினருடைய பொறுப்பு... அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று சொல்கிறாரே தவிர, technical feasibility இல்லை என்று நீங்கள் மறுத்து விட்டால் அவர்கள் என்ன செய்ய முடியும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. உறுப்பினர் சொல்கிற அந்தச் சாலையைப் போட வேண்டும் என்று சொன்னால், அதைப் போடுவதற்குக்கூட,

அந்தச் சாலையின் அகலம் என்ன, நீளம் என்ன, எத்தனை மீட்டர் போட வேண்டும், எவ்வளவு செலவு ஆகும்., அதற்கு எவ்வளவு ஜல்லி ஸ்டாக் வைக்க வேண்டும் என்ற கணக்கு எல்லாம், அவர்கள்தான் சொல்ல வேண்டும். சாலை போடுவதில் தவறு இல்லை, ஆனால் அதற்கு வேண்டிய technical formula-வைக் கொடுக்க வேண்டியது அதிகாரிகள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றை கருத்துக்காகத் தெரிவிக்கிறேன். இவ்வளவு இருந்தும் தற்போது ஒன்றியங்களில் எடுத்திருக்கிற பணிகளில் 90% இருந்தாலும்கூட பரவாயில்லை என்று தெரிவித்தும் 50% 45% கற்களை சேமித்து வைத்து, அதைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து, தடுத்து நிறுத்தப்பட்டு, கற்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிகிற அளவுக்கு, சல்லடை வைத்து சலிக்கிற அளவுக்கு நிலைமை வளர்ந்து இருக்கிறது. இதை, டெக்னிக்கல் பற்றி புரியாதவர்களிடத்தில் விட்டு விட்டு இப்படிப்பட்ட நிர்வாகத்தை நடத்தினால் எப்படி சரி செய்யமுடியும். எத்தனை கோடி இழப்பு ஏற்படும் என்பதைத் தாங்கள் ஆய்ந்து உணர வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி; உண்மையும் அதுதான். நிலைமை எனக்குப் புரிகிறது. நீங்கள் டெக்னிக்கல் சைடில் பேசுகிறீர்கள். தாங்கள் ஒருவேளை கொஞ்சம் படித்து இருக்கலாம். ஆனால் கிராமத்தில் படிக்காதவர்களுக்கு வேண்டியது ரோடு. அவர்களுக்கு டெக்னிக்கல் பீஸிபிளிட்டி பற்றியோ, நீங்கள் கல் அரிப்பு பற்றியோ, ஜல்லி போடுவது பற்றியோ பிரச்சினை இல்லை. அவர்களுக்கு வேண்டியது பாலம். அதைச் செய்து கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாலம் கொடுக்கக்கூடாது என்று சொல்வதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை. கட்டப்பட வேண்டிய முறைப்படி, கட்ட வேண்டிய நிலையில் இருக்கிறதா என்பதைப் பரிசீலிக்கிற உரிமை அவர்களுக்கு உண்டு.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப் பரிசீலித்து முடித்துக் கொடுத்து விட்டால் போதும்; அதுதானே தவிர, அடிபட்டு விடக்கூடாது. அதேபோல....



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பாலத்தைத் தாண்டி வாருங்கள். (சிரிப்பு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத் தேர்தல் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 120 பால் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர்கள், முதலமைச்சர் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு பேசுகிறபோது அங்கே பணியாற்றுகிறவர்களுக்கு சம்பளம் குறைவாக இருந்தால் சம்பளம் அதிகப்படுத்திக் கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை என்று சொன்னார். இதிலே 61 சங்கங்கள் இருக்கின்றன. இந்த 120-லே 5 சங்கங்களைத் தவிர, பாக்கியுள்ள 115-ல், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், சி.பி.எம்., சி.பி.ஐ. சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதிலே 61 சங்கங்களிலே சம்பளம் கூட கேட்ட காரணத்தினால், கூட்டுறவுச் சட்டத்தின் விதி 81-ன் கீழ் விசாரணை கமிஷன் என்று போட்டு இருக்கிறார்கள். 82-லே ஆய்வு என்று சொல்லி சங்கத்தினுடைய தேர்வு சட்டத்தை ரத்து செய்வோம் என்று மிரட்டுகிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக..

முற்பகல் 11-30

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் அதன் நடைமுறை மூலதனத்தில் சதவீதத்திற்கு மிகாமல் சம்பளங்கள் வழங்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது.

அப்படி இரண்டு சதவீதத்திற்கு மேல் வழங்கவேண்டுமென்றால், தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அந்தச் சங்கம் லாபத்தில் இயங்குமானால், இணைப் பதிவாளர் அனுமதியோடு கூடுதலாகப் பணியாளர்களை நியமித்துக் கொள்ளலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கு, அவர்களே ஆட்களை நியமித்துக்கொள்ளவும், அவர்களே, கட்டடங்களைக் கட்டிக் கொள்வதற்கு அனுமதியும், அதற்குரிய பணத்தையும் தந்திருக்கிறார்கள். ஒரு தலைவர் கூட்டுறவுச் சங்கத்திலே வந்து அமர்ந்துகொண்டு 4 பேரை உடனடியாக வேலைக்கு அமர்த்திக்கொள்வதற்கும், அங்கே

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உடனடியாக அவர்கள் நினைத்தபோது சம்பளத்தை உயர்த்திக்கொள்வதற்கும் இந்த அரசு எப்படி அனுமதி வழங்கவேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கங்களிலே இருக்கிற தலைவர்கள் அதனுடைய வரவுசெலவைப் பார்த்து, வருகின்ற நிதியிலே சம்பளத்தைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்கின்ற காரணத்தாலேதான் சம்பளத்தை *அதிகப்படுத்திக் கொடுக்கிறார். *அதிகப்படுத்தி கொடுத்ததைத் தவறு என்று சொல்லி.....(குறுக்கீடு)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பளத்தைப் பற்றிப் பேசும்போது ஒரு சொற்றொடரை அடிக்கடி மாண்புமிகு உறுப்பினர் பயன்படுத்துகிறார். அதற்குப் பதிலாக 'அதிகப்படுத்திக் கொடுக்கிறார்' என்று மாற்றிக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'அதிகப்படுத்திக்' கொடுப்பதாக மாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் இதோடு முடித்துக்கொள்ளுங்கள். அதிக நேரமாகிவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரி, முடித்துக்கொள்கிறேன். தாங்கள் சொன்னவாறு மாற்றிக்கொள்கிறேன்.

அதேபோல், மின்சார வாரியத்தைப் பொறுத்தவரைக்கும், தேவையான மழை பெய்திருக்கிறது. நிலக்கரி அதிகமாகக் கையிருப்பில் இருக்கிறது. இவை இரண்டும் இருந்த பிறகும்கூட, மின் வெட்டு என்பது மிக மிகக் கண்டனத்திற்குரியது. அதுவும் தேர்வுகள் வரக்கூடிய நேரம். பிள்ளைகள் எல்லாம் இரவில்தான் படிப்பார்கள். அந்தநேரத்தில் போய் நீங்கள் மின் வெட்டை அறிவிப்பீர்கள் என்று சொன்னால், அரசாங்கத்திற்குத்தானே கெட்ட பெயர். எனவே அதை நீங்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



முடித்துவிடுகிறேன். எனவே தயவுசெய்து மின் வெட்டை அறிவிப்பதை நீங்கள் விட்டுவிடவேண்டும் என்று இந்த நல்ல சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் மின்சார வெட்டு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள். மின்சார வெட்டை அமல்படுத்தவேண்டுமென்று இந்த அரசுக்கு எந்தவிதமான கட்டாயமும் இல்லை, ஆசையும் இல்லை. ஆனால் உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் இராமகுண்டம், நெய்வேலி, கல்பாக்கம் போன்ற இடங்களிலேயிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய மின்சாரம் குறைந்துவிட்டது. 4,900 மெகாவாட் மின்சாரம் இருந்தால்தான் தமிழகம் முழுவதற்கும் நாம் மின்சாரத்தை வழங்கமுடியும். இப்போது நமக்கு 4400 மெகாவாட் மின்சாரம்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலேதான் என்ன செய்வது என்று தெரியாமல் - ஏனென்றால் நீர் மின் நிலையங்களை இப்போது முழுமையாகப் பயன்படுத்த முடியாது—கோடைக் காலத்தில் இருக்கின்ற குறைந்தபட்ச நீரை வைத்துக்கொண்டுதான் நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் நாம் கிராமப் பகுதிகளிலே காலையிலே ஒரு மணி நேரமும், மாலையிலே ஒரு மணி நேரமும்தான் மின்சாரத்தைத் தடை செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோமே தவிர, மாணவர்கள் படிக்கின்ற நேரத்தில், குறிப்பாக இரவு 6 மணிக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் மின்சாரத்தைத் தடை செய்யக் கூடாது என்று ஆணை பிறப்பித்திருக்கின்றோம். அப்படி எங்கேயாவது பிரச்சினைகள் இருக்குமேயானால், அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கிய பிரச்சினையாக இருப்பதால், அமைச்சர் சொன்னதற்கு ஒரு கருத்தை மேலும் சொல்லி, சில விளக்கங்களைப் பெற விரும்புகிறேன். சமீபத்திலே பத்திரிகையைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டில் மொத்த மின்சாரத் தேவை 4,100 'Mega watt peak demand' என்று சொன்னார்கள். அனல் மின்சாரம் மற்றும்

கல்பாக்கத்தின் மூலமாக சுமார் 3,100 மெகாவாட் அளவிற்கு உற்பத்தி கிடைக்கின்றது. புனல் மின்சாரத்தின் மூலமாக 700 மெகாவாட் கிடைக்கிறது. ஆக 3,800 மெகாவாட்தான் நமக்கு உற்பத்தி இருக்கின்றது. ஆனால் மொத்தத் தேவை 4,100 மெகாவாட். 300 மெகாவாட் நமக்கு குறையாக இருக்கின்றது. இந்த உண்மையை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த குறைபடுகின்ற மின்சாரத்தை எப்படி சமாளிக்கின்றோம் என்பதில்தான் பிரச்சினை இருக்கின்றது. நீங்கள் பத்திரிகையில் கொடுக்கக்கூடிய அறிக்கைகளில் எல்லாம் 1 மணி நேரம் மட்டும் வராது, இரண்டு மணி நேரம் மட்டும்தான் வராது. என்று சொல்கிறீர்கள். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை. திடீரென்று போகின்றது. அரை மணி நேரம் மின்சாரம் இல்லை. பிறகு அரை மணி நேரம் மின்சாரம் வருகின்றது. இது நிர்வாகத்தில் இருப்பவர்கள் செய்கின்ற கோளாறு. கண்டிப்பாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போட்டு, எப்படி பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றதோ, அதற்கு மாறாக நடக்குமேயானால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீங்கள் அறிவிப்புச் செய்யுங்கள்.

முற்பகல் 11-35

இன்னும் சிரமமான, பாதகமான ஒரு விஷயம் என்ன இருக்கிறது என்றால், இன்னும் வரக்கூடிய காலங்களில் 5,000 மெகாவாட் அளவிற்கு மின்சாரத் தேவை உயரும் என்று வேறு சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் அணைக்கட்டுகளிலே தண்ணீர் குறைந்துவிட்டால், தண்ணீர் நின்றுவிட்டால், இந்த 700 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்காது. ஆக, உற்பத்திக்கும், தேவைக்கும் 2,000 மெகாவாட் வித்தியாசம் தமிழகத்திலே சில மாதங்களிலே வரப்போகிறது. இந்த உண்மையைத் தெளிவுபடுத்தி, எப்படி சமாளிக்கப் போகின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். முன்பு மின் வாரியத் தலைவர் திரு. பி. விஜயராகவன் இருந்தபோது, இதுபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், மிகத் திறமையாக அது சமாளிக்கப்பட்டது. ஆகவே, இதில் அதிக கவனம் செலுத்தினாலன்றி நமது அரசிற்கும், தோழமைக் கட்சியாக இருக்கக்கூடிய எங்களுக்கும் நல்ல பெயர் வராது என்பதைத் தெளிவுபடுத்தி, இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப்போல, இன்றுள்ள சூழ்நிலையிலே நமக்கு பற்றாக்குறை 300 மெகாவாட்தான். அந்த 300 மெகாவாட்டை சரி செய்வதற்கு இயன்றவரையிலே நாங்கள் முயற்சித்தோம், ஆனால் முடியவில்லை. ஆகவேதான், இந்த அறிவிப்பு செய்யப்பட்டது. இருந்தாலும், தொழில் அதிபர்களுடைய கூட்டத்தை மீண்டும் கூட்டுமாறு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். தொழிலதிபர்கள் ஜெனரேட்டர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பீக் அவரிலே தங்களுடைய உற்பத்தியை நிறைவு செய்துகொள்வார்களேயானால், அதிலிருந்து நமக்கு 250 மெகாவாட் மின்சாரம் மிச்சப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள் ஓரிரு நாட்களிலேயே அந்தக் கூட்டத்தைக்—கூட்டும்படி எனக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, இந்த நிமிடம் வரையிலே நாம் தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டை அமல்படுத்தவில்லை. ஏனென்றால், தொழிற்சாலைகள் மூலமாக வருகின்ற வருமானத்திலேதான் மின்சார இலாக்கா இயங்கிக் கொண்டு இருக்கின்றது. நாம் விவசாயத்திற்கு குடிசைகளுக்கு, இவை மூலமாக 27 சதவிகிதம் மின்சாரத்தை நாம் இலவசமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 17 சதவிகிதம் ஏற்கெனவே 'Line loss' ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. மிச்சம் இருக்கக்கூடிய மின்சாரத்திற்கு, தொழிலதிபர்களை, தொழிற்சாலைகளை நம்பிதான் இந்த இலாக்கா இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதிலேயே மின்சார வெட்டை நாம் அமல்படுத்தினால், மின்சார இலாக்காவினுடைய வருமானம் குறைந்துவிடுமே என்று யோசித்துக் கொண்டு இருந்தோம். இருந்தாலும், இன்றையதினம் காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும், நானும் அதுகுறித்து கலந்து பேசி, தொழிலதிபர்களோடும் கலந்து பேசி, அவர்கள் ஜெனரேட்டர்களைப் பயன்படுத்த முடியாவிட்டால், குறைந்தபட்சம் 20 சதவிகித மின்வெட்டைத் தொழிற்சாலைகளுக்கு அமல்படுத்தலாமா என்பது குறித்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் நீண்டு கொண்டே போகிறது. நேரம் அதிகமாகிவிட்டது.

***திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான பிரச்சினை. தயவுசெய்து பேசுவதற்கு சில நிமிடம் அனுமதியுங்கள். தொழிற்சாலைகளில் இரண்டுவிதமான தொழில்கள் இருக்கின்றன. அவை பெரிய தொழிற்சாலைகள், சிறிய தொழிற்சாலைகள். High Tension உபயோகிக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு நீங்கள் மின் வெட்டைத் தைரியமாக 35 சதவிகிதம், 50 சதவிகிதம் அமல்படுத்தலாம். அதனால் அவர்களுக்குப் பாதிப்பு கிடையாது. ஏனென்றால், High Tension வைத்துத் தொழில் நடத்தக்கூடிய பெரும்பான்மையான, ஏறக்குறைய நூற்றுக்கு நூறு தொழிறசாலைகளில் நீங்கள் சொன்னதுபோல், ஜெனரேட்டர்கள் இருக்கின்றன அவர்களுக்கு இந்த மின் வெட்டை அமல்படுத்துவதினால் வருமானம் குறைந்துவிடும் என்று அதிகாரிகள் சொல்வது தவறு. ஏனென்றால், மொத்தம் நீங்கள் கொடுக்கக்கூடிய மின்சாரத்தை அவர்களுக்கும் இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் என்று நிறுத்திவிடுவீர்களேயானால், அவர்களுக்கு 100 சதவிகித மின்சாரமும் நின்றுவிடுகிறது. அதற்குப் பதிலாக 50 சதவிகித மின்வெட்டு என்று மட்டும் வைப்பீர்களேயானால், மீதமுள்ள மின்சாரத்தை அவர்கள் உபயோகித்தால், வருமானம் குறைந்து விடாது. ஆகவே, அந்தக் காரணங்களையெல்லாம் நீங்கள் பரிசீலனை செய்து High Tension இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு தைரியமாக நீங்கள் மின் வெட்டை அமல் செய்யுங்கள். அதற்கு அந்தத் ' தொழில் நடத்துபவர்கள் தடையாக இருக்க மாட்டார்கள். அதற்கு யாரும் தடை செய்ய மாட்டார்கள். ஆனால், எஞ்சியுள்ள நேரங்களில் தடையின்றி மின்சாரம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கம் என்று சொல்லிவிட்டு, சொற்பொழிவே ஆற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சுப்பராயன், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி. உங்களுக்கு நிச்சயமாக வாய்ப்புத் தருகிறேன். இப்போது உட்காருங்கள். அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) சரி, திரு. தாமரைக்கனி, நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமக்கே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. ஆனால், கேரளாவிற்குக் குறைந்த விலையில் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்லி, மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. நயினார் வந்து முதலமைச்சரைப்



பார்த்து, மின்சாரம் கொடுக்கப்படுவதாகப் பத்திரிகையிலே எல்லாம் பார்த்தோம். எத்தனை மெகாவாட் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? கொடுத்ததை நிறுத்தி விட்டீர்களா? அரபிக் கடலிலே வீணாகப் போகின்ற தண்ணீரைக்கூட அவர்கள் நமக்கு கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். நீங்கள் ஏன் இப்படித் தாரை வார்க்கிறீர்கள்?

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே இந்த மின் வெட்டு ஒரு முக்கியமான பிரச்சினை. ஆனால் மின் வெட்டு இல்லாமல் சமாளிப்பதற்குரிய வாய்ப்புகள் இல்லை என்பது நிதர்சன உண்மை. தமிழகத்தினுடைய ஆரம்ப காலத்திலிருந்தே தமிழகம் மின்சாரப் பற்றாக்குறை மாநிலமாக இருந்து வருவது. எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால் தவிர்க்க முடியாத இந்த மின் வெட்டிலேயும் நாம் மிக கவனத்தோடு கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. அகில இந்திய அளவில்கூட Line loss என்பது தமிழ்நாட்டில் தான் அதிகமாக இருக்கிறது. Line loss என்பதில் மிக அதிகமாக இருப்பது Theft என்பதுதான் உண்மை. எனவே இந்த நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு இந்தக் கட்டத்திலாவது Line loss என்பதைத் தவிர்ப்பதற்குரிய அறிவியல் பூர்வமான அணுகுமுறையை மேற்கொண்டு அதைக் குறைத்துக்கொண்டோமானால் எதிர்காலத்திலும் மின் வெட்டு இல்லாமல் செய்துகொள்ள முடியும் என்பதால் அதிக முன்னுரிமை கொடுத்து Line loss-ஐத் தவிர்க்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சொக்கர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை அரசு பரிசீலிக்கின்ற காரணத்தினால்தான் தொழிலதிபர்கள் கூட்டத்தைக் கூட்டி ஓரிரு நாட்களிலே முடிவு செய்யலாம் என்று இருக்கின்றோம். திரு. தாமரைக்கனி ஒரு வினாவை எழுப்பினார். நமக்கே பற்றாக்குறை இருக்கிறதே; ஏதோ நயினார் வந்தார்; மின்சாரம் கொடுத்ததாகச் செய்திகள் வந்ததே என்று சொன்னார். அவர்கள் கேட்டது அக்டோபர் மாதம். மழைக்காலத்திலே அவர்கள் கேட்டார்கள். மழை பெய்யாமல் தெருவிளக்குகள்கூட

எரியமுடியாத ஒரு சூழ்நிலை கேரளாவிலே இருந்த காரணத்தினாலும் கேரள மாநிலமே இருளிலே தவிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினாலும் முதலமைச்சரிடத்திலே மூன்று அமைச்சர்கள் வந்து வேண்டுகோள் வைத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த மாநிலத்தினுடைய நிலைமையைக் கருதி மனிதாபிமானத்தோடு 100 மெகாவாட் மின்சாரத்தை ஒரு மாத காலத்திற்குத்தான் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு மழை வந்துவிட்டது. இப்போது அந்தப் பிரச்சினை இல்லை.

இப்பொழுது இந்தியா முழுவதும் இந்த மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. ஏதோ தி.மு.க. ஆட்சியில் வந்துவிட்டதாக யாரும் நினைக்கக்கூடாது. கோடைக்காலம் வந்தால் தமிழ்நாட்டிலே, அது எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோதும் சரி அல்லது 1989-90-லே நாங்கள் ஆட்சியில் இருந்தபோதும் சரி, பிறகு ஜெயலலிதா அம்மையார் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, இந்த மின்சாரப் பற்றாக்குறை ஒவ்வொரு ஆண்டும் கோடைக்காலத்திலே ஏற்பட்டிருக்கிறது. அப்போது விவசாயத்திற்குப் பகலிலே 4 மணி நேரம் இரவிலே 8 மணி நேரம், என்று அறிவிக்கப்பட்டு மின்சாரத்தை நாம் விநியோகித்துக்கொண்டிருக்கிறோம். நமக்கு இருக்கிற கஷ்டம் எல்லாம் கடந்த 6, 7 ஆண்டு காலமாக ஒரே ஒரு மெகாவாட் மின்சாரம்கூட புதிதாக உற்பத்தியாகவில்லை. அதனால்தான் இந்த அளவிற்குத் தமிழகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தேவைகள் ஒரு ஆண்டுக்கு 500 மெகாவாட் மின்சாரம் அதிமாகிக்கொண்டே இருக்கிறது. புதிய தொழிற்சாலைகள் வருகின்றன, தேவை அதிகமாகிறது. ஆனால் உற்பத்தி இல்லை. இந்தச் சூழ்நிலையிலேதான் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டே நமக்குப் புதிதாக 20 Short Gestation Plant 2000 மெகாவாட்டிற்கு மின்சாரத்தைத் தயாரிக்கும் திட்டத்தை இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் அதற்குத் தேவையான நாஃப்தா என்ற அந்த எண்ணெயைக் கொடுக்க இயலாமல் ஒரு சூழ்நிலையிலே 800 மெகாவாட்டிற்குத்தான் கொடுக்க முடியும் என்று அறிவித்த காரணத்தினாலே அந்தத் தொழிற்சாலைகளை முழுமையாக ஆரம்பிக்க முடியவில்லை. ஆனால் 800 மெகாவாட்டை வைத்துக்கொண்டு இப்போது சில தொழிற்சாலைகள் ஆரம்பித்திருக்கிறோம். இன்னும் 8 மாதத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக அந்தத் தொழிற்சாலைகள் வந்துவிடும். அதுவரையிலே சமாளிப்பதற்கு இந்த அரசாங்கத்தால் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்வதற்கு நடவடிக்கைகள்





மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் Line loss அதிகம் என்று. அவர்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும். பல மாநிலங்களில் 25% 27% Line loss இருக்கிறது. நமக்கு 17%-ஆக இருந்தது. அதை இந்த ஆண்டு 16%-ஆகக் குறைத்திருக்கிறோம். இன்னமும் 1% குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். அதிலே தெஃப்ட் ஆஃப் எனர்ஜி இருக்கிறது; லைன்லாஸ் மட்டும் இல்லை என்று சொன்னார்கள். அதுவும் உண்மை. உங்களுக்குத் தெரியும். சம்பத்திலே கும்மிடிப்பூண்டியிலே ஒரு இரும்புத் தொழிற்சாலையிலே இலட்சக்கணக்கான ரூபாய் மின்சாரத்தைத் திருடினார்கள் என்பதற்காக வழக்குப் பதிவு செய்து அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே இலாக்காவை பொறுத்தவரையிலே துரிதமாக எல்லாவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மின்சாரவாரிய ஆண்டறிக்கை வரும்போது விரிவாகப் பேசலாம். டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் ஒரே வரியிலே பேசி முடிக்க வேண்டும். அதிகமான நேரம் ஆகிவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது அரசைப் பொறுத்தவரைக்கும் நமது மரியாதைக்குரிய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரி தருவதற்கான சிந்தனையோடு இருப்பதாகச் சொன்னார்கள். அதற்காக குமரி மாவட்ட ஒட்டுமொத்த மக்கள் சார்பாக அவர்களுக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவிதமான அரசு Professionlal Courses கல்லூரிகள் இல்லை. ஒட்டுமொத்தமாக கிடையாது. எனவே, இப்படி ஒரு நல்ல செய்தியை காதில் தேன் ஊற்றுவது போல் சொல்லியிருக்கிறீர்கள். அதை அறிவித்து, நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே எனக்குப் பேச வாய்ப்பு தந்தமைக்காக முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அனைத்துத் தொழில் கல்வியிலும் சேர்ந்து படிப்பதற்கு 15 சதவீத இட ஒதுக்கீடு தந்தமைக்காக தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கித் தருவதற்காக கடலாண்மைப் பயிற்சிக் கழகம் அமைத்ததற்காகவும், செய்யூர், கடலூர், கொளச்சல் ஆகிய சிறு துறைமுகங்களை மேம்பாடு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டதிலே காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் தொகுதியிலுள்ள செய்யூர் சிறு துறைமுகத்தையும் எடுத்துக்கொண்டமைக்காக தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் படிக்கின்ற பள்ளி மாணவர்களுக்கு அனைத்துத் தொழில் கல்வியிலும் படிப்பதற்கு 15 சதவீதம் இட ஒதுக்கீடு தந்திருந்தாலும் கிராமத்தில் படிக்கின்ற மாணவிகள் குறைந்தது 7-ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்புக்குள்ளாகவே பெருவாரியான மாணவிகள் தங்கள் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். ஒருசிலருக்குத் தான் பிளஸ் 2 வரை படிக்க வாய்ப்பு கிடைக்கிறது. அவ்வாறு வாய்ப்புக் கிடைக்கின்ற மாணவிகளில் கூட ஒருசிலர்தான் அந்த பிளஸ் 2 படிப்பில் தேர்ச்சி பெறுகிறார்கள். அவ்வாறு தேர்ச்சி பெற்றாலும்கூட கிராமத்தில் படிக்கின்ற அந்த மாணவிகள் பெருவாரியாக மதிப்பெண்கள் எடுக்க முடிவதில்லை. மருத்துவத் துறையில் செவிலியர் பயிற்சிக்கு, நர்ஸ் பயிற்சிக்காகத் தரப்படுகின்ற விண்ணப்பங்களில், கிராமத்தில் படிக்கக்கூடிய மாணவிகள் அந்தப் பயிற்சிக்கு விண்ணப்பித்தால் பெரும்பாலும் அவர்களுக்கு அதிலே சீட் கிடைப்பது இல்லை. நகர்ப்புறத்தில் படிக்கின்ற பள்ளி மாணவிகள் பெரும் மதிப்பெண்களை எடுக்கின்ற காரணத்தால் கிராமத்தில் இருக்கக்கூடிய மாணவிகளால் அந்த மதிப்பெண்களுக்கு ஈடாக மதிப்பெண்கள் எடுக்க முடியவில்லை. ஆகவே, அந்த செவிலியர் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட கிராமப்புறத்திலிருந்து மாணவிகள்



விண்ணப்பித்தாலே தாங்கள் அவர்களுக்கு அதற்கு அனுமதி தரவேண்டுமென்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 1,416 கோடி ரூபாயிலே உலக வங்கி திட்டத்தின் கீழே சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும், பாலங்கள் அமைப்பதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பாலங்கள் கட்டுவதற்காக தமிழகத்தில் 107 பாலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த 107 பாலங்களில் மதுராந்தகம் தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று அரிங்குணம்-தேவாதூர் கிராமத்திலே ஒரு பாலம் கட்டப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சரப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், அவர்களும், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், நானும் சேர்ந்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடம் செங்கற்பட்டு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பினாயூர் வழியாக 18 கிலோ மீட்டர் சாலையை சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தோம். அந்தச் சாலை கரும்புச் சாலையில் இருக்கின்ற காரணத்தால் நாங்கள் அந்தச் சாலையை நல்லமுறையில் சேர்த்துத் தரவேண்டுமென்று அவர்களிடத்திலே கேட்கும்போது அவர்கள் போதிய பணம் எங்களிடத்திலே இல்லை என்று தெரிவிக்கின்றார்கள். ஆகவே, இப்பொழுது எடுக்கப்பட்டுள்ள 1,416 கோடி ரூபாய் திட்டத்திலே, அந்த 18 கிலோமீட்டர் சாலையைச் சேர்த்துத் தர வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

முற்பகல் 11-50

தமிழகத்தைப் பொறுத்தவரை, விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற அதே வேளையிலே, இப்பொழுது விவசாயிகளெல்லாம் நெல் தேக்கமாக இருக்கிறது. என்று மிகவும் கவலையுடன் இருக்கிறார்கள். கருணை உள்ளம் கொண்ட தமிழக முதல்வரவர்கள் விவசாயிகளுடைய நெல் தேக்கம் இல்லாமல் விற்கப்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமத் துவக்க விழாவிற்கு வருகை தந்தபொழுது செய்யூர் தாலுக்காவிலே 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 4,000 கோடியிலே ஒரு திட்டம் வரவிருக்கிறது என்று அங்கே அறிவிப்புச் செய்து விட்டு வந்தார்கள். ஆனால் இந்த ஆளுநர் உரையிலே அதைப்பற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை. ஆகவே, வருங்காலங்களில் அந்த மின் திட்டத்தை அமல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தை பொறுத்தவரை, 25 கிராமங்களுக்குக் கிழக்குக் கடற்கரைச் சாலையிலே குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தினுடைய பணிகள் முடிவடையக் கூடிய நிலையில் இருக்கின்றன. ஆட்சிக்கு வந்த புதிதில் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைச் சந்தித்து அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவிலே வெற்றி பெறுவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் அவர்களிடத்திலே கேட்டுக் கொண்டேன். அவர்களும் அந்தத் திட்டத்திலே, கடந்த கால ஆட்சியிலே போட்ட மிகவும் மலிவான பைப்புகளை நீக்கிவிட்டு இப்பொழுது 25 கிராமங்களுக்கும் புதிய நல்ல தரமான பைப்புகளை அமைத்து ஒரு மாத காலமாக அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் சோதனை முறையிலே தண்ணீர் அனைவருக்கும் தரப்பட்டு வருகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு, அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அந்த 25 கிராமங்களுக்கும் துவக்கி வைப்பதற்காக வருகை தர வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை விடுத்து, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கவர்னர் உரையானது தமிழக மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழிக்கிணங்க 27-ஆம் தேதி தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்





அவர்கள் வழங்கவிருக்கின்ற பட்ஜெட் மிகச் சிறப்பானதாக இருக்குமென்பதற்கு ஒரு முன்னோடியாகத்தான் இந்த கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

தமிழகத்தில் ஏழை எளிய பெண்கள் ஐம்பதாயிரம் பேர்களுக்குத் திருமண உதவித் திட்டத்தின் மூலம் திருமணம் நடத்தி வைத்து ஏழை எளிய பெண்களுடைய வாழ்வில் ஒளியேற்றிய கலைஞர் அரசைப் பாராட்டுகிறேன்.

15,000 கோடி ரூபாய் தொழில் முதலீடு செய்து தமிழகத்தினுடைய பொருளாதார மேம்பாட்டிற்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற கலைஞர் அரசை மனதாரப் பாராட்டுகிறேன்.

1,400 கோடி ரூபாய் செலவில் சாலைகள், பாலங்கள் அமைக்க முற்பட்டிருக்கின்ற அரசை வரவேற்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையையும், 69 சதவீத இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையையும் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு உறுதி கொண்டிருக்கின்ற அரசின் உறுதிப்பாட்டை வரவேற்கின்றேன். ஆனால், காவிரிப் பிரச்சினையும், 69 சதவீத இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையும் தமிழக மக்களுடைய உயிர்ப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால்—அன்றொருநாள் அவசர நிலைப் பிரகடனத்தை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழக அரசைக் காவு கொடுத்தது டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதைத் தமிழக மக்கள் நன்கறிவார்கள். எனவே, தமிழக மக்களுடைய உயிர்ப் பிரச்சினையாக இருக்கின்ற காவிரிப் பிரச்சினைக்கும், 69 சதவீத இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கும்—இந்தக் கழக அரசை ஒரு கட்டத்தில் காவு கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டால் அதையும் செய்யத் தயாராக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

இன்று திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு பெரும்பான்மையை உடைய அரசாக, மெஜாரிட்டி அரசாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அப்படி முழு பலத்துடன் மெஜாரிட்டியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசை இன்று கலைக்க வேண்டுமென்று சொல்லி சில வல்லூறுகள்

வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. சில தீய சக்திகள் இன்றையதினம் அதற்காக Black Mail செய்யத் தொடங்கியிருக்கின்றன. எனவே, பாராளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி குறைவாக வெற்றி பெற்றது என்ற காரணத்தைக் காட்டி அவர்கள் இந்த அரசைக் கலைக்க வேண்டுமென்று சொல்வார்களேயானால் மகாராஷ்டிர மாநில அரசைக் கலைக்கச் சொல்லுவார்களா? இராஜஸ்தான் மாநில அரசைக் கலைக்கச் சொல்வார்களா? கோவையிலே குண்டு வெடித்துவிட்டது என்பதைக் காரணம் காட்டி தேச விரோத அரசு என்று கூறி, இந்த அரசைக் கலைக்க வேண்டுமென்று சொல்பவர்கள், பம்பாயிலே குண்டு வெடித்ததே, டெல்லியிலே குண்டு வெடித்ததே, அந்த மாநில அரசுகள்ளக் கலைக்கச் சொல்வார்களா? ஏற்கெனவே பாராளுமன்றத் தேர்தலில் 11 மாநில அரசுகளுக்கு எதிராக அங்கே மக்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அப்படியென்றால், 11 மாநில அரசுகளையும் அவர்கள் கலைக்கச் சொல்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். எனவே, தமிழகத்திலே பெரும்பான்மையோடு திகழ்ந்துகொண்டிருக்கின்ற இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைக்க முற்படுவார்களேயானால், தமிழகம் கொந்தளிக்கும், தமிழக மக்கள் கொந்தளிப்பார்கள் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்தைக் காரணம் காட்டுகிறார்கள். நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒவ்வொரு பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களிலும் யாராவது ஒரு தலைவரைக் கொலை செய்து அதன்மூலம் அனுதாப ஓட்டு பெறுகின்ற சூழ்நிலை தொடர்ந்து நடைபெற்று வருகின்ற காரணத்தினால், கோவை வெடிகுண்டு சம்பவத்திற்குப் பின்னணி என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். காரணம், 16 ஆம் தேதி தேர்தல், 14ஆம் தேதி குண்டு வெடிக்கப்பட்டிருக்கிறது. எனவே, ராஜீவ் காந்தி படுகொலை மூலம் அனுதாப ஓட்டு பெற அன்று முயற்சித்த சக்திகள் ஏன் இன்றையதினம் 14 ஆம் தேதி குண்டு வெடித்து, திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி அரசுக்கு எதிராக வாக்குகளை திசை திருப்புகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கக் கூடாது? சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கூறியதைப் போல, அதுபோன்று பரிசீலனை செய்து அரசு உண்மை நிலையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உண்மையில் காவல் துறையில் ஒரு மெத்தனப்



போக்கு தற்போது நீடித்துக்கொண்டிருப்பது வேதனை அளிக்கிறது. மூன்று இரயில்களில் அன்று குண்டு வெடிப்பு நடந்தது. காவல் துறை அன்று முதலே சுதாரித்திருக்க வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால், காவல் துறையின் மெத்தனப் போக்கால் இன்று தமிழக மக்கள் தமிழக அரசுக்கு எதிராக திசை திருப்பப்படுகின்ற போக்கு வேதனைக்குரியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்று ஜெயின் கமிஷனை நோக்கி காய்கள் நகர்த்தப்பட்டபோது அதை உளவுத் துறை தமிழக அரசுக்கு கொடுக்க வேண்டிய செய்திகளை முன்கூட்டி கொடுக்கத் தவறிவிட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தென் மாவட்டங்களில் நடைபெற்ற சாதிக் கலவரங்களில் காவல் துறை நடுநிலையோடு செயல்படவில்லை. ஒரு பிரிவினருக்குச் சாதகமாகவும், ஒரு பிரிவினருக்குச் பாதகமாகவும் செயல்பட்டுவிட்டக் காரணத்தினால், தென் மாவட்டங்களில் வாழும் தேவர் சமுதாய மக்களுக்கு எதிராக காவல் துறையின் ஓரிரு உயர் அதிகாரிகள், திட்டமிட்டுப் பழிவாங்கும் நோக்கத்தோடு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஏராளமான வழக்குகளைத் தேவர் இன மக்கள்மீது போட்டுவிட்ட காரணத்தினாலும், அதுமட்டுமல்லாமல் அவர்கள் ஜாமீனிலே வெளியே வர முடியாமல் பல மாதங்களாக கஷ்டப்படுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்ட காரணத்தினாலும், தேவர் இன மக்களை இந்த அரசுக்கு எதிராக திட்டமிட்டு திசை திருப்பிவிட்டார்கள் காவல் துறையைச் சார்ந்த ஓரிரு உயர் அதிகாரிகள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தீவிரவாதிகளைக் கண்டுபிடித்து கடுமையாக தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று விவசாயிகள் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அரிசி விலை உயர்ந்து கொண்டே போகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை நன்கு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரிசி விலை உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால், நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. என்ன பெரிய வித்தியாசம்? நெல்லிலிருந்து உமியை எடுக்கிறார்கள். நெல்லிலிருந்து உமி நீக்கப்பட்டு வருகின்ற அரிசிக்குக் கடுமையான விலை உயர்வு. ஆனால், களத்திலே வைத்திருக்கின்ற நெல்லுக்கு உரிய விலையில்லை என்கிற நிலையில் விவசாயிகள் இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். *(மணியடிக்கப்பெற்றது.)*

கரும்பிலிருந்து சாறு பிழியப்பட்டால் சர்க்கரையாகிறது. அதற்குப் பல மடங்கு விலை உயர்வு. ஆனால், விவசாயிகளுடைய கரும்புக்கு விலையில்லை என்ற காரணத்தினால், இதற்கிடையில் என்ன நடக்கிறது, என்ன மர்மம் நடைபெறுகிறது என்பதைத் தமிழக முதல்வர் அவர்கள் கண்டுபிடித்து விவசாயிகளுடைய இரத்தக் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

பஸ் கட்டணத்தை நிச்சயமாகக் குறைக்க வேண்டும். பொது விநியோகத்தை சீராக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டுமென்ற குறிப்பு இங்கே கவர்னர் உரையிலே இடம்பெறாதது வேதனை அளிக்கிறது. ஆறு தென் மாவட்ட விவசாயிகளுடைய உயிர்ப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலும், கேரள சட்டசபையிலே பேசுகின்ற பேச்சு, நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோது, பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துகின்ற அந்த நீர்மட்டப் பிரச்சினை மற்றொரு காவிரிப் பிரச்சினையாக மாறிவிடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது. *(மணியடிக்கப்பெற்றது)*

மதுரையிலே உயர்நீதி மன்றக் கிளையை இவ்வாண்டே நிறுவ வேண்டும். அவ்வாறு நிறுவுகிற பணியைத் துரிதப்படுத்த வேண்டுகிறேன். என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியிலே அசுவமா நதி அணையைக் கட்டித்தர வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, அரசு உறுதி அளித்திருக்கின்ற பட்டுநூல் நூற்பாலை, கூட்டுறவு நூற்பாலை, தொழிற்பேட்டைகள் ஆகியவற்றை உடனடியாக நிறுவி, உசிலம்பட்டி தொகுதியின் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

நண்பகல் *12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்களால் முன்மொழியப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்



திரு. பெர்னார்டு அவர்களால் வழிமொழியப்பட்டுள்ள ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகிற வாய்ப்பை அளித்தமைக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் 'சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் நடைபெற்று வருகிற அரசு என்பதை இந்த ஆளுநர் உரை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. எனது உரையைத் துவக்குவதற்கு முன்னால், முன்பிருந்த ஆட்சியைப் பற்றி ஒரு சொற்றொடர் வழங்கி வந்தது உண்டு. அதாவது A Government of corruption, by corruption- என்ற சொற்றொடர் அது. லஞ்சத்தால் உருவாக்கப்பட்ட லஞ்ச ஆட்சி என்றும், அந்த ஆட்சியை நடத்தியவர்களைப் பற்றி Embodiment of corruption-ஊழலின் மொத்த உருவம், Fountain-head of corruption- "ஊழலின் ஊற்றுக் கண்" என்ற வகையில் ஆட்சி செய்தவர்களைப் பற்றி ஒரு வாக்கியம் உண்டு. ஆனால் அதையெல்லாம் மாற்றி இரண்டு ஆண்டு காலத்தில் சீர்கெட்டிருந்த நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி தமிழகத்தை சரியான பாதையில் கொண்டு செல்கிற அரசு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தமிழக அரசு. இந்த ஆட்சி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டு மக்கள் அளித்துள்ள தீர்ப்புதான் நடைபெற்று முடிந்துள்ள தேர்தலில் அருப்புக்கோட்டை வெற்றியும், குன்னூர் வெற்றியும் என்பதை நான் பெருமையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையிலுள்ள அனைத்து மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதோடு, உரிய இடத்தை, முதலிடத்தை தமிழ்மொழி பெறவேண்டும் என்று வலியுறுத்துகிற நிலைமை, பொருளாதார வளர்ச்சி, உணவு உற்பத்தியில் தன்னிறைவு, இரண்டாவது பசுமைப் புரட்சிக்குச் சூளுரை, மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பள உயர்வு, கிராமப்புற மேம்பாட்டிற்குப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை மேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பில் 69 சதவீத இட ஒதுக்கீடு, அந்த ஒதுக்கீட்டு அதிகாரம்கூட மாநில அரசுக்கு விடப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிற அந்தக் கருத்து, இன்னும்கூட கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு என்கின்ற ஒரு புரட்சிகரமான அறிவிப்பு, நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை காக்கப்படும் என்று வலியுறுத்தி, 'உறவுக்குக் கை

[திரு. குத்தாலம் பி. கல்யாணம்] [1998 மார்ச் 20

கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற வகையில் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற தத்துவம் நிறைவேறும் என்று சொல்லப்பட்டிருப்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

அதோடு, பொதுமக்களுக்கு அத்தியாவசியமான உணவு, உடை, உறைவிடம், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமானால் இந்த ஆண்டு எங்களுடைய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிற நிவாரணப் பணிகளுக்கும், வழங்கப்பட்டிருக்கிற நிவாரணத்திற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும், முதல்வர் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இரவு பகல் பாராது பணியாற்றி, நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லியிலே இருந்தார்கள். மாமேதை லெனின் பற்றி குறிப்பிடுகிறபோது, அவர் கிரெம்ளின் மாளிகையிலே வாழ்ந்தாலும் சைபீரிய பாலைவனத்திலே இருக்கின்ற மக்களைப் பற்றித்தான் சிந்திப்பார் என்ற வார்த்தைகளில் அவரைப் பற்றிச் சொல்வதுண்டு. ஆனால் டெல்லியிலே இருந்து, எங்களுடைய மாவட்டத்திலே ஏற்பட்ட வெள்ள நிவாரணப் பணிகளை ஒரு Remote control என்ற வகையில் பொறுப்பு எடுத்து சிறப்பாகச் செய்து முடித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும்கூட, பாலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, இரண்டு ஒன்றியங்கள் இரண்டு மாவட்டங்களிலே வருகிற தொகுதி என்னுடைய குத்தாலம் தொகுதி. அதிலே குறிப்பாக குடவாசல் ஒன்றியத்தை திருமலைராஜன் ஆறு இரண்டாகப் பிரிக்கிறது. இதனால் போக்குவரத்திற்கே இடையூறாக இருக்கிற இடங்களில் கட்டப்பட



1998 மார்ச் 20] [திரு. குத்தாலம் பி. கல்யாணம்]

வேண்டிய பாலங்கள் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையோடு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பரிசீலனையில் இருக்கிற இந்தப் பாலங்களை உடனடியாக எடுத்துக் கட்டி முடிக்க வேண்டும் என்று நான் அன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

திருமலைராஜன் ஆற்றில் கட்டப்படவேண்டிய பாலங்கள்—தேதியூர் புதுபாகசாலை பாலம், சீதக்கமங்கலம்-பம்மல் இணைப்புப் பாலம், வெள்ளைஅதம்பார் பல்லவநத்தம் பாலம், முடிகொண்டான் ஆற்றில் வெள்ளமண்டபம்-சேதினிபுரம் பாலம், காவிரி ஆற்றில் கடலங்குடி-சேத்திரபாலபுரம் இணைப்புப் பாலம். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு அரிய வாய்ப்பு. ஒரு மிகப் பெரிய திட்டம், மத்திய அரசாங்கத்தின் சார்பில் நிறைவேற்றப்பட அனைத்து வேலைகளும் தொடங்கிய நிலையில் இருக்கின்றது.

பிற்பகல் 12-05

என்னுடைய குத்தாலம் தொகுதியில் இயற்கை எரிவாயு மூலம் 30 மெகாவாட் எரிசக்தி மின் நிலையம் 120 கோடி ரூபாய் செலவில் அமையக்கூடிய அளவுக்கு அனைத்துப் பூர்வாங்க வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கின்ற நிலையில், மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்களின் பரிந்துரையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள திட்டம். அந்தத் திட்டத்திற்கு நமது மாநில அரசின் Letter of Commitment அனுப்பவேண்டிய நிலையில் இருக்கின்றது. நான் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்வது என்னவென்றால், இந்தத் திட்டம் எனது பகுதியில் அமையுமானால், நீங்கள் இப்பொழுது சபையிலே தெரிவித்த கருத்தையொட்டி, என்னுடைய மாவட்டத்தினுடைய ஒரு பகுதியின் மின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கும்பகோணத்தில் இருக்கின்ற கே.ஆர்.சி.எஸ். என்ற மின் அமைப்பில் கடந்த 15 ஆண்டுக்காலமாக ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருப்பவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ராமலிங்கம் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, கும்பகோணம் கிராமிய கூட்டுறவுச் சங்கத்தில் 15 ஆண்டுகளாக ஒப்பந்தத் தொழிலாளர்களாக உள்ளவர்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களின் பெருந்தன்மையின் காரணமாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அவர்களில் 116 தொழிலாளர்களை நிரந்தரமாக்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்பு இரண்டு பொருளைப் பற்றிச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு கே.ஆர்.சி.எஸ். மின் அமைப்பில் பணியாற்றும் 116 பேர்களை பணி நிரந்தரமாக்க ஆணையிடப்படுகிறது என அவையிலே அறிவித்தார்கள்.

தந்தை பெரியார் அவர்களுடைய பெயரில் சேலத்தில் அமையப் பெற்றிருக்கின்ற பல்கலைக்கழகம் துவங்கி நடைபெற்று வருகின்றது என்ற இனிய செய்தியை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் ஒரு செய்தியை இங்கே பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்களுக்கு 1970-ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் சார்பில் ஒரு விருது வழங்கப்பட்டது. அந்த விருதின் வாசகம்: 'Periyar, the prophet of the new age; Socrates of South East Asia; Father of the Self-Reform Movement; An Arch-enemy of ignorance, superstition, meaningless customs and baseless manners.'

"தந்தை பெரியார் புத்துலகத்தின் தீர்க்கதரிசி, தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ், சுய மரியாதை இயக்கத்தின் தந்தை, அறியாமை, மூட நம்பிக்கை, அர்த்தமற்ற பழக்கங்கள், ஆதாரமற்ற வழக்கங்கள் இவற்றின் கடும் எதிரி" என்று குறிக்கப்பட்டிருந்தது. அந்த விருது வாசகத்தை அந்த Citation-ஐ அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. திரிகுண சென் அவர்கள் தலைமையில் தந்தை



பெரியார் அவர்களுக்கு வழங்கிய கரம்தான் இங்கே வீற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கரம் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் டாக்டர் அம்பேத்கர் அவர்களைப் பொறுத்தவரையில், எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒரு மாமேதை. பண்டித ஜவஹர்லால் நேரு, 'என்னுடைய அமைச்சரவையில் உள்ள மாணிக்கம்' என்று புகழத்தக்க அளவுக்கு ஒரு பெருமை பெற்ற தலைவர். அவர்களைப் பொறுத்தவரையில் முன்னாள் பாரதப் பிரதமர், திரு. V.P.சிங் அவர்கள் மண்டல் குழுவினுடைய அறிக்கையை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றுகின்றபோது, அவர்களைப் பற்றியும், பெரியார் அவர்களைப் பற்றியும் படம் பிடித்துக் காட்டிச் சொன்னார்கள். "This is the realisation of the dream of Bharat Ratna Dr. Ambedkar, the Great Periyar E.V. Ramasamy and Ram Manohar Lohia'

பிற்பகல் 12-10

தந்தை பெரியாருடைய கனவு, பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய கனவு, லோகியா அவர்களுடைய கனவு ஆகியவற்றை நிறைவேற்றியிருக்கிற பெருமைக்குரிய தலைவர் நம்முடைய முதல்வர். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு எந்த அம்பேத்கர் பெயரை வைப்பதற்குத் தயக்கம் காட்டினார்களோ, அந்தப் பெயரை வைப்பதற்கு உந்து சக்தியாகக் குரல் கொடுத்து, தமிழகத்திலேயிருந்து குரல் கொடுக்க வைத்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற அரசு இந்த அரசு. அவருடைய பெயரால் சட்டக் கல்லூரி மட்டுமல்ல, சட்டப் பல்கலைக்கழகத்தையே ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு முதலமைச்சரையே சாரும். நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த அரசை, இவ்வளவு சிறப்புக்குரிய இந்தத் தலைவரை, மாண்புமிகு முதலமைச்சரை, திண்டிவனம் பிரச்சினையை வைத்துக் களங்கப்படுத்தத் பிரச்சினையைத் திசை திருப்புகிற முயற்சி மனச்சாட்சி உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிகழ்ச்சியாக அமையாது என்று சொல்லி, அனைத்து வகையிலும் இந்த ஆளுநர் உரையை வரவேற்று, நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை தமிழக அரசின் கொள்கைத் திட்டங்களை நல்ல முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமணத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் 53,000 பெண்களுக்கு உதவி செய்யப்படவிருப்பதாக கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். இந்தத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 8-வது வகுப்பு படித்த பெண்களுக்குத்தான் உதவி செய்யப்படுகிறது. இந்தக் காலத்திலே ஏழை, பாமர மக்கள் 5-வது வகுப்பு வரை படிப்பதே கடினமாக இருக்கிறது. 5-வது வகுப்பு வரை படிப்பதே கடினம் என்றுள்ள நிலையில் 8-வது வகுப்பு படித்த பெண்களுக்குத்தான் இந்த உதவி என்பதால் பல பேர்களுக்கு இந்த உதவி கிட்டவில்லை. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கருணையோடு பரிசீலித்து 5-வது வகுப்பு படித்தவர்களுக்கும் இந்த உதவி கிடைக்கும்படி மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற திட்டத்தின்படி பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண்கள் 5-வது வகுப்பு வரையில் படித்திருந்தாலும் அவர்களுக்கு இந்தத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்களும் பிற வகுப்பினர்களும் 8-வது வகுப்பு வரையில் படித்திருந்தால் 10,000 ரூபாய் வழங்கப்படுவதும் நடைமுறையில் இருக்கிறது என்பதையும் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள், வேறு இனத்தைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொள்வார்களேயானால் அவர்களுக்கு 20,000 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டமும் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் அத்தனை பேர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த அத்தனை பேர்களுக்கும் அந்த உதவியை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டு, அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



ரேஷன் கார்டுகளை இரண்டு வண்ணங்களில் விநியோகம் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். இதை நல்ல முறையிலே உடனடியாக விநியோகம் செய்ய வேண்டும். பொது விநியோக முறை சரியாக இல்லாத காரணத்தால் இந்த முறை தேர்தலிலே நாம் வாக்குகளை இழந்ததாக மக்கள் கூறுகிறார்கள். ஆகவே இந்தப் பொது விநியோக முறையிலே ஒரு நல்ல மாறுதலை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் 15 சதவீத இட ஒதுக்கீடு செய்திருப்பதை நான் முழு மனதாக வரவேற்கிறேன். தற்போது 6,000 பேர்கள் உள்ள இடமெல்லாம் பேரூராட்சியாகி விட்டன. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பேரூராட்சிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். பல பேரூராட்சிகள் கிராம அந்தஸ்திலேயே இருக்கின்றன. ஆகவே பேரூராட்சியில் இருக்கின்றவர்களுக்கும் ஒரு நல்வாய்ப்பாக இது அமையும் என்பதால், அந்த வாய்ப்பு அளிக்கப்பெற்றால் அத்தனை ஏழையெளிய பாமர மக்களும் அதனைப் பயன்படுத்திக்கொண்டு, இந்த அரசை. கலைஞரை நல்ல முறையிலே வாழ்த்துவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற பெரிய தொழிற்சாலை டன்லப் தொழிற்சாலை. கடந்த 4 மாத காலமாக அது மூடிக் கிடக்கிறது. ஏற்கெனவே மூடவிருந்த தருணத்தில் சிறப்புக் கவன ஈர்ப்புக்கான அறிவிப்பை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே கொடுத்தபோது. 'இப்போது வேண்டாம், அது நல்ல முறையில் நடக்கிறது' என்று சொன்னார்கள். இப்போது அந்தத் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது. பல தொழிலாளர்கள் இன்று வண்டி இழுக்கின்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். ஏறத்தாழ 4,000 தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையை உடனடியாகத் திறப்பதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும். அம்பத்தூர் பகுதியிலே நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஏறத்தாழ 100-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. டன்லப் தொழிற்சாலையில் மட்டும் 4,000 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த டன்லப் தொழிற்சாலையைச் சார்ந்த சார்புத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வந்த 6,000, 7,000 பேர் தற்போது வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். அத்தனை பேரும் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அதிலே அரசு தலையிட்டு அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியைத் தருவதற்கு

முன்வர வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

கவர்னர் உரையிலே மத்திய மாநில அரசுகளின் உறவுகள் பற்றி நல்லமுறையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நடைபெற்ற தேர்தல் முடிவுகள் மாநிலத்திலே இந்த அரசு நல்லமுறையிலே மக்களுக்குச் சேவை ஆற்றுகின்றது என்பதைக் குறிக்கின்ற வகையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். நாடாளுமன்றத்தின் ஒருசில தொகுதிகளில் நாம் தோல்வியைத் தழுவியிருந்தாலும், இதேபோன்று மற்ற மாநிலங்களில் ஆட்சி செய்கின்ற பி.ஜே.பி. அரசும் தோல்வியைத் தழுவியிருக்கின்றது. ஏதோ ஒரு நிலை ஏற்படுமானால், அந்த நிலை பொதுவானதே தவிர, ஒரு குறிப்பிட்ட மாநில அரசை மட்டும் குறை சொல்வது நல்லதல்ல என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே நிறைய சாலைகள் போடப்படாமல் இருக்கின்றன. உதாரணமாக, என்னுடைய பகுதியிலே அம்பத்தூர் முனிசிபாலிட்டி இருக்கின்றது. அதனுடைய சேர்மன் இருக்கின்ற பகுதியில்கூட, இரண்டு மூன்று தெருக்களில் சாலைகள் போடப்படாமல் இருக்கின்றது. இதுகுறித்து கமிஷனரிடம் சென்று முறையிடுகின்றபோது அவர், 'இன்றைக்குப் போடுகிறேன், நாளைக்குப் போடுகிறேன்' என்கிறார். ஆனால் போடுவதே கிடையாது. எனவே, தெருக்களிலே நடமாடமுடியாத ஒரு சூழ்நிலை சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு இருக்கிறது. எங்களுடைய தொழில் நிறுவனங்கள் இருக்கின்ற இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்றது. எம்.எல்.ஏ.க்களுடைய ஃபேக்டரிகள் அங்கே இருக்கின்றது அங்கேகூட சாலைகளைப் போட மாட்டேன் என்கிறார்கள். கமிஷனர் முறையான பதில் சொல்ல மாட்டேன் என்கிறார். சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் போதிய அதிகாரங்கள் கிடையாது. நாங்கள் எதைச் செய்ய வேண்டுமென்றாலும் அதிகாரிகளிடம்தான் போய்ச் சொல்லவேண்டியிருக்கிறது. ஒரு சில வேலைகளுக்கு ஆள் எடுக்க வேண்டுமென்றால் அவர்கள் அதை உடனடியாகச் செய்து விடுகின்றார்கள். அதிலே அவர்களுக்கு இலாபம் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இதுபோன்ற நிலைகளிலே அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்த அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அந்தத் திட்டங்கள் மக்கள் மத்தியிலே சென்றடைய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் 25 இலட்ச ரூபாய் வளர்ச்சி நிதியாகக் கொடுத்தீர்கள். அதை ஒரு கோடி ரூபாயாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உத்தரப்பிரதேச மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ.1 கோடி தருகிறார்கள். அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை கொண்டு, தொகுதி வளர்ச்சி நிதியாக எங்களுக்கு ஒரு கோடி ரூபாய் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோவையில் ஏற்பட்ட சம்பவங்களை வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதக் கூடாது. அதை ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருத வேண்டும். தீவிரவாதிகள் யாராக இருந்தாலும் சட்டப்படி இரும்புக் கரம் கொண்டு அவர்களை ஒடுக்க வேண்டும். நீங்கள் நல்ல முறையிலே இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் அப்பாவி மக்கள் பலரைக் காவல் துறையினர் கைது செய்து உள்ளே வைத்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். தீவிரவாதி யாராக இருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்; தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஆனால், அப்பாவி மக்களை, இப்போது பிடித்து வைத்திருக்கின்றவர்களை, தயவுசெய்து முறையான விசாரணை செய்து, அவர்கள் மேல் Specific charges இல்லையென்றால் அவர்களையெல்லாம் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஊமை ஒருவர், வேதாரண்யத்திலே சென்றுகொண்டிருந்தார். அவரைக் காவல் துறையினர் முஸ்லீம் தீவரவாதி என்று பிடித்து, அவரை அடியடி என்று அடித்திருக்கிறார்கள். டாக்டர் ஒருவர்கூட அவர் பேசக்கூடியவர் என்று பொய்யான சான்றிதழ் கொடுத்திருக்கிறார். அவரின் குடும்பத்தார் என்னை வந்து சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்று சொல்லி, எங்களைக் கூப்பிட்டுச் செல்லுங்கள் என்று சொல்லி, ஓவென்று தேம்பித் தேம்பி அழுதார்கள். உண்மையிலே—Virtually, I was also crying — நான் மிகவும் மனம் நொந்து போனேன். நமது முதல்வர் அவர்களும் ஏற்கெனவே வருத்தப்பட்டிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லி அவர்களுக்கு

முன்னாலேயே வைத்து ஒரு கடிதம் எழுதி, என்னுடைய அலுவலகத்திலுள்ள ஆட்கள் மூலமாக முதல்வர் அவர்களுக்கு அந்தக் கடிதத்தைக் கொடுத்தனுப்பியிருக்கிறேன். அந்த ஊமையைப் பேசுகின்றவன் என்று சொன்ன அந்த காவல் துறை அதிகாரிமீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த ஊமையைப் பேசுகின்றவன் என்று போலிச் சான்றிதழ் கொடுத்த அந்த மருத்துவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒருபோதும் இஸ்லாமிய சமுதாயத்திலே இருக்கிற அரசியல் தலைவர்கள் யாரும் தீவிரவாதத்தை ஆதரிக்க மாட்டார்கள் என்ற உறுதியை நான் தருகின்றேன். இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்திலேகூட மூன்றில் ஒரு பங்கு இஸ்லாமியர்கள் உயிர் நீத்திருக்கிறார்கள். ஆகவே, நாட்டுப் பற்றிலும், தேசப் பற்றிலும் கொஞ்சம்கூட இஸ்லாமியத் தலைவர்கள் பின்தங்கியவர்கள் அல்ல. இந்த நாட்டிற்காக எத்தனையோ பேர்கள் உயிர்நீத்திருக்கிறார்கள். அதேநேரத்தில், இதுவரை தேசத் துரோகக் குற்றத்திற்காக ஒரு இஸ்லாமியன்கூட கைது செய்யப்படவில்லை. ஆனால், பல சர்மாக்கள், சாஸ்திரிகள், நம்பி நாராயணர்கள் என்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஒரு இஸ்லாமியன் கூடக் கைது செய்யப்படவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன். அந்த அளவிற்கு நாட்டுப்பற்று மிகுந்தவர்கள்தான் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஏன் இந்த வன்முறை வந்தது? ஏன் இந்தத் தீவிரவாதம் வந்தது?

பிற்பகல் 12-20

கோவையிலே ஏற்கெனவே நடந்த முதல் கலவரத்திலே, 80 பேர் இறந்திருக்கிறார்கள். 20 பேரை Missing என்று Declare செய்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கு விசாரணைக் கமிஷன் எல்லாம் அமைத்திருக்கிறார்கள். நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். உடனடியாக அந்த 20 பேரை Dead-ஆக declare செய்து, அந்த ஏழைக் குடும்பங்களுக்கு நீங்கள் மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கவர்னர் உரை, உண்மையிலேயே வரவேற்கத்தக்கது; பாராட்டத்தக்கது; இன்னும் நல்ல முறையிலே கலைஞர் அவர்களுடைய கொள்கைத் திட்டங்கள் மக்கள் மத்தியிலே வந்து சேருவதற்கான நல்ல வாய்ப்புகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம் (குறுக்கீடு)



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள், வேண்டாம்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரே ஒரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திலே ஊமை ஒருவரைக் கைது செய்து இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். வேதாரண்யத்தைப் பொறுத்தமட்டிலே, கடலோரத்திலே, கடைசி எல்லையாக இருக்கக்கூடியது. கோடியக்கரை. அங்கே பார்த்தால், கிட்டத்தட்ட 46 பேருக்கு மேலே, பைத்தியங்களாகத் திரிந்து கொண்டு காட்சியளிக்கிறார்கள். எந்த ஊரிலும், அவ்வளவு பைத்தியங்களைப் பார்க்க முடியாது. அவ்வளவு பேரும் மாறுவேடத்தில் இருப்பதாக போலீஸுக்குச் சந்தேகம் வந்தது. அந்த மாதிரியான பதட்டமான சூழ்நிலையிலே பல பேரைப் பிடித்து விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தேர்தல் காலத்திலே புதிய புதிய நபர்கள் மாறுவேடத்திலே திரிகிற மாதிரி தெரிந்த காரணத்தினால்தான் அவர்கள் அழைத்து விசாரிக்கப்பட்டனர். அவர் நன்றாக மிகவும் வேகமாக நடப்பார். பார்ப்பதற்கு நல்ல மனிதர்போல் தெரிவார். அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் அவரை அழைத்து விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தச் சம்பவம் நடந்தபோது நானும் வேதாரண்யத்திலே இருந்த காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்பு முதலமைச்சராக இருந்தபோது, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வந்து அதைச் சிறப்பாக நடத்தினார். அதுபோன்ற திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே திரிந்து கொண்டிருக்கிற பிச்சைக்காரர்களுக்காக, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை மீண்டும் துவக்கினால் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பதினோறாவது சட்டப்பேரவையிலே. ஐந்தாவது கூட்டத் தொடரிலே. ஆளுநர் உரைமீது விவாதம் நடக்கின்ற இந்த நேரத்திலே, சாதாரண ஒரு துறவியோடு சேர்ந்து. ஓர் உயர்நிலைப் பள்ளியையும். அநாதை விடுதியையும் நடத்திவந்த என்னை. மக்கள் சக்தி என்ற அரசியல் இயக்கததின் பெரியக்கத்திலே, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவராகத் தேர்வு செய்து. வாய்ப்பினைக் கொடுத்த மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கும். பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு. ஒன்றை மட்டும் நான் முதலிலே இங்கே மனம் திறந்து பேச விழைகிறேன்.

நடந்து முடிந்த தேர்தலிலே. தந்தை பெரியார் அவர்களுக்குப் பிறகு. உத்தமராக. பதவி ஆசை இல்லாத ஒரு மாமனிதராக வந்த டாக்டர் இராமதாஸ் ஐயா அவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை வலிய வந்து ஆதரித்த காலத்திலே. உதைத்துத் தள்ளி, உதாசீனப்படுத்தி, அந்தக் கூட்டணியிலே இருந்து ஓரங்கட்டப்பட்ட காரணத்தினாலேதான். டாக்டர் ஐயா அவர்கள். புதிய ஒரு கூட்டணி உருவாக வேண்டுமென்று சொல்லி. மக்கள் சக்தி என்ற வெற்றிக் கூட்டணியை உருவாக்கிய நேரத்திலே. பாட்டாளி மக்கள் கட்சி, எந்த அணியிலே சேர்ந்தாலும். தமிழகத்திலே வெற்றி பெறமுடியும் என்ற ஒரு நிலையை உருவாக்கினார். அந்த அளவிலே. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலே. பாரதீய ஜனதா கட்சியினுடைய கூட்டணியிலே இருந்த எங்களுடைய இயக்கமான பாட்டாளி மக்கள் கட்சிக்கும். அதனுடைய தோழமைக் கட்சிகளுக்கும் வெற்றி வாய்ப்பினைத் தேடித் தந்து, இங்கே 30 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்து. மத்தியிலே ஆட்சியை ஏற்படுத்தி. தமிழகத்திலே 7 அமைச்சர் பெருமக்களுக்கும். அதிலே குறிப்பாக பாட்டாளி மக்கள் கட்சிக்கும் ஒரு அமைச்சர் என்ற ஒரு வாய்ப்பினைத் தந்த. தமிழக மக்களுக்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனமார்ந்த நன்றியினை இந்த மாமன்றத்திலே நான் முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே, இன்று நாட்டினுடைய பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கிற மரியாதைக்குரிய திரு. வாஜ்பாய் அவர்கள். தீண்டத்தகாதவர் அல்ல. பொதுவாழ்க்கையிலே ஒரு உத்தமர்;



நேர்மையானவர்; தூய்மையான மனிதர். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நல்லவர் தலைமையிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த ஆட்சி, இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படக்கூடிய திறமையான, நேர்மையான, நிலையான ஆட்சியாக அமையவும், அதிலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைக் காக்கக்கூடிய ஓர் அரசாகவும் அமைய வேண்டுமென்று சொல்லி, இந்த இயக்கத்தின் வாயிலாக நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

அதேநேரத்திலே. இந்த கவர்னர் உரையைப் பொறுத்தவரையில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் சொல்லிக்கொள்கிறபோது, இந்த உரையிலே. இட ஒதுக்கீடு பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் இல்லை. தமிழகத்திலே 107 சாதி மக்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீட்டை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1989-லே வழங்கியபோது, 'நான் ஒரு சுவை மிகுந்த மாங்கனியைத் தருகிறேன்; சுவைத்துப் பார்த்துச் சொல்லுங்கள்'' என்று 1989-லே மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுவைத்துப் பார்த்தோம். சுவைத்துப் பார்த்த பிறகு, இன்றைய வரையிலே நாங்கள் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆக. இந்த 20% இட ஒதுக்கீடு என்பது 107 சாதி மக்களுக்கும் பொருத்தமுடையதாக. பயன்தரக்கூடியதாக இல்லை. ஆகவே நீங்கள் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அந்த அடிப்படையிலே தனியான இட ஒதுக்கீடாகவோ அல்லது கர்நாடகா மாநிலத்தில் இருப்பதைப் போல. Compartmental Reservation என்று சொல்லக்கூடிய தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறையாகவோ வழங்க வேண்டுமென்று சொல்லி பல நாட்கள் வற்புறுத்தியும்கூட இதுவரையிலே வழங்கப்படாமல் இருப்பது இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அடித்தட்டு மக்களுக்கு இந்த உயிர்நாடிப் பிரச்சினையிலே ஏமாற்றத்தை அளிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே இன்றைய நிலையிலே ஒரு நாடு முன்னேற வேண்டுமென்று சொன்னால் கல்வி மிக அவசியமானது. ஆகவே உலக நாடுகளை ஒப்புநோக்குகிறபோது நம்முடைய நாடு கல்வித் தரத்திலே பின்தங்கிய நாடு என்று சொல்லிக் கொண்டாலும் கூட. இந்த நாட்டிலே பட்டிதொட்டி எல்லாம் நகர்ப்புறமாக இருந்தாலும்கூட.

கட்டாயக் கல்வித் திட்டத்தை, ஒரே மாதிரியான, தரமான கல்வியாக இருக்கக்கூடிய தரமான கல்வித் திட்டத்தை வழங்குவோம் என்று இங்கே ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை என்னும்போது ஏமாற்றத்தை அளிக்கிறது. ஆகவே நம்முடைய அரசு கட்டாயக் கல்வித் திட்டத்தை, தரமான கல்வித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இங்கே தரமான கல்வி என்று சொல்கிற நேரத்திலே ஒரு சாதாரண மாணவன் எதிர்காலத்திலே உயர்ந்தவனாக வரக்கூடிய நேரத்திலே அந்த மாணவனுக்குச் சரியான கல்வி கொடுக்கப்பட வேண்டும். சரியான கல்வி இல்லாத காரணத்தினால் வளர்ந்த நிலையிலே, வயது முதிர்ந்த நிலையிலே அவன் வன்முறையாளனாக அல்லது தேசவிரோதியாக மாறக்கூடிய நிலை இந்த நாட்டிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இளமைப் பருவத்திலே, பிஞ்சு உள்ளத்திலே அவர்களுக்கு நாட்டுப் பற்றை, இன்னும் உண்மையான, நேர்மையான, லஞ்ச லாவண்யம் இல்லாமல் வளரக்கூடிய மனப்பக்குவத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல கல்வியை நாம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சினிமாத் துறை என்பது இந்த நாட்டிலே மிகப்பெரிய விளம்பர சாதனம். இந்த சினிமாத் துறையிலேகூட நம்முடைய அரசு தலையிட்டது. அது கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட வேண்டும். அதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர்களை திசை மாற்றிச் செல்லக்கூடிய அல்லது தவறுகள் செய்யக்கூடியவர்களாக, வன்முறையாளர்களாக ஆவதற்குத் தூண்டக்கூடியது சினிமாத் துறை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே சினிமாத் துறையை நன்றாகக் கண்காணித்து ஒழுக்கத்தை வளர்க்கக்கூடியவர்களாக, தேசப்பற்றை வளர்க்கக்கூடியவர்களாக நல்லமுறையில் செயல்படக்கூடியவர்களாக இளைஞர்கள் வளரும் வகையில் நல்ல படங்களைத் தயாரிப்பதற்கு நம்முடைய தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, விவசாயிகளுக்கென்று இந்த ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. இன்றைய நிலையிலே நெல் கொள்முதல்



செய்யப்படுகிறது. ஆனால் விலை மிகவும் குறைவு. அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நெல்லினுடைய விலையோ குறைவு, அரிசியினுடைய விலை மிக அதிகமாக இருக்கிறது. நெல் கொள்முதல் விலையையும், அரிசியினுடைய விலை உயர்வையும் அரசு கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்று இந்த நேரத்தில் நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல கரும்பு விலை மிகக் குறைவாக இருக்கிறது. சர்க்கரையினுடைய விலையோ உயர்வு. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகள் பெருத்த ஏமாற்றம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். கரும்பு விலையைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படாமல் இருப்பது கண்டிக்கத்தக்கது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இங்கே குடும்ப அட்டை பற்றிச் சொன்னார்கள். மூன்று வண்ண அட்டை இன்றைக்கு இரண்டாகிவிட்டது. அந்த. இரண்டும் ஒன்றாகிவிடுமா என்று மக்கள் எல்லாம் தொலைபேசியிலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மூன்று வண்ண அட்டை. இரண்டானது ஒன்றாகாமல் உடனடியாக அரசு அதை வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல. இங்கே மின் வெட்டு பிரச்சினை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மின் வெட்டு என்பது வரலாறு கண்டிராத அளவுக்கு இன்றைக்கு நம்முடைய தமிழநாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. 1 மணி நேரம், 2 மணி நேரம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய தருமபுரி மாவட்டத்திலே தெருவிளக்குகள் எரிவதே இல்லை. எனவே அங்கே குழந்தைகள் எல்லாம் படிக்க இயலவில்லை. தொழிற்சாலைகளைப் பற்றியும் சொன்னார்கள். அதேநேரத்திலே விவசாயிகள் இயக்கக்கூடிய பம்ப் செட் 1 மணி நேரம்கூட இயங்குவதில்லை. பம்ப் செட்டை இயக்காவிட்டாலும் காயில் போய்விடுகிறது. விவசாயிகளுக்கு அந்த வகையில் மீண்டும் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அந்த வகையிலே மின் வெட்டைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை

இந்த மின்வெட்டைப் போக்குவதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது என்பதும் இங்கே ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை என்பது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் மிகவும் எதிர்பார்ப்போடு இருந்தோம். தருமபுரி மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். குடிநீருக்காகக் கஷ்டப்படுகிற மாவட்டம். ஆகவே அங்கே ஒகேனக்கல்லிலிருந்து நிரந்தரமான. பாதுகாப்பான குடிநீர் வழங்கக்கூடிய ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம். தருமபுரி மாவட்டம் முழுவதும் குடிநீர் வழங்கக்கூடிய திட்டம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அதுவும் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை என்பது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதை இந்தநேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில் நாங்கள் சொல்லுவது எல்லாம், இது உப்புச்சப்பில்லாதது, ஏட்டு சுரைக்காயாக, கானல் நீராக இருக்கிறது என்று சொல்லி, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு, அதன் வாயிலாக என்னுடைய கடமையை சரிவரச் செய்ய இந்த நேரத்தை நான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

கோவையிலே நடைபெற்ற குண்டு வெடிப்பிற்கும், அதனுடைய பின்னணியாக சென்னையிலே கண்டுபிடிக்கப்பட்ட குண்டுகளும், இந்தக் குண்டு கலாச்சாரம் என்பது ஏதோ தமிழ்நாட்டில் மட்டும் நடப்பதாகச் சொல்லி, அதற்குப் பின்னால் இந்த அரசைக் கலைக்க வேண்டுமென்று சொல்லுகின்ற வாதத்தை எந்த முறையிலும்



ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலைதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது தேசம் பூராவிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஏற்கெனவே, பாபர் மசூதியை உடைத்ததற்குப் பின்னால் டெல்லியிலே குண்டு வெடித்தது. அந்த குண்டு வெடிப்புக்குப் பின்னால் அந்த அரசைக் கலைத்திருக்க வேண்டும். அதற்குப் பின்னால் மும்பையிலே நடந்த குண்டு வெடிப்பிற்குப் பின்னால் அந்த அரசைக் கலைத்திருக்க வேண்டும். ஏற்கெனவே அஸ்ஸாம் மாநிலம் தீவிரவாதத்தின் உச்சகட்டமாக இருந்து வருகிற காலகட்டத்தில் இந்திய தேசம் பூராவிலும் குண்டு வெடிப்புக் கலாச்சாரம் என்பது ஒரு நடைமுறையாக இருந்துகொண்டிருக்கிற சூழ்நிலையில் கோவையில் நடந்த அசம்பாவிதமான, துரதிருஷ்டவசமான நிகழ்ச்சியை நாம் வேதனையோடு அணுகுகின்ற இந்த வேளையில் நம்முடைய உளவுத்துறை சரிவர தன்னுடைய பணியை ஆற்றுகிறதா என்று நாம் பார்க்க வேண்டும். இத்தகைய குண்டு வெடிப்புகளால் அப்பாவி மக்கள் எந்த அளவுக்குத் துன்புறுத்தப்படுகிறார்கள், கொலை செய்யப்படுகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் மத மோதல்கள் உருவாவதற்கு, அதி தீவிரவாதிகளின் போக்கு என்பது இன்று உச்சகட்ட நிலைக்கு வளர்ந்து வருகிற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம்.

பெரும்பான்மை மதமானாலும் சரி, சிறுபான்மை மதமானாலும் சரி, அதி தீவிரவாதத்தைக் கிளப்பினாலும், மத வெறியைத் தூண்டினாலும், அவை இரண்டுமே நம்முடைய சாதாரண மக்களுக்கு நன்மைஅளிக்காது என்ற வகையிலேதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் பிரச்சினையைச் சந்திக்கின்றது. ஆகவே அதைப் போக்க நம்முடைய மதச்சார்பற்ற கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு மிகப் பெரிய பிரச்சாரத்தை, தேசம் பூராவிலும், நாடு பூராவிலும் நடத்துவதால் மட்டுமே மதவெறியைத் தீர்த்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே மத மோதல்களைத் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய ஆளும் கட்சி என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பிரச்சாரத்தின் மூலமாக, தொலைக்காட்சி மூலமாக, ரேடியோ மூலமாக பிரச்சாரம் செய்து தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் ஆழமான கோரிக்கை வைத்து, அவர்களைத் தெளிவுபடுத்தி ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னையிலே நடந்த குண்டு கண்டுபிடிப்பு பாராட்டக்கூடியது. இந்த குண்டு விவகாரம் என்பது வியாபாரச் சரக்காக மாறிவிட்ட நிலையைதான் நாடு பூராவும், நாம் பார்க்கிறோம். சென்னையில் குண்டுகளைக் கண்டுப்பிடிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக காவல் துறை அதிகாரிகளை நான் பாராட்டுகிறேன். அதேபோல் இந்த குண்டுக் கலாச்சாரத்தைப் பரப்புகின்ற மத வெறி ஸ்தாபனங்களைத் தடை செய்கின்ற ஒரு நிலையையும் நாம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தென் மாவட்டங்களில் சாதிச் சண்டைகள் என்பது எந்த அளவுக்கு வலுப்பெற்று, எத்தகைய நிலைகள் எல்லாம் உருவாகியுள்ளன என்பது நாடறிந்ததாகும். சாதிச் சண்டைக்குப் பின்னாலே தீண்டாமை என்பதும் ஒரு பக்கத்தில் தலைவிரித்தாடுகின்ற ஒரு சூழ்நிலையையும் நாம் பார்க்கிறோம். எனவே, சாதிச் சண்டையைப் போக்குவதற்காக, அதுகுறித்து விசாரணை செய்வதற்காக மோகன் கமிஷன் ஒன்று அரசால் நியமிக்கப்பட்டது. அந்த மோகன் கமிஷன் தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்குத் தந்திருக்கிறது. அதில் உள்ள நல்ல அம்சங்களை இந்த அரசு வெளியே கொண்டுவந்து நாட்டு மக்களுக்கெல்லாம் அதைப்பற்றிச் சொல்லுகின்ற ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்ததாக, அதிலே சொல்லியிருப்பது அந்தப் பகுதியிலே இருக்கின்ற வேலை இல்லாத் திண்டாட்டமாகும். இளைஞர் சமுதாயத்திற்கு வேலை இல்லாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

அதுபோன்று விளம்பரம் என்று சொல்கின்றபோது சாதாரணமாக தொழுநோய் மற்றும் எய்ட்ஸ் நோயைத் தடுப்பதற்குப் பேருந்து நிலையங்களிலும், ரயில் நிலையங்களிலும் விளம்பரம் செய்கின்றார்கள். அது போன்று, இந்த சாதிச் சண்டை, இந்தத் தீண்டாமை போன்ற வற்றிற்கெதிராக நாம் பேருந்துகளிலும் ரெயில் நிலையங்களிலும் பெரிய அளவில் விளம்பரம் செய்வதற்கு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது. தேர்தல் முடிவுக் கான காரணங்களை அரசு ஆய்வு செய்கின்றபோது, குறிப்பாக கோவை வெடிகுண்டு சம்பவங்களிலே கண்டுபிடிப்பு காரியங்களிலே ஈடுபடுகின்ற காவல் துறை ஏதாவது தவறு செய்திருக்கின்றதா என்பதைக் கண்டறிய வேண்டும். அது போன்று நம்முடைய ஊரிலே இருக்கின்ற, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற வேறு பல பிரச்சினைகளும் காரணம் என்று நாங்கள் கருதுகின்றோம். குறிப்பாக இந்த அரசு உயர்த்தி உள்ள பஸ் கட்டணம் என்பது ஓரளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் காலங்களிலே நாம் மக்களைச் சந்திக்கின்றபோது மக்கள் பஸ் கட்டண உயர்வைப் பற்றி புகார் கூறிய வண்ணம் இருந்தனர். எனவே இந்த பஸ் கட்டண உயர்வைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய ரேஷன் கார்டு சமாச்சாரங்களை எடுத்துக்கொண்டால் இரண்டு கலரில் கார்டுகள் வழங்க இருப்பதை வரவேற்கிறோம். இதுநல்ல அம்சம். ஆனால் விநியோகத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவுக் கடைகளுக்குப் போய் பார்த்தால் பல கோளாறுகள் இருக்கின்றன. ஒரு மூட்டை அரிசியைத் தூக்கிப் பார்க்கின்றபோது அதில் ஒரு கிலோவிலிருந்து மூன்று கிலோ வரை குறைகின்றது. இதுகுறித்து அதிகாரிகள் மட்டத்திலே போனால் அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்கின்றார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். அந்த மூன்று கிலோ அரிசி குறைவானது அது விநியோக முறைக்குச் செல்கின்றபோது இன்னும் கொஞ்சம் குறைந்துவிடக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலை நம்முடைய கிராமப் பகுதிகளிலேயெல்லாம் இருக்கின்றது. ஆகவே, இந்த ரேஷன் பொருட்கள் விநியோகமும் கார்டுகள் வழங்கும் சம்பிரதாயங்களில் ஏற்பட்ட கால தாமதமும் தேர்தலில் பின்னடைவுக்கு ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. கார்டுகள் வழங்குவதிலே ஏற்பட்டிருக்கின்ற காலதாமதம் என்பது மக்களுடைய ஒரு பிரச்சினையாக வந்திருக்கிறது என்பதை நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பொது விநியோகத் திட்டத்தையும், கார்டுகள் வழங்குவதைப் பற்றியும் குறிப்பிட்டுக் கொண்டே இருக்கின்றார்கள். நேற்று ஒரு உறுப்பினர்

[திரு. கா.நா. நேரு] [1998 மார்ச் 20

வருமானத்தை ரூ.1,250/- என்று குறிப்பிட்டு இருக்கிறீர்களே, மற்றவர்களுக்கெல்லாம் இல்லையே என்று கேட்டிருக்கிறார்கள். தொன்றுதொட்டு 20 ஆண்டு காலமாக வருமானம் என்பது ரேஷன் அட்டையில் குறிப்பிடுவது வழக்கம்.

ஒரு புதிய பொது விநியோக முறையை மத்திய அரசு அறிமுகப்படுத்திய பிறகு, வறுமைக்கோட்டிற்குக் கீழே தமிழ்நாட்டிலே 35 சதவிகித மக்கள்தான் இருக்கிறார்கள் என்ற ஒரு கணக்கை எடுத்து இருக்கின்றார்கள். அவர்களுக்கு மானிய விலையிலே அரிசியையும் மற்ற பொருட்களையும் வழங்குகின்றார்கள். மத்திய அரசு இது மாதிரியான கணக்கை எடுத்திருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கும் நாம் அதுகுறித்து விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தினால்தான் குறைவாக வருமானம் இருக்கின்றவர்களை அடையாளம் காட்டுகின்ற ஒரு பணி இருக்கின்றது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த இரண்டு கலர் கார்டுகளிலே தொடர்ந்து கடந்த காலத்தைப் போல எல்லா மக்களுக்கும் அனைத்துப் பொருட்களுமே கிடைக்கும். மஞ்சள் அட்டைப் பெறுகின்றவர்கள் அரிசி தேவை இல்லை என்று சொன்னால் கூடுதலாக சர்க்கரையோ, மண்ணெண்ணெயோ அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்தப் புதிய முறை காரணமாக தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து மக்களுக்கும் கடந்த காலத்திலே இருந்ததைப் போல தேவையென்றால் அரிசி வழங்கவும் அரசு தயாராக இருக்கிறது.

தேவையில்லை என்றால் மற்றதைக் கூடுதலாக வழங்க இருக்கின்றோம். காலதாமதம் என்கின்றபோது பல அதிகாரிகள் பல மட்டங்களிலே வேலை செய்திருக்கின்றார்கள். கடந்த காலத்திலே ஒரு கோடியே 50 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் இருந்திருக்கிறார்கள். அதிலே 15 இலட்சத்திற்கு மேற்பட்ட போலி அட்டைகள் இருக்கின்றன. அதையெல்லாம் தீர ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான் கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கின்றது.

மேலும் போட்டோவுடன் குடும்ப அட்டை வழங்க வேண்டுமென்று இந்த அரசு அறிவித்த காரணத்தாலும், ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று விசாரிக்கும் பணியும் தொடர்ந்து இருக்கின்ற காரணத்தினாலும் கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவர்னர் உரையில் கூறியது போல ஜூன்



1998 மார்ச் 20] [திரு. கா.நா. நேரு]

மாதம் முதல் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் ஒரு மூட்டைக்கு 3 கிலோ அரிசி குறைவாக இருக்கின்றது என்று இங்கே தெரிவித்தார்கள். இதிலே, 8 கிலோ, 9 கிலோ குறைந்தது என்றிருந்த நிலையை எல்லாம், மற்றி இந்த அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக 90 சதவீதம் சரியான அளவுக்கு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

பிற்பகல் 12-40

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்டு வந்த புதுப்பிக்கப்படாத தராசுகளை எல்லாம், முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று இப்போது 550 இடங்களிலே புதிய தராசுகள் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நடவடிக்கைகளையெல்லாம் எடுத்த காரணத்தால் கடந்த காலத்தில் இருந்ததைப்போன்று அல்லாமல், சரியான அளவில் உணவுப் பொருட்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஒரு கருத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ரேஷன் கடைகளில் விநியோகம் சரியாக இல்லை என்று சொன்னார்கள். இப்போது 3-ஆம் தேதியிலிருந்து 5-ஆம் தேதிக்குள்ளாக மாவட்ட வழங்கல் அதிகாரி அவர்கள் ஒவ்வொரு ரேஷன் கடைக்கும் இன்னின்ன பொருட்கள் என்று வரையறை செய்தவுடன், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு பொருட்கள் வழங்கப்படுகின்றன என்று அறிவிக்கப்படுகிறது. அப்படியிருக்கிறபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு கடையிலே சரியான முறையிலே பொருட்கள் வழங்கப்படவில்லை என்று தெரிந்து கொண்டால், அவர் அங்கே சென்று ஏன் சரியாக பொருட்கள் விநியோகம் செய்யப்படவில்லை என்று கேட்கலாம். அப்படிக் கேட்டும் சரியாக நடைபெறவில்லை என்று தெரிந்தால், அதைப்பற்றி எங்களுக்குத் தெரிவித்தால், நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்குச் சரியாக இருக்கும்.

கடந்த காலத்தில் 80 சதவீதம், 90 சதவீதம் என்ற அளவுக்கு சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டது. ஆனால் இப்போது உறுதியாகச் சொல்லமுடியும், 100 சதவீதம் அளவுக்குச் சர்க்கரை வழங்கப்படுகிறது. இதுவரை இல்லாத வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்க்கரைக்கு மாதம் 3 கோடி ரூபாய் மானியம் தந்து கூடுதலாக

மூன்றாயிரம் டன் சர்க்கரையைப் பெற்று 100 சதவீதம் என்ற அளவுக்குச் சர்க்கரையை வழங்குகிறோம்.

அதேபோல், மண்ணெண்ணெய் 100 சதவீதம் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்படுகிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில் ரேஷன் அட்டையில் என்ன அளவு இருக்கிறதோ அதை முழுமையாக வழங்கிக் கொண்டிருக்கிறது. வழங்கப்படும் பொருட்களின் எடையும் குறையாமல் இருப்பதற்கு முழு முயற்சியையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் அந்த அந்தப் பகுதியிலே நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. டி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் முதல் பகுதியிலே சொன்னது குறித்து எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. நான் உண்மையாகவே அதை ஏற்றுக்கொள்கிறேன். ரேஷன் கார்டு கிடைக்கவில்லை. தாமதமாகிறது என்பதுதான் தேர்தல் முடிவில் சறுக்கல் ஏற்பட்டதற்குக் காரணமாக அமைந்தது என்பது உண்மை. இரண்டாவதாக, மாவட்டத்திலே இருக்கிற அதிகாரிகளோடு மாவட்ட ஆட்சித் தலைவர் உணவுப் பங்கீடு முறை சம்பந்தமாகப் பேசுகின்றபோதுகூடத் தெரிவித்தேன். கொடுக்கப்படும் பொருளில் அரிசியில் ஒரு கிலோ எடைக்கு சில கிராம் குறைந்தால்கூட அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். ஒரு குடும்ப அட்டையில் 1 கிலோ குறைகிறது. இப்படி 1 கிலோ குறைகிறது என்று வரும்போது, அடிமட்டத்திலே இருக்கிற. சாதாரண மக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது. அதிலே பல நூறு கிராம் அரிசி குறைந்து விடுகிறது. கூட்டுறவுக் கடைகள் அரிசி எடுக்கும் போது 1 கிலோவிலிருந்து 3 கிலோ வரையிலும் குறைகின்றது இதை அதிகாரிகளால் மறுக்க முடியவில்லை. இப்போது அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நான் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அரசு எடுக்கும் நடவடிக்கைகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, போக்குவரத்து நெருக்கடி பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். இப்போது சாலை விபத்துக்கள் அதிக அளவில் நடைபெறுகின்றன. இதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்வதற்கு விசேஷமான வல்லுநர்கள் கமிட்டியை ஏற்படுத்தி, சாலை



விபத்துக்களைத் தடுத்து நிறுத்துவது எப்படி என்று ஆராய வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய உரையில் குறுக்கீடுகள் இருந்தன. ஆகவே, எனக்குப் பேசுவதற்குக் கொஞ்சம் கூடுதலாக நேரம் தரவேண்டும்.

அடுத்தபடியாக, காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக நடுவர் மன்றத் தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம். பேச்சுவார்த்தையின் மூலமாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

முல்லைப்பெரியார் அணைக்கட்டு சம்பந்தமாக இரண்டு மாநில அரசுகளும் பேச்சுவார்த்தை மூலமாக சுமுகமான முடிவு எடுக்க வேண்டும் என்பதும் என்னுடைய வேண்டுகோள்.

தொழில் வளர்ச்சியினைப் பொறுத்தவரை, ஆளுநர் உரையிலே பல விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மூடிக் கிடக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்கு....

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முல்லைப்பெரியார் அணையைப் பொறுத்தவரையில், பேச்சுவார்த்தையின் மூலமாகத் தீர்வுகாண வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பேசித் தீர்க்க வேண்டுமென்பதற்காக பலமுறை கேரள முதலமைச்சருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். நானும் அவருக்குக் கடிதம் எழுதி இருக்கின்றேன். இது குறித்துப் பேசுவதற்கு மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் ஒரு தேதி கொடுத்து எங்களையும், அவர்களையும் வரச் சொன்னார்கள். ஆனால், நாங்கள்தான் போயிருந்தோம். அவர்கள் வரவில்லை. எனவே, முல்லைப் பெரியார் அணைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுக்காத அரசாக கேரள அரசுதான் இருக்கிறது. எனவே, எங்களுக்குச் சொல்கிற அறிவுரையை, அவர்களுடைய இயக்கத் தோழர்கள் அங்கே இருக்கிறார்கள், அவர்களிடம் சொல்லி, அதற்கு உதவி செய்யக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. டி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியார் அணை பிரச்சினை குறித்து அந்த அரசிடம்

நாங்கள் சொல்வதில் சங்கடம் ஒன்றும் இல்லை. எங்களுடைய இயக்கத்தின் மூலமாக, எங்களுடைய கட்சியின் மூலமாக, அந்த அரசுக்கு இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்லி, சுமுகமான முறையில் இதைத் தீர்த்துக் கொள்ள உதவ வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

*பிற்பகல் 12-45*

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முல்லைப்பெரியார் அணை திட்டத்தைப் பொறுத்தவரையிலே 152 அடி உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை, தமிழ்நாட்டின் நிலையிலிருந்து நியாயம் என்றாலும்கூட, இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதாலும், கேரள அரசு மௌனமாக இருக்கிறது என்பது மட்டுமே சரியான பதிலாக இருக்க முடியாது. ஏனென்றால், கேரள அரசு மறுப்பதற்கு, இடுக்கி அணையிலே தண்ணீர் குறைந்துவிட்டால் எங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது என்ற பல்வேறு விஷயங்களைச் சொல்கிறார்கள். நான் மீண்டும் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அவர்கள் பேச வரவில்லை என்றாலும், நாம் தொடர்ந்து முயன்று பேசி அதில் சுமுகமான, இரண்டு மாநில மக்களின் நலன்கள் பாதிக்கப்படாத அளவில், ஒரு சுமுகமான நிலையை அடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு படி மேலே போய் சொல்கிறேன். முல்லைப்பெரியார் அணைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 152 அடி தண்ணீரை நிரப்புவது நம்முடைய உரிமை. ஒப்பந்தத்திலே அந்த ஷரத்துக்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்த ஷரத்துக்களின் ஆரம்பமே, 152 அடி தண்ணீர் வரையில் நிரப்பிக்கொள்வதற்கு, இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது என்றுதான் இருக்கிறது. இடையிலே அவர்கள், பெரியார் அணை பலவீனப்பட்டுப் போய்விட்டது என்று சொன்ன காரணத்தால், திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திரு. தாமஸ் அவர்கள் 'Law Commission'-ல் இருந்தபோது, கேரள அமைச்சர் பேசுகிறபோது, மத்தியஸ்தமாக-கீழே இருப்பவர்கள் பயப்படுகிறார்கள், பத்திரிகைகள் எழுதுகின்றன, எனவே-மூன்று கட்டமாக அணையைப் பலப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். Emergency measure, Medium measure and Long



Term measure என்று மூன்று கட்டமாக செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த ஷரத்தில் முக்கியத்துவம் என்னவென்றால்,Emergency measure, முடிந்த உடனே 136 அடியிலிருந்து 145 அடிக்குத் தண்ணீரை உயர்த்திக் கொள்ளலாம் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் இப்போது Emergency measure-ம் முடிந்துவிட்டது; Medium Measure-ம் முடிந்துவிட்டது; Longterm Measure-ம் முடிந்துவிட்டது. ஆனால் இதற்குப் பிறகும்கூட, கேரள அரசு அனுமதிக்க மாட்டேன் என்று சொல்வது விவேகமாகாது. அது அடம்பிடிக்கின்ற செயல். எனவே தமிழக அரசு, கேரளா அண்டை மாநிலமாக இருக்கின்ற காரணத்தால், சுமுகமாகப் பேசி பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று விரும்புகிறது. இல்லாவிட்டால் சட்டப்படி இந்தப் பிரச்சினையை எப்படி அணுகுவது என்பது குறித்து சிந்தித்து உரிமையை நிலைநாட்டும். இந்த அரசு எந்த விதத்திலும் சளைத்து நிற்காது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளம் சம்பந்தமாக ஏற்கெனவே கூறியிருக்கின்றேன். மூடியுள்ள ஆலைகளைத் திறப்பதற்கு-குறிப்பாக நீண்டகாலமாக மூடியுள்ள பின்னி, ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனிகள்-டன்லப் தொழிற்சாலையும் மூடப்படுகின்ற சூழ்நிலை வந்திருக்கிறது - உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரிய நெருக்கடியை சந்தித்துக்கொண்டிருக்கின்றன. கைத்தறி லுங்கிகள் பிரிவானாலும் சரி, பட்டுப் புடவைகள் பிரிவானாலும் சரி, செயல்படாத சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தள்ளுபடிகூடக் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சி மன்றங்களைப் பற்றி சொல்லியாக வேண்டிய கட்டாயமான சூழ்நிலை இருக்கிறது. 'அண்ணா மறுமலர்ச்சி' என்ற ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே என்னுடைய தொகுதியிலுள்ள தூத்தூரில் உள்ள கிராமப் பகுதிக்கு 1¼ கோடி ரூபாய் என்று முதல் கட்டமாக சொல்லி, அடுத்து 90 இலட்ச ரூபாய் என்று சொல்லப்பட்டு, திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட வேண்டுமென்பது சம்பந்தமாக அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தாலோசிப்பதில்லை.

இதுவரையில்—நான் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு நான்கு நாட்களுக்கு முன்னதாகக்கூட அந்தப் பகுதியில் சென்று பார்க்கிறபோது—அந்தக் கிராமத்தில் எந்தப் பணியும் ஆரம்பிக்கப்படவில்லை. முதலில் நான் வைத்த கோரிக்கை குடி தண்ணீர்; இரண்டாவது மருத்துவமனை சம்பந்தமானது: மூன்றாவது அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஒரு பாலம். இவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளாமல் நூற்றுக்கணக்கான வீடுகளைக் கட்டுவதைத்தான் முதல் வேலையாக எடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறேன். இருப்பினும், இந்த வேலைகூட ஆரம்பிக்கப்படவில்லை. பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன.

அதுபோல, சாலைகளும், பாலங்களும், ஏற்கெனவே பல்வேறு உறுப்பினர்கள் இது பற்றி கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் காலதாமதம் ஆகின்றது. குழித்துறை ஆற்றுப்பாலம் சம்பந்தமாக 10 ஆண்டுகளுக்கு முன்னால் திட்டம் தீட்டப்பட்டது. அப்போது அந்தத் திட்டத்தின் மதிப்பீடு 5 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். இப்போது அதிகாரிகள் அதனுடைய மதிப்பீடு 10 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, மத்திய அரசினுடைய அனுமதியும் பெற வேண்டும் என்கிறார்கள். அப்படி ஒரு நிலை இருக்கிறது. எனவே அந்தப் பாலம் கட்ட துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே அணைகளைப் பொறுத்தவரையில், மழைக் காலத்திலே வரக்கூடிய தண்ணீரைத் தேக்குகின்ற அவசியத்தை 1996-லும், 1997-லும் இந்த மன்றத்திலே முன் வைத்திருக்கிறேன். குறிப்பாக மாம்பழத்துறை ஆறு, அதற்கு அடுத்து, விளவங்கோடு தாலுக்காவில் இருக்கிற ஒரு சின்ன அணை பல்லிக்கூட்டம். கோடிக்கணக்கான பணம் செலவிடவேண்டியதில்லை. செலவிடுவதுகூட அல்ல. சிறிய அணை. பெருவாரியான விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்ற அடிப்படையில் காரியங்களைச் செய்வதற்கு முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெய்யாறு இடதுகரை கால்வாயிலிருந்து கேரளா தரும் தண்ணீரை நாம் சரிவரப் பயன்படுத்தவில்லை. அதிலே leakage தான் அதிகம். அதை பராமரிப்பதிலே 12 வருஷங்கள் ஆகின்றது. அந்தக் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் தூர்வாரி செப்பனிடப்படாமல் உள்ள ஒரு சூழ்நிலை இருந்து கொண்டே இருக்கின்றது. அதைப் பராமரிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.



பிற்பகல் 12-50

அடுத்து ரப்பர் தொழில். அந்த மாவட்டத்தினுடைய பொருளாதாரம் முற்றிலுமாகச் சிதைந்த நிலையில் இருக்கின்றது. கேரள மாநில அரசாங்கம் அந்த ரப்பர் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு விலையை நிர்ணயித்து இருக்கின்றார்களோ, அந்த அடிப்படையில் இந்த மாநில அரசாங்கம் ரப்பர் போர்டை அணுகி, அவர்கள் மூலமாக ரப்பரை வாங்குவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்து, அதற்கு ஒரு ஆதரவு விலையை நாம் நிர்ணயிக்கின்றபோதுதான், சற்று மாற்றத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது).*

ஒரே ஒரு கருத்தை சொல்லிவிடுகிறேன். அடுத்து இந்த ரப்பர் தொழிற்சாலை சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996-லும் 1997-லும் இந்த மாமன்றத்திலே குமரி மாவட்டத்திற்கு ஒரு ரப்பர் தொழிற்சாலை உண்டு என்று அறிவித்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் தொழிற்சாலை வரும் என்று உறுதியாகச் சொன்னார்கள். ஆனால், அதிலே சம்பந்தப்பட்டவர்கள் பின்வாங்கிச் சென்ற காரணத்தினால் இத்தகைய ஒரு சூழ்நிலை என்றும், இரண்டாவது கட்டத்திலே தெரிவித்தார்கள். மூன்றாவது கட்டத்திலே, உங்கள் மாவட்டத்திற்கு ஒரு ரப்பர் தொழிற்சாலை உண்டு என்று சொன்னார்கள். தொழில் ரீதியாக பின்னணியில் இருக்கின்ற அந்த மாவட்டத்திற்கு ஒரு ரப்பர் தொழிற்சாலை வருமேயானால் ஆயிரம் பேருக்காவது வேலை வாய்ப்பினைத் தர முடியும். அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அங்கு ஒரு ரப்பர் தொழிற்சாலை உருவாவதற்கு மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து அப்படிப்பட்ட ஒரு நிலையினை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 45 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்ற முந்திரி ஆலைத் தொழிலாளர்களுக்கு கடந்த ஆண்டிலே இந்த மாமன்றத்திலே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு E.S.I. திட்டம் அமலாகும் என்று சொன்னார்கள். ஆனால், பணியாளர்கள் நியமனம், மருத்துவர் நியமனம் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு இந்தத் திட்டம் நிறைவேறாமல் உள்ளது. அந்த வகையிலே இந்தக் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு இந்த ஆளுநர் உரையிலே சுருக்கமாக சில விவரங்களைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே என்னுடைய கருத்துக்களை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி-2 என்று ஆரம்பிப்பது. நீங்கள் சொன்னால் திருப்திகரமாக நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி-2 என்று ஆரம்பிக்கலாம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிர்வாக வசதிக்காக....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நண்பர் மணி பேசும்போது பாட்டாளி மக்கள் கட்சி-1 என்று ஆரம்பிக்கவில்லை என்பதை நினைவூட்டுகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நன்றி. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. நான் சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட்டார்கள்.

நல்ல மழை வருவதற்கு முன்னாலே இதமாக குளிர்ந்த காற்று வீசும். அந்த இதமான குளிர்ந்த காற்றைப்போல, இந்த ஆளுநர் உரையானது நாட்டு மக்களுக்குச் சிறப்பானதொரு, இதமானதொரு தன்மையை வழங்கி இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே என்னுடைய உரையின் தொடக்கத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நடந்த தேர்தலிலே ஆளுகின்ற அணி சில பாதிப்புகளை அடைந்து இருக்கலாம். ஆனாலும் இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே;
சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"
(மேசையைத் தட்டும் ஒலி)

என்ற தமிழ்ப்பாடல் வரிகள் உண்டு. அதுபோல தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே அமைந்து இருக்கிற இந்த அரசு என்கிற சங்கு, "கெட்டாலும் மக்களுக்கு நன்மைகளையேதான் தரும்". (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இந்த நேரத்திலே இந்த ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டி இருக்கின்ற பல திட்டங்களை வலியுறுத்திக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை, சிறப்பான திட்டங்களை நாட்டு மக்களுக்கு அளித்து இருக்கிறது இந்த ஆளுநர் உரை. இந்த ஆளுநர் உரையிலே 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு 33-வது பத்தியிலே உத்தரவாதம் தரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் படித்து அறிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல இந்த பாட்டாளி மக்கள் கட்சி, எந்த கிராமப்புற மாணவர்களுக்காகக் குரல் கொடுத்துப் போராடி வந்ததோ, அந்த கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு அனைத்துத் தொழிற் கல்விகளிலும் வழங்கப்படும் என்று இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படி எத்தனையோ திட்டங்கள். நேரமில்லாத காரணத்தாலே நான் இங்கே அனைத்தையும் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல நான் இங்கே குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-55

அதைப்போல இப்போது அமைந்திருக்கிற ஆட்சியானது பாலுக்கு சர்க்கரையாய் இருப்பதை விட கூழுக்கு உப்பாக இருப்பதை விரும்புகின்ற ஆட்சியாகும் என்பதை ஒப்பற்ற தலைவராம் தமிழக முதல்வர் கலைஞர் இங்கே பல வகைகளில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் ஆட்சியை இன்றைக்குச் சர்வசாதாரணமாக கலைத்துவிட வேண்டும், ராஜினாமா செய்துவிடவேண்டும் என்றெல்லாம் எந்த ஒருவர் 356-வது பிரிவை எந்த ஆட்சியின் மீதும் பயன்படுத்திக் கலைக்கக்கூடாது. இதுதான் எங்களுடைய உறுதியான கொள்கை என்று முழக்கமிட்டார்களோ,

அப்படி முழக்கமிட்டவர்களே இன்றைக்குத் தமிழர்களுடைய நலனைக் காக்கின்ற வகையில் அமைந்திருக்கின்ற இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொல்வது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மணி, அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உட்காருங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** நான் கருத்தைத்தான் சொன்னேன். பாட்டாளி மக்கள் கட்சியில் இருக்கிற கொள்கைத் திட்டத்தைச் சொன்னேன். அந்தக் கொள்கைக்கு இன்றைக்கும் அவர்களுக்கு உடன்பாடு இருந்தால், இதை அவர்கள் ஒத்துக்கொள்ளலாம். மறுப்பதாக இருந்தால் மறுக்கலாம். ஆக எப்படிப்பட்ட ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் என்பதை மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனில் அக்கறை இருக்கின்ற காரணத்தால், குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டுப் போராடியவர்கள் உண்டு. போராடிக் கொண்டிருப்பவர்களும் உண்டு. ஆனால் அந்த மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கோரிக்கைகளைச் செவி சாய்ப்பதற்குப் பதிலாக வெங்கடகிருஷ்ணன் கமிஷன் என்ற சாதிவாரிக் கணக்கீட்டு கமிஷனைப் போட்டு அப்போது காலதாமதப்படுத்தப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் 1989-லே ஆட்சிக்கு வந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தாயுள்ளத்தோடு அந்த கமிஷன் அறிக்கை கிடைப்பதற்கு இரண்டு மூன்றாண்டுக் காலம் ஆகும். அதன் பிறகுதான் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற இயலும் என்று அதிகாரிகள் சொன்னதற்குப் பின்னாலும் கூட, அந்த வெங்கடகிருஷ்ணன் கமிஷன் அறிக்கை வருவதைப் பொருட்டாகக் கருதாமல், அந்த கமிஷனையே கலைத்துவிட்டு, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கிய தாயுள்ளம் கொண்ட தலைவர்தான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதனாலே ஆண்டொன்றுக்கு நூற்றுக்கணக்கான மருத்துவர்கள், ஆயிரக்கணக்கான பொறியாளர்கள் இன்றைக்கு மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆட்சியைக் கலைப்பதற்கு நாம் துணை போகலாமா, நல்லவர்கள் துணை போகலாமா என்பதைத்தான் நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேள்வியாக வைக்க விரும்புகிறேன்.



அதேபோல ஆண்ட பரம்பரை நாமெல்லாம்; துணை வேந்தர் பதவி நமக்கு உண்டா என்று நாங்கள் போராடிய காலம் உண்டு. ஆனால் அப்படிப்பட்ட சமுதாயத்திலே, வன்னியர் ஒருவரை, தந்தை பெரியார் பெயராலே அமைந்திருக்கின்ற சேலம் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக முதன் முதலாக நியமித்த பெருமையும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரையே சாரும். ஆனால் இன்றைக்கு ஆண்ட பரம்பரையை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்துவதற்குப் பதிலாக, ஆடுகின்ற பரம்பரையை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்துவோம் என்று சொல்லி சிலர் துடியாகத் துடிப்பதுதான் எங்களுக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது. 356-வது பிரிவைப் பயன்படுத்தக் கூடாது என்பது மட்டும் கொள்கை அல்ல. தன்னுரிமை மாநாடு நடத்தி இந்த இந்தியாவிலே இருக்கிற அனைத்து மாநிலங்களும் தலைநிமிர்ந்து தன்மானத்தோடு உரிமையோடு திகழ வேண்டுமென்று மாநாடு நடத்தியவர்கள் நாங்கள். அதுமட்டுமல்ல, தமிழன் வாழ்ந்தால் தட்டிக் கொடு, தமிழ் இனம் தாழ்ந்தால் முட்டுக்கொடு என்றெல்லாம் முழங்கியவர்கள் நாங்கள். அதையெல்லாம் மறந்துவிட்டு தோல்வியடைந்து விட்டார்கள் தேர்தலிலே, எனவே ராஜினாமா செய்ய வேண்டுமென்றெல்லாம் சொல்வது எந்த வகையில் நியாயம் என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இதே கோரிக்கையை மகாராஷ்டிரா மாநிலத்திலே தோல்வியடைந்தவர்களிடம் போய் வைப்பார்களா? இராஜஸ்தான் மாநிலத்திலே தோல்வி அடைந்தவர்களிடம் போய் வைப்பார்களா? ஆக இப்படி ஆளுக்கு ஒரு நீதி சொல்வதற்கு நீங்கள் என்ன மனுவாதியாக மறு பிறவி எடுத்து வந்திருக்கிறீர்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

அதேபோல், மதத்தால் மக்கள் நெறிப்படுத்தப்பட வேண்டியதை மக்கள் எல்லோருமே வரவேற்பார்கள். ஆனால் வெறிப்படுத்த வேண்டியதை யாருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதற்கு முன்னர் பேசிய அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் மதவெறி கூடாது, வெளிநாட்டிலே இருந்து வந்தவர்கள் ஆக்கிரமித்தவர்கள் திணித்த அந்த அடிமை சின்னத்தை அகற்றுவதிலே

தவறு இல்லை என்றெல்லாம் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு காரணமாகச் சுட்டிக்காட்டினார்கள். நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்: வெளிநாட்டிலே இருந்து வந்தவர்கள் என்று கணக்கு எடுத்துப் பார்த்தால் கொஞ்சம் முன்னாடி போய் நீங்கள் பாருங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஆரியர்கள் இந்த நாட்டிற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்து வந்தவர்கள் அல்லவா! அவர்களை வெளியேற்றுங்கள் என்று நான் இன்றைக்குச் சொன்னால், அதை யாராவது ஒப்புக்கொள்வார்களா. அப்படிச் சொல்வதுதான் மனிதாபிமானமாக இருக்குமா? அதை எல்லாம் மறந்துவிட்டு நாம் ஏதோ 'கண்ணாடி வீட்டிலே இருந்து கொண்டு கல் எறியக்கூடாது'.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டை ஆக்கிரமித்தவர்கள் என்றுதான் சொன்னேனே தவிர, வந்தவர்கள் என்று சொல்லவில்லை. வந்தாரை வாழ வைத்திருக்கிறோம். இந்த நாட்டை அடிமைப்படுத்தி, இந்த நாட்டினுடைய தன்மானச் சின்னங்களை அழித்தவர்களைப் பின்பற்றுவது முறையா என்றுதான் சொன்னேனே தவிர அவர்களை அகற்ற வேண்டும் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பவர்களைப் பற்றி பேசியிருக்கிறார்கள். அதுகுறித்து வரலாறு பேசுகிறது. அதை மாற்றிவிட முடியாது. நண்பர் வேலாயுதன் அவர்கள் என்னைக் குறித்து என்ன சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பற்றி அவர் என்ன புரிந்து இருக்கின்றாரோ அதைப்போல அவரைப் பற்றி நான் புரிந்து இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகவே கேட்கிறேன். என்னை வெளியிலிருந்து



வந்தவன் என்று நீங்கள் கூறுகிறீர்களா? அதற்குப் பதில் சொல்லுங்கள். நான் உங்களைப் பற்றிக் கூறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** நிச்சயமாக நான் அப்படிச் சொல்ல மாட்டேன். காரணம் அவர் வழிபாடு மாறி இருக்கின்றார். வழிபாடு மாறுகின்ற உரிமை அவருடைய பாரம்பரியத்தில் மட்டுமல்ல, அனைத்து பாரம்பரியத்திலும் உண்டு. தான் விருப்பப்பட்ட கடவுளை மாற்றிக் கொள்வதற்கும், வணங்குவதற்கும் அனைவருக்கும் உரிமை உண்டு. எனவே வழிபாடு மாறக்கூடிய காரணத்தால் நம்முடைய பண்பாடு, கலாச்சாரம் மாறக்கூடாது என்பதுதான் எங்களுடைய விருப்பம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தீரன் பேசட்டும். (குறுக்கீடு) திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் அவர்களும் சொல்கிறார்கள். கொஞ்ச காலத்திற்கு முன்பு நீங்களும் வெளிநாட்டிலே இருந்து ஒரு கலாச்சாரத்தைக் கொண்டு வந்தீர்களே என்றுதான் அவர்கள் கேட்கிறார்கள். அப்படி மாறிய அந்த கலாச்சாரம் என்று சொன்னால் அந்த மாறிய கலாச்சாரத்தை இந்த நாடு ஏற்றுக்கொள்ளவில்லையா? அந்த மஸ்ஜித்திலே தொழுவதற்கு நான் என்னுடைய உணர்வை அர்ப்பணித்து இருக்கின்றேன். அதிலே தொழக் கூடாது என்று மஸ்ஜித்தை நீங்கள் வைத்தீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தீரன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. வெளிநாட்டிலே இருந்து வந்தவர்கள், அல்லது வந்த மதம் என்று சொன்னார்கள். மார்க்கத்தைத்தான் அவர்கள் இறக்குமதி செய்து கொண்டார்களே தவிர, ஏற்றுக்கொண்டார்களே தவிர, அவர்கள் எல்லோரும் இந்த மண்ணினுடைய மைந்தர்கள் என்பதை நாம் மறந்து விட்டு, எப்போதுமே பேசக்கூடாது. அதிலும்கூட, இன்றைக்குப் பல மதவெறிச் செயல்கள் நடைபெற்று இருக்கின்றன வரலாற்றிலே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், நீங்கள் உட்காருங்கள், திரு. தீரன் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிற சில செய்திகளை, வரலாற்றில் ஒன்றிரண்டை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நாட்டிலே தோன்றிய மதங்கள்தான் சமண, பௌத்த மதங்கள், அந்த சமண, பௌத்த மதங்கள் எந்த அளவிற்கு இந்த ஆதிக்கவாதிகளாலே அநியாயமாக கொடுமைப்படுத்தப்பட்டன என்பதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. நாகப்பட்டினத்திலே இருக்கின்ற புத்த விகாரை இடித்து நாசப்படுத்தியவர்கள் 8,000 சமணர்களை கழுவேற்றிக் கொன்றவர்கள். இவர்கள் எல்லாம் யார் என்று பார்க்கின்றபோது, இன்றைக்கு யார் யார் எல்லாம் மதப்பற்று என்று சொல்லிக் கொண்டு மதவெறியை கிளப்பிக் கொண்டு இருக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களின் சிந்தனையை உடையவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே நாம் உண்மையிலேயே மதவெறியை வெறுக்கிறோம் என்று சொன்னால், மதவெறிச் செயல்களான பாபர் மசூதி இடிப்பது போன்ற செயல்களை எல்லாம் செய்யாமல் தவிர்ப்பது, செய்யாமல் இருப்பது உண்மையிலேயே இந்த நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதாக இருக்கிற காரணத்தினால்தான், நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கோவையிலே நடைபெற்ற சம்பவங்களுக்குக்கூட உண்மையிலேயே நான் வருந்துகிறேன். அப்பாவி மக்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, அதற்காக நாங்கள் பெரிதும் வருந்தினோம். உண்மையிலே இந்த நாட்டு மக்கள் யாரும் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனாலும்கூட காவல் துறையினர் மிகக் கடுமையான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து, - இன்றைக்குக் கொள்கையிலே மாறுபாடுகள் இருக்கலாம், ஆனாலும் ஒரு தேசியத் தலைவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை உணர்வோடு, பாரதி பாடுவான், 'பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே' என்று, சொல்லி, அதைப்போல- ஒரு தேசியத் தலைவருக்கு எந்தவிதமான பாதிப்பும் வராமல், பத்திரமாக, பாதுகாப்பாக, அத்வானி அவர்களைக் காப்பாற்றி அனுப்பியதற்கு, அருமை நண்பர் வேலாயுதன் போன்றவர்கள் இன்றைக்கு இந்த அரசுக்கு நன்றி சொல்லவேண்டும் என்பதை நான் பெருமிதத்தோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால், இன்றைக்குக் காரணங்கள் பலவாக இருக்கலாம். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையிலே தமிழகத்தைப் பொறுத்தளவிலே தேர்தல் நேரமாகப்



பார்த்து, குண்டு வெடிப்பதை நாம் கவனத்திலே கொண்டாக வேண்டும். (குறுக்கீடு)

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அத்வானி அவர்கள் குறித்த நேரத்தில் வந்திருந்தால், நிச்சயமாக அவர் தப்பி இருக்க முடியாது. எனவே, காலதாமதம்தான் அவரைக் காப்பாற்றியது. அப்படி குண்டு வெடிக்காமல் இருந்திருந்தால், கோயம்புத்தூரிலே குண்டு 14 ஆம் தேதி வெடிக்காமல் இருந்திருந்தால் எந்தப் பிரச்சினையும் வந்திருக்காது. ஆனால் குண்டு வெடித்துவிட்டது. காலதாமதம்தான் திரு. அத்வானி அவர்களைக் காப்பாற்றியது. இருந்தாலும், அதற்குப் பிறகு, இப்போது நடந்து கொண்டிருக்கக்கூடிய காவல் துறையினுடைய நடவடிக்கை, முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை, அத்தனையையும், நான் நேற்றுப் பேசும்போது பாராட்டி இருக்கிறேன். ஆனால் இதை முதலிலே செய்திருக்க வேண்டும், என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாம் முதலிலேயே தெரிந்திருக்கும் என்று சொல்ல முடியாது. நேற்றுகூட கவர்னர் உரையின்போது, கறுப்புக் கொடி காட்டப்பட்டது. பதாகை எடுத்துக் காட்டப்பட்டது. இதெல்லாம் எனக்கு முதலிலே தெரியாது. தெரிந்திருந்தால், தடுத்து இருக்கலாம். எப்படி எங்களுக்குத் தெரியாமல் திடீரென்று கறுப்புக் கொடியும், பதாகையும் இந்த மாமன்றத்திற்குள்ளே நுழைந்ததோ. அதைப்போல எங்களுக்குத் தெரியாமலே, கோயம்புத்தூரிலே வெடிகுண்டு நுழைந்துவிட்டது என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

(குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். இன்னும் 7 பேர்கள் பேசவேண்டும். உட்காருங்கள். திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தமிழினத்தை வஞ்சகத்தால் வீழ்த்தி வந்திருக்கிற வரலாறுகளைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். இந்த நிலைமை இராமாயணம் காலத்திலிருந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதிலும் குறிப்பாக, தேர்தல் நேரங்களிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பது, மக்களுடைய மனங்களைப் பாதிப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துவிடுகிறது. ஆகவேதான், இத்தகைய சம்பவங்கள் நிகழாமல் முடிந்த அளவிற்கு தடுப்பது நல்லது. ஆனால் நம்மையும் அறியாமல் நடந்துவிடுகின்ற சூழ்நிலையிலே நடந்துவிட்ட அசம்பாவிதங்களுக்கு, மக்களுடைய நலனிலே அக்கறை உள்ளவர்கள், அதற்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டுமே தவிர, இதை வைத்து அரசியல் ஆதாயம் தேட நினைப்பது, எந்த வகையிலும் நியாயமற்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், வாக்குகளுக்காக தீவிரவாதிகளுக்கு ஆதரவு அளித்ததாக எல்லாம் குற்றம் சாட்டப்பட்டது.

நான் இந்த நேரத்திலே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதே கோவை கோட்டைமேட்டிலே, இருந்த Check Post என்று சொல்லக்கூடிய அந்தச் சோதனைச் சாவடிகளை நீக்கிவிடவேண்டும் என்று சொல்லி, அந்த ஆட்சிக் காலத்திலே போராடி, சிறை சென்றவர் யார் என்பது இந்த நாட்டு மக்களுக்கு மிக நன்றாகத் தெரியும். டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள்தான் அந்த சோதனைச் சாவடியிலே நின்று, அதை எடுக்க வேண்டும் என்று போராடியவர்.

அதுமட்டுமல்ல, தடா கைதிகளை விடுதலை செய்யவேண்டும்; சிறுபான்மையின மக்கள் மீது அது அநியாயமாக பாய்ச்சப்பட்டு இருக்கிறது என்று சொல்லி, சென்னையிலே பேரணி சென்று - போராட்டம் அல்ல - பேரணி சென்ற நேரத்திலே அந்த ஆட்சிக் காலத்திலே தடியடிக்கு ஆளாகி பாதிப்புக்கு உள்ளானவர். அந்த நேரத்திலே வைத்த கோரிக்கைகூட, இந்தச் சிறுபான்மையின மக்களை தடாவிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்றுதான் அன்றைக்கு கோரிக்கை வைக்கப்பட்டது என்பதை நான் இந்த நேரத்தில்



சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றைய நாளாக இருந்தாலும் சரி, இன்றைய நாளாக இருந்தாலும் சரி, என்றுமே சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாவலனாக இருக்கக்கூடியவர், டாக்டர் ராமதாஸ் ஐயா அவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, இன்றைக்கு இதுமாதிரியான, நம்மையும் அறியாமல் நடைபெற்றுவிடுகிற சம்பவங்களை வைத்துக் கொண்டு, ஒரு ஆட்சியைப் பதவியை விட்டுப் போக வேண்டும் என்று சொல்வதோ அல்லது இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்வதோ, ஜனநாயக நெறிமுறைகளுக்கு விரோதமானது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி, கடினப்பட்டு, ஒரு ஆதிக்க வெறி பிடித்த ஊழல் நிறைந்த ஒரு சக்தியிடமிருந்து மீட்டு அமைக்கப்பட்ட ஆட்சி. தேனீக்களாக இருந்து கட்டிய கூடு. அதுவும் சாதாரணத் தேனீக்கள் அல்ல, மலைத் தேனீக்களாக இருந்து கட்டிய கூடு இந்த ஆட்சி. சாதாரண தேனீக் கூட்டைக் கலைத்தாலே எவ்வளவு பெரிய ஆபத்து என்று தெரியும். மலைத் தேனீக் கூட்டைக் கலைத்தால் எவ்வளவு பெரிய விபரீதத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை பொறுப்புள்ளவர்கள் உணர்ந்து கொள்வார்கள். ஆகவே நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது என்னவென்று சொன்னால் ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்கு நம்மால் முடிந்தால் உதவியாக இருக்கலாம், துணையாக இருக்கலாமே தவிர, இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதை வேண்டுகோளாக வைக்கிறேன்.

இத்தகைய சாதி மோதல்கள் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணம், வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொன்னார்கள். அந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையிலே கடந்த 22 மாதங்களிலே 15,000 கோடி ரூபாய்க்கு மேலே தொழில் முதலீட்டை உருவாக்கியிருக்கிற இந்த அரசை நான் பாராட்டுகின்ற நேரத்திலே,

அத்தகைய தொழில் துறைகளிலே நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், தனியார் துறைகளிலேயும், பொதுத் துறைகளிலேயும் அரசினுடைய 69 சதவீத இட ஒதுக்கீட்டை அமல் ஆக்கினால், இந்த வேலையில்லாத் திண்டாட்டமானது குறைவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சமத்துவபுரத்தை உருவாக்கினார்கள். இதிலே ஒவ்வொரு ஒன்றியம்தோறும் ஒரு சமத்துவபுரத்தை உருவாக்கி, அதை வழிபாட்டுத் தலங்களைப் போல மக்கள் சென்று, கண்டுவிட்டு, அங்கு வாழக்கூடிய ஒற்றுமை உணர்வைக் கண்டுகொண்டு, ஏனைய இடங்களிலே ஒன்றுபட்டு வாழ்கின்ற சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல சிலபல சங்கடங்களினாலே நாம் இந்தத் தேர்தலிலே வீழ்ந்தோம் என்பது உண்மை. அதிலே ஒன்றுதான் பேருந்துக் கட்டண உயர்வு. மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால், ஏதோ அவர்கள் பையிலேயிருந்து ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் குறைந்ததைத்தான் அவர்கள் பெரிதாக நினைக்கிறார்களே தவிர, ஆயிரக்கணக்கில் புதிய பேருந்துகள், மிக அழகாக. நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கின்ற, சீர்கேடு அடையாமல் ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள் - இப்படிப்பட்ட வசதிகளை அவர்கள் பெரிதாக நினைப்பதில்லை. ஆகவே அந்த வசதிகளைச் செய்து தருகிற அதே நேரத்திலே, தாய் உள்ளத்தோடு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வாய்ப்பு இருந்தால் இந்தக் கட்டணத்தை சற்று குறைக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அதேபோல் வேளாண்மையை எடுத்துக்கொண்டால் விவசாயிகளுக்கு விலை கிடைப்பது ஒருபக்கம் இருக்கட்டும். சரியாக விலை கிடைப்பதில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்று. விளைச்சல் அதிகமாகப் போய்விட்ட காரணத்தினாலே மட்டுமல்ல. இன்னொன்றையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எனக்குத் தெரிந்த இடங்களைச் சொல்கிறேன். செஞ்சி, திண்டிவனம் போன்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், வேளான்குடி, விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய நெல் மூட்டைகளைக் கொண்டுவந்து



போட்டுவிட்டு, வாரக் கணக்கிலே—10, 12 நாட்கள், ஏன் இரண்டு வாரம்கூட—பணம் பட்டுவாடா ஆகாமல் தவியாய்த் தவித்தார்கள். ஒரு விவசாயி கிராமத்திலேயிருந்து அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அன்றாடம் பணத்திற்காக வந்து போனால் எவ்வளவு செலவாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே தயவுசெய்து அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் பொருட்களைக் கொடுத்தவுடனே வியாபாரிகளிடமிருந்து உடனடியாக அவர்களுக்கு பணம் பட்டுவாடா ஆவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் கொள்முதல் செய்யப்பட்ட நெல் எல்லாம் இந்தக் கோடை மழையிலே பாதிக்கப்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, அவற்றைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

6 அம்சக் கோரிக்கையை நிறைவேற்றினால்தான் ஆதரவுக் கடிதம் தருவோம் என்று எல்லாம் சொன்னார்கள். 69 சதவிகித இட ஒதுக்கீடு, காவிரி நீர்ப் பிரச்சினை, தமிழ் மத்தியில் ஆட்சி மொழியாக வேண்டும், கச்சத் தீவு பிரச்சினை தீரவேண்டும், பெரியார் நீர்த்தேக்க அணை உயர்த்தப்பட வேண்டும், மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு கிடைக்கவேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னவர்களை நான் கேட்பது, தேசியக் கொள்கைத் திட்டத்திலே இவற்றுக்கு எல்லாம் உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறதா?

ஒன்றே ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு கல்வியிலே மட்டும் மாநிலங்களிலே உள்ள தற்போதைய இட ஒதுக்கீட்டினுடைய அளவைப் பாதுகாக்க, சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்துவோம் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். கல்வியிலே மட்டும்தான் பாதுகாப்பு தரப்படும் என்பதுதான் இன்றைக்கு தேசியக் கொள்கைத் திட்டத்திலே கண்டிருக்கிற வாசகம். நான் இந்த நேரத்திலே என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தமிழக அரசானது கல்வியிலேயும், வேலைவாய்ப்பிலேயும், ஏன் பதவி உயர்விலேயும்கூட,

இட ஒதுக்கீட்டை அமலாக்கிக் கொண்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறை, பதிவுத் துறை, வணிக வரித் துறை, வருவாய்த் துறைகளிலே, இன்றைக்கு இந்த இட ஒதுக்கீடானது தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தேசிய கொள்கைத் திட்டத்திலே உத்தரவாதம் இல்லாமல் வெறும் சட்டப் பாதுகாப்பு கல்விக்கு மட்டுமே வழங்கப்படும் என்றுதான் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே 69 சதவிகித இட ஒதுக்கீட்டை இவர்களை வைத்து நிறைவேற்றுவேன். அவர்களை வைத்து நிறைவேற்றுவேன் என்று சொன்னவர்கள் இப்போது என்ன செய்யப் போகிறார்கள் என்பதைத் தான் நான் கேள்வியாக வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

அதேபோல் இன்னொன்று. தேசிய நதி நீர்க் கொள்கையை வகுத்ததற்குப் பின்னாலேதான், நமக்குக் காவிரி நீர்ப் பிரச்சினை தீரும் போல் இருக்கிறது. இன்றைக்கு தேசிய கொள்கைத் திட்டத்திலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 3 எம்.பிக்களை அனுப்பிய கர்நாடகத்தினுடைய தலைவர் தன்னுடைய கருத்தைச் சாதித்திருக்கிறார். தமிழகத்தினுடைய கருத்து இடைக்காலத் தீர்ப்பு அமலாக்கப்படவேண்டும், அந்த முழு தீர்ப்பு உடனடியாகக் கிடைத்திடல் வேண்டும் என்பதற்காகத்தான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சி எடுத்து திரு. வி.பி. சிங் அவர்கள் நடுவர் மன்றத்தைப் போட்டு, அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டார்கள். இன்றைக்கு மூன்று எம்.பி.க்களை வைத்திருக்கின்ற கர்நாடகத்தினுடைய தலைவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஆனால், 30 எம்.பி.க்களை வெற்றிப்பெறச் செய்து அங்கே அனுப்பிய தலைவர்கள் தமிழகத்தினுடைய நலனை இன்றைக்கு தேசியக் கொள்கை திட்டத்திலே கோட்டை விட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஒரு குற்றச்சாட்டாகவே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், இதிலே விழிப்பாக இருந்து கர்நாடக மாநிலமானது தேசிய நதி நீர்க் கொள்கை வகுத்ததற்குப் பின்னாலே, இந்தப் பிரச்சினைத் தீர்க்கப்பட வேண்டுமென்று சொல்கிற அதே கர்நாடக மாநிலத்தினுடைய கொள்கைதான் தேசிய கொள்கைத் திட்டமாக எதிரொலித்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே இரட்டிப்பு விழிப்புணர்வோடு இருந்து தமிழகத்தினுடைய பங்கினை நீங்கள் மீட்டுத் தர ஆவன செய்திடல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதே நேரத்திலே, இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வருடைய மேலானப் பார்வைக்கு, தமிழ்நாட்டிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களிலே, இட ஒதுக்கீடு பிரச்சினைக்காகப் போராடிய அந்தக் குடும்பங்கள் வறுமையிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சொன்ன அந்தச் சமூக நீதி, 20 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறுவதற்காகப் போராடிய மக்கள் வறுமையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்விற்கு வளம் சேர்க்கின்ற வகையிலே என்னுடைய தொகுதியான ஆண்டிமடம் தொகுதியிலே தீவிரவாதிகளுடைய பிரச்சினை அதிகமாக இருக்கிறது. இதற்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு காரணமாக இருப்பதனாலே, அங்கே தொழிற்பேட்டைகள் நிறுவி, அந்தப் பகுதியிலே உள்ள வறுமையையும், வேலையில்லா திண்டாட்டத்தையும் போக்கிட ஆவன செய்திடல் வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல பாட்டுக்கு அருமையான பல்லவியைப் போல் இந்த ஆளுநர் உரையானது சிறப்பாக இருக்கிறது. எனவே, இது உப்பு சப்பில்லாததல்ல. சத்தானது, தமிழக மக்களுக்கு நல்ல முத்தானது, பல நன்மைகளைத் தருகின்ற வித்தானது இந்த ஆளுநர் உரை எனப் பாராட்டி வரவேற்று அமைகின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, பாயின்ட் ஆஃப் ஆர்டரா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மத்திய அரசாங்கம் தன்னுடைய தேசிய கொள்கைத் திட்டத்தில் இட ஒதுக்கீடு விஷயத்தில் கல்விக்காக மட்டும் சட்டப் பாதுகாப்பு அளிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தச் சட்டப் பாதுகாப்பு என்பது உச்சநீதிமன்றத்திலே இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கு மேல் போகக் கூடாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கல்விக்கு அவர்கள் அளித்திருக்கிற சட்டப் பாதுகாப்புக் கூட 50 சதவிகிதத்தை தாண்டாது. தமிழகத்திலே நாம் அறிவித்து இருக்கிற 69 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை அதனால் பெற முடியாது. எனவே, அந்த வகையிலே தமிழகத்திலேயிருந்து சென்றிருக்கிற 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதைப் புரிந்து ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறார்களா அல்லது புரியாமல் வந்திருக்கிறார்களா என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி செகதீசன்.

***திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் இந்தச் சட்டப்பேரவைக்குத் தந்த உரையின் மீது நன்றி தெரிவித்தும், வரவேற்றும் பேசுகின்ற வாய்ப்பை பெற்றமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்ற சூளுரையை தமிழக மக்கள் முன்வைத்து மக்களின் நம்பிக்கை மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சி பொறுப்பை ஏற்று, இந்தக் குறுகிய காலத்தில் தமிழக மக்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப, தமிழக மக்களுடைய தேவையை உணர்ந்து, மிகப் பெரியத் திட்டங்களை மக்களுக்குத தேவையான அடிப்படை வசதிகளை அளிக்கின்ற பணிகளை, சென்ற ஆண்டு எவையெவற்றையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம் என்ற புள்ளிவிவரங்களைச் சொல்லுகின்ற உரையாகவும், வர இருக்கின்ற காலங்களில் இந்தத் துறைகளிலே எந்த அளவிற்கு நாங்கள் கவனத்தைச் செலுத்தப் போகின்றோம் என்ற கொள்கை விளக்கத்தை, செய்யப் போவதை சொல்லுகின்ற உரையாகவும் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கின்றது. அந்த வகையில் இந்த உரையை வரவேற்பதோடு மட்டும் அல்லாமல், இந்திய நாட்டினுடைய சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், சட்டமன்றத்தினுடைய பவள விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், தமிழகத்திலேயே இந்தச் சட்டமன்றத்தில் முதன்முதலாக ஒரு பெண் ஆளுநர் அவர்கள் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கங்களை இந்த அவையிலே தந்திருக்கிறார்கள். அதற்காகவும் இந்த உரையை வரவேற்று இரட்டிப்பு மகிழ்ச்சியோடு இங்கே நான் உரையாற்ற விரும்புகிறேன், வரவேற்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-20*

*'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில்*
*உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்*

என்றான் பாரதி. எனவே ஒரு ஜனநாயக நாட்டின் இரண்டு கண்களாகக் கருதப்படுபவை உழவும் தொழிலும் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். எனவே அந்த உழவும் தொழிலும் ஒரு நாட்டில் முன்னேறுவதற்கான திட்டங்களை வகுத்துத் தருவதிலே சென்ற நிதிநிலை அறிக்கையிலேயும் சரி, அறிவித்திருக்கிற இந்த ஆளுநர் உரையிலேயும் சரி இந்த இரண்டு துறைகளுக்கும் மிக மிக



முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. இந்தத் துறைகளினுடைய முன்னேற்றத்திற்காக கடந்த 22 மாத காலத்திலே மிகப் பல திட்டங்களை. அரிய திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்தி இருக்கிறது என்பதை நாம் அத்தனை பேரும் மிக நன்றாக அறிவோம்.

இந்த நாட்டில் இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்ட திட்டங்களை, எடுத்துக் கொள்ளவிருக்கிற திட்டங்களை இந்த ஆளுநர் உரை நமக்குத் தெரிவிக்கின்றது. முதலில் விவசாயத்தை நாம் முன்னேற்ற வேண்டும் என்றால் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்றால் நீர்ப்பாசன வசதி மிக மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்த தமிழக முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு நீராதாரங்களைத் தருகிற அனைத்து வசதிகளையும் மேம்படுத்தித் தந்திருக்கிறார்கள். பொதுப்பணித் துறையின் மூலமாக கடந்த பல ஆண்டுகாலமாகப் பராமரிக்கப்படாமல், தூர் வாரப்படாமல் கிடந்த கண்மாய்கள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், பாசனக் கால்வாய்கள் இவை எல்லாம் தூர் வாரப்பட்டு, பராமரிக்கப்பட்டு உரிய காலத்திலே விவசாயிகளுக்கு போதுமான தண்ணீர் நீர்ப்பாசனத்திற்கு தரப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த ஆண்டு பெய்த நல்ல மழையின் காரணமாக அந்த ஏரிகள், கண்மாய்கள் எல்லாம் தூர் வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்டு கரைகள் உயர்த்தப்பட்டதன் காரணமாக 20 ஆண்டுக் காலம் நிரம்பாத ஏரிகள் எல்லாம் இன்றைக்கு தமிழகத்திலே நிரம்பி அது விவசாயிகளுக்கு மிகப் பெரிய பயனைத் தந்ததினுடைய விளைவாகத்தான் இன்றைக்குத் தமிழகத்திலே உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது.

எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தஞ்சை மாவட்டத்திலே மட்டுமல்லாமல் காவிரிப் பாசன பகுதியிலே மட்டுமல்லாமல் காவிரி பாசன பகுதிக்கு அப்பாற்பட்ட மாவட்டங்களிலேயும் துவக்கி அதன்மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் நெல்லுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கவில்லை என்ற ஏக்கத்தைப் போக்குகிற வகையில் மார்க்கெட் விலையைவிட 200 லிருந்து 300 ரூபாய் அதிகமாக அரசாங்கம் விலை நிர்ணயம் செய்து விவசாயப் பெருமக்களுக்கு இன்றைக்கு மிகப் பெரிய பயனைத் தந்திருக்கிறார்கள். இன்னும் வரும் ஆண்டுகளில்கூட இந்த ஏரிகள், கண்மாய்கள், குளங்கள், குட்டைகள் இன்னும் மீதம்

இருக்கிற பகுதிகள் எல்லாம் தூர் வாரப்பட்டு மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்படும் என்று இந்த ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற கண்மாய்கள், குளங்கள், குட்டைகள் இவற்றைத் தூர் வாரிப் பராமரிப்பதோடு மட்டுமல்லாமல் இன்னும் புதிதாக குளம் குட்டைகளைத் தமிழகத்திலே உருவாக்க வேண்டிய கட்டாயத்திற்கு இன்றைக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். தொடர்ந்து இந்த நாடு ஒரு விவசாய நாடாக இருக்கின்ற காரணத்தினால் விவசாயப் பெருமக்கள் கிணறுகளை.....

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் குமாரதாஸ் அவர்கள் பேசிய பேச்சில் சில பகுதிகள் அவைக் குறிப்பிலே இடம் பெறாமல் இருந்தால் நல்லது என்பதைப்பற்றி நானும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்கூடக் கலந்து பேசியிருக்கிறோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே என் சார்பிலும், எதிர்க்கட்சித் தலைவர் சார்பிலும் தங்களிடத்திலே நான் சுட்டிக்காட்டியுள்ள அந்தப் பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசிய நேரத்தில் நான் இங்கே இருக்கையில் இல்லையென்றாலும் அவர் பேச்சின் நகலைப் பார்த்து அதிலே சில பகுதிகளை நீக்குவதுதான் முறை என்ற கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். குறிப்பாக ** என்று சொல்லி ** என்று முடிக்கின்ற வரை உள்ள பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுகின்றேன். அதைப்போலவே. ** என்று சொன்ன பகுதியையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகின்றேன். பொதுவாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன். தமிழக சட்டமன்றத்திற்கு ஒரு மரபு உண்டு. ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் வாதங்கள் தரமாக இருக்கும். அதிலே மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் போன்றவர்கள் முதன் முதலாக சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல, பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்படிக் கடுமையான வார்த்தைகளைச் சொல்லி கருத்துக்கு ஆதரவு தேடுவது தேவையற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆகவே, நல்ல மரபின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கேற்பவும், அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டதன் வகையிலும் நான் அந்தப் பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். மாலைப் பத்திரிகைகளின் சார்பாக இங்கே இருப்பவர்களின் கவனத்திற்குத் தெரிவிக்கிறேன். இங்கே நான் நீக்கிய பகுதிகள் பத்திரிகைகளில் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவர்களுடைய கடமை.

பிற்பகல் 1.25

அதைப்போலவே இன்னும் ஒரு பகுதியையும் நீக்க உத்தரவிடுகிறேன். **என்று முடியும் வரை உள்ள பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம். சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே. மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களைப் பற்றி திரு. சுப்பிரமணியசுவாமி அவர்கள் கூறியதாக ஒரு வார்த்தையைக் கூறியிருக்கிறார்கள். அதையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் கூறும் அந்தக் கருத்தைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டு அதற்கான விளக்கத்தை திரு. சுந்தரம் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதுபற்றிய விமர்சனமும் வந்திருக்கிறது, விளக்கமும் வந்திருக்கிறது. எனவே, இரண்டும் இடம் பெறலாம் என்று அப்போதே சொல்லப்பட்டு இந்த அவையில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அது எடுக்கப்படத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே கூட விளக்கம் தந்து அது அவைக்குறிப்பில் இருக்கின்ற காரணத்தால் இருக்கலாம் என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருந்தாலும் இப்படிப்பட்ட கருத்துக்களை முடிந்த வரையில் பேசுகின்ற உறுப்பினர்கள் தவிர்ப்பது என்கின்ற அந்த மரபு இந்த அவைக்கு ஒரு மரியாதையாக இருக்கும் என்ற கருத்தை இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் சொன்னதை நீக்கியிருக்கிறீர்கள். அதுபோல திரு. சுந்தரம் அவர்கள் சுட்டிக்காட்டிச் சொன்னதையும் சேர்த்து நீங்கள் நீக்கிவிடுங்கள். தாங்கள்கூட மத்திய அமைச்சராக வரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டதைப் போல, திரு. தாமரைக்கனி கோரிக்கையை ஏற்று அதையும் நீக்கிவிடுகிறேன். திருமதி சுப்புலட்சுமி செகதீசன், பேசுங்கள்.

***திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீரைத் தேக்கி வைக்க வேண்டிய கட்டாயம் இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. காலையில் ஒரு வினாவிற்கு விடையளித்த நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நிலத்தடி நீர் சில மாவட்டங்களில் 80 சதவீதத்திற்கு மேல் பயன்படுத்தப்பட்டு விட்டது என்ற ஒரு குறிப்பை இங்கே சுட்டிக் காட்டினார்கள். ஆகவே, இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலத்தடி நீரினுடைய அளவு நாளுக்கு நாள், நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போவதைப் பார்த்தால் நீர் ஆதாரங்கள் தமிழகத்திலே அறவே வற்றிப் போய்விடுமோ என்ற ஒரு அச்சம் இன்றைக்கு நம்மிடையே ஏற்பட்டிருக்கிறது. எனவே எதிர் காலத்திலே அப்படிப்பட்ட ஆபத்துக்களை தவிர்க்கும் வகையில்—கடந்த காலத்திலே சரித்திரத்திலே நாம் படித்து இருக்கிறோம். அந்த காலத்திலே மன்னர்கள், பேரரசர்கள் எல்லாம் சாலை ஓரங்களில் மரங்களை நட்டார்கள், ஏரி குளங்களை வெட்டினார்கள். இதைத்தான் நாட்டு மக்களுக்கு செய்யும் மிகப்பெரிய சேவையாக கருதினார்கள் என்று. இடையிலே அந்தப் பணிகளையெல்லாம் நாம் மறந்ததன் காரணமாக அதுவும் அவர்களெல்லாம் நட்டு வைத்த மரங்கள் கடந்த காலங்களில் முழுமையாக வெட்டப்பட்டு இந்த நாடே தரைமட்டமாக ஆக்கப்பட்டதன் காரணமாக பருவ காலங்களில் பொழிய வேண்டிய மழை பாதிக்கப்பட்டு ஏரி, குளங்கள் வெட்டப் பட்டும், வெட்டப்



பட்ட ஏரி, குளங்களின் பராமரிப்பு கிடப்பில் போடப்பட்டதன் காரணமாக மழை நீர் வீணாகக் கடலில் கலந்து நிலத்தடி நீர் ஆண்டுக்காண்டு குறைகின்ற மிகப் பெரிய ஆபத்தை இன்றைக்கு நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆபத்தை உணர்ந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 4 ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய பிறந்த நாளில் பல்வேறு பணிகளை, சமூகப் பணிகளை ஏழை எளிய மக்களுக்கு செய்கின்ற பல்வேறு பணிகளோடு இந்த நாட்டில் தன்னுடைய பிறந்த நாளை முன்னிட்டு மரக் கன்றுகள் எல்லாம் நடப்பட வேண்டும், வன வளம் பெருகவேண்டுமென்று எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் உத்தரவிட்டார்கள். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்று நாட்டினுடைய முதலமைச்சராக பொறுப்பு ஏற்று இருக்கின்ற இந்த நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும், மரக் கன்றுகள் நடப்பட வேண்டும் என்பதற்கான முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட சில ஒன்றியங்களைத் தேர்ந்தெடுத்து அந்த ஒன்றியங்களில் மரக் கன்றுகள் நடப்படுகின்ற பணிகளை வேளாண்மைத் துறை மேற்கொண்டு மிகச் சிறப்பாக அந்தப் பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

**திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையைப் பெறுவதற்கு மரங்களையும், அந்த மரங்களின் மூலமாக மழையைப் பெற்று, அந்த மழை நீர் வீணாகாமல், கடலிலே சென்று வீணாகக் கலக்காமல் இருக்கின்ற வகையில், அந்த மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய வகையிலே புதிய புதிய ஏரிகள், குளங்கள் கட்டப்பட வேண்டியது அவசியம் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயப் பெருமக்களை இந்த அரசு மறந்து விட்டதைப்போல, இந்த ஆட்சியிலே விவசாயப் பெருமக்கள் மிகுந்த வேதனை அடைகிறார்கள் என்பதைப்போல சில கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. ஆனால் இந்த அரசு விவசாயப் பெருமக்களுக்குச் செய்திருக்கிற நன்மைகள் இன்றைக்கு மட்டுமல்ல, கடந்த முறை

ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த நேரத்தில், எந்த மாநிலத்திலும், எந்த முதலமைச்சரும் அறிவிக்காத திட்டம், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரத் திட்டம். அந்தத் திட்டம் மட்டும் அன்றைக்கு தமிழகத்திலே அறிவிக்கப்படாமல் இருந்தால் நிறைய விவசாயிகள் விவசாயத் தொழிலை மறந்து வேறு தொழிலுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை, ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கும். ஆக, விவசாயப் பெருங்குடி மக்களினுடைய உணர்வைப் புரிந்து கொண்டு, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துக் கொண்டு எந்தெந்த காலத்திலே என்னென்ன திட்டங்களை அவர்களுக்கு அறிவிப்பது என்பதிலே மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு செயல்படுகிற முதல்வர் அவர்களின் ஆட்சியில் நிச்சயமாக விவசாயிகளுக்கு எந்தக் குறையும், எந்தத் தீங்கும் நேராது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, விவசாயத்திற்கு அடுத்தபடியாக, இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்தவும், படித்த இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் நமக்குப் பெரிதும் பயன்படக்கூடியது தொழில் துறை. கடந்த ஆட்சியிலே இந்த தொழில் துறை எந்த நிலைக்கு தள்ளப்பட்டது என்பதை மாமன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவோம். இந்த நாட்டிலே தொழில் தொடங்க வேண்டுமென்று வந்த தனியார் தொழில் அதிபர்கள், வெளிநாட்டிலிருந்து வந்த பல்வேறு தொழில் முதலாளிகளுக்கு எலலாம் கடந்த ஆட்சியில் இந்த நாட்டிலே என்ன வரவேற்பு கிடைத்தது என்பது நமக்கு தெரியும். எத்தனை கோடி ரூபாய் முதலீடு போடுகிறீர்கள், அதிலே எத்தனை சதவீதம் எங்களுக்குக் கமிஷனாகத் தருகிறீர்கள் என்று பேரம் பேசியதனுடைய விளைவாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலதிபர்கள், வெளி மாநிலத்தைச் சார்ந்த தொழிலதிபர்கள், பலவேறு வெளிநாடுகளிலிருந்து வந்த தொழிலதிபர்கள்கூட இந்த டிமாண்டை ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் தமிழகத்திலே தொழில் தொடங்குகிற அந்த உணர்வைக் கைவிட்டு விட்டு வேறு மாநிலங்களிலே போய் தொழில் தொடங்கிய வரலாற்றைத் தான் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட இந்தக் குறுகிய காலத்தில், மத்தியிலே நம்முடைய தொழிலமைச்சர் அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் மத்திய தொழிலமைச்சராக இருந்த காரணத்தினால் பல்வேறு வெளிநாட்டு முதலீடுகளைத் தமிழகத்திற்குக் கொண்டு வரக்கூடிய மிகப்பெரிய வாய்ப்பை நாம் பெற்றோம்.



அதைப்போல, தமிழகத்திலே இருக்கக் கூடிய தொழிலதிபர்களும், வெளிமாநிலத்தைச் சார்ந்தவர்களும் ஆர்வமாக முன்வந்து இங்கே தொழில்களைத் தொடங்குவதற்கான வாய்ப்பினை பெற்றதன் காரணமாக மிகக் குறுகிய காலத்திலே, ஏறத்தாழ 15 கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீட்டைத் தமிழகத்திலே தொழில் துறையின் சார்பிலே நாம் பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் எதிர்காலத்திலே (குறுக்கீடு) 15,000 கோடி அளவிற்கு இங்கே தொழில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் உண்மையிலேயே இன்னும் வரவிருக்கிற ஆண்டுகளில் தமிழகத்திலே தொழில் வளம் எந்த அளவிற்குப் பெருகவிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து பெருமிதத்தோடு இந்த மன்றத்திலே நாம் அமர்ந்திருக்கிறோம்.

இதைப்போல, தொழிலும் விவசாயமும் நல்ல முறையிலே செயல்பட வேண்டுமென்றால் அதற்கு மின் உற்பத்தி மிகமிக அவசியம் என்பதை இந்த அரசு கருத்திலே கொண்டிருக்கிறது. ஒரு அரசே இந்த மின் உற்பத்தியை முழுவதுமாக இந்த நாட்டிற்கு உற்பத்தி செய்து தர முடியாது என்பதை உணர்ந்ததன் காரணமாகத்தான் தனியார் துறையினால் இயக்கப்படவிருக்கும் முதலாவது மின் திட்டம் வரும் ஆண்டில் 196 மெகாவாட் திறனுடன் சென்னையிலே தொடங்கப்படவிருக்கிறது என்ற அறிவிப்பை இந்த ஆளுநர் உரையிலே இந்த அரசு தந்திருக்கிறது.

இதைப்போல தொடர்ந்து தனியார் துறையை ஊக்குவிப்பதன் மூலமாகவும், மத்திய அரசினுடைய உதவியோடு தமிழகத்திலே தொடர்ந்து அனல் மின் நிலையங்களை உருவாக்குவதன் மூலமாகவும் தமிழகத்தினுடைய தொழில் தேவைக்கும், விவசாய உற்பத்திக்கும், பொதுமக்களுடைய உபயோகத்திற்கும் தேவையான மின் உற்பத்தியைப் பெருக்க முடியுமென்ற நம்பிக்கையை இந்த ஆளுநர் உரை நமக்குத் தந்திருக்கிறது.

மின்வெட்டு இல்லாத மாநிலங்களே இல்லை. எனவே, இந்தக் கோடைக் காலத்தில் தமிழகத்திலே மின் வெட்டு என்பது நாம் எல்லோரும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். ஆனால், ஏற்கெனவே, இந்த மின்சார வெட்டைப் பற்றியும், அதைத் தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறன என்பதையும் நம்முடைய மின்துறை அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திற்கு அறிவித்திருக்கிறார்கள்.

[திருமதி சுப்புலட்சுமி செகதீசன்] [1998 மார்ச் 20

ஒன்றே ஒன்றை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்கள் தேர்வுக்கு படிக்கின்ற நேரமாக இருக்கின்ற காரணத்தினால், தொழிற்சாலைகளுக்கும் மற்ற உபயோகங்களுக்கும் மின்வெட்டை அமல்படுத்தினாலும்கூட, வீட்டு உபயோகத்திற்கு இரவு நேரங்களிலே அந்தக் குழந்தைகள் படிப்பதற்கேற்ப குறைவின்றி, வெட்டின்றி தொடர்ந்து மின்சாரத்தை விநியோகிப்பதற்கான வாய்ப்பினை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று அந்த உள்ளாட்சி மன்றங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்றுக்கொண்டு நடைபெறுகின்ற நிருவாகத்தைப் பார்க்கின்றபோது மிகப்பெரிய அதிர்ச்சிதான் காத்துக்கொண்டிருந்தது. காரணம், எந்த ஊராட்சி மன்றத்திலேயும் போதுமான நிதியாதாரங்கள் கிடையாது. அதிலேயும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மிகப் பெரிய நிதிச் சுமையை பேரூராட்சி மன்றங்கள் சுமந்து கொண்டிருந்தன. மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் இலட்சக் கணக்கில் பாக்கியிருந்தது. குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் பல இலட்சக்கணக்கில் பாக்கியிருந்தது. இப்படி மிகப் பெரிய கடன் சுமையோடு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் தொடர்ந்து மக்களுடைய தேவையினை நாம் எப்படி நிறைவு செய்யப் போகிறோம், எப்படி அடிப்படைத் தேவைகளுக்கு, பல்வேறு திட்டங்களுக்கு நிதியை ஒதுக்கப் போகிறோம் என்று பரிதவித்துக் கொண்டிருந்த நேரத்தில், தமிழக அரசு அவற்றிற்கெல்லாம் போதுமான நிதியாதாரத்தைத் தந்த பிறகு எந்த குக்கிராமத்தை எடுத்துக்கொண்டாலும், அங்கிங்கெனாதபடி எல்லாப் பகுதிகளிலேயும் ஏதாவது ஒரு பணி இன்றைக்கு தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஊராட்சி சாலைகளாக இருந்தாலும், ஒன்றியச் சாலைகளாக இருந்தாலும், மாநிலச் சாலைகளாக இருந்தாலும், தேசிய நெடுஞ்சாலைகளாக இருந்தாலும், அந்தச் சாலைகளெல்லாம் இன்றைக்குப் பராமரிக்கப்பட்டு, விஸ்தரிக்கப்பட்டு செப்பனிடுகின்ற பணி தொடர்ந்து தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதைப்போல 10 லிட்டர் தண்ணீர் கூட ஒரு குடிமகனுக்குக் கிடைக்காத கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தக் கிராமங்களிலே



1998 மார்ச் 20 ] [திருமதி சுப்புலட்சுமி செகதீசன்]

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குடிநீர் வழங்குகின்ற பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில், நொய்யல் ஆறு, திருப்பூர் சாயச் சாலைகளின் கழிவுகளின் காரணமாக மாசுபடுத்தப்பட்டு, அந்த நொய்யல் ஆற்றுத் தண்ணீர் பாசனத்திற்கோ, குடிதண்ணீருக்கோ பயன்படாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நொய்யல் ஆற்றின் கரையின் பகுதிகளிலே அமைந்திருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரங்கள் முழுமையாகக் கெட்டுப்போய், அந்தத் தண்ணீர் குடிப்பதற்கு பயனற்ற தண்ணீராக மாறிவிட்ட காரணத்தினால் அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்தி, அந்த மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்னசத்திரம் ஆயிரம் வைப்பதைக் காட்டிலும் ஏழைக்கு எழுத்தறிவித்தல்தான் சிறந்தப் பணி என்பதை நாம் அறிவோம். அதைப்போல, கிராமப் பகுதி மாணவர்கள் தொழிற்கல்வி மற்றும் மருத்துவக் கல்லூரிகளிலே இடம் பெறுவதற்கு வாய்ப்புக் குறைவு என்பதை உணர்ந்து கிராமப்புற மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலே 15 சதவீத இட ஒதுக்கீடு அவர்களுக்கு ஒதுக்கித் தந்தது மட்டுமல்லாமல் இந்த ஆண்டு தொடர்ந்து இந்த ஒதுக்கீடு தொழிற்கல்வி அனைத்திற்கும் விரிவுபடுத்தப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதிலே ஒரு சின்ன குறைபாடு இருக்கிறது. இந்த 15 சதவீத இட ஒதுக்கீடு என்பது சிற்றூராட்சிகளிலே அமைந்திருக்கின்ற பள்ளிகளுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று கல்வித் துறையிலே குறிப்பிடுகிறார்கள்.

என்னுடைய மொடக்குறிச்சி தொகுதி முழுக்க முழுக்க கிராமங்கள் மட்டுமே நிறைந்த பகுதி. இதில் நகரமோ வேறு பகுதிகளோ கிடையாது. இப்படிப்பட்ட பகுதியில் அமைந்திருக்கின்ற பள்ளிக்கூடங்கள் பேரூராட்சிகளிலே அமைந்திருக்கின்றன. இட வசதிக்காகவும், போக்குவரத்து வசதிக்காகவும், சிறிய கிராமங்களிலே அமைப்பதற்குப் பதிலாக ஓரளவிற்கு வசதிமிக்க கிராமங்களிலே அந்தப் பள்ளிக் கூடங்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, அப்படிப்பட்ட பேரூராட்சிகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பள்ளிக்கூடங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கு இந்தச் சலுகை இல்லையென்று இன்றைக்கு கல்வித் துறையினர் குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி அந்தப்

பள்ளி அமைந்திருக்கின்ற இடத்தை வைத்து தேர்வு செய்வதற்குப் பதிலாக, அந்த மாணவர்கள் எந்த இடத்திலிருந்து வருகிறார்கள், அவர்கள் வசிக்கின்ற இடம் எப்படிப்பட்ட இடம், அது பிற்படுத்தப்பட்ட பகுதியா, சிற்றூராட்சியா, வசதியில்லாத இடமா என்பதைப் பார்த்து அந்த வாய்ப்பை நீங்கள் தருவீர்களானால் இதைப் பயன்படுத்தி ஏராளமான மாணவர்கள், கிராமப் பகுதி மாணவர்கள் பயன்படக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, பொது விநியோகத் திட்டத்தைப் பற்றி இங்கே எல்லோரும் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, பொது விநியோகத் திட்டம் எந்த அளவிற்குச் சீரமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஒன்றிரண்டு குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், கடந்த ஆட்சியிலே பொது விநியோகத் திட்டத்திலே என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். ஒவ்வொருவரும் கையிலே 500, 600 போலி கார்டுகளை வைத்துக்கொண்டு, அந்தக் கார்டுகள்மூலம் கிடைக்கக் கூடிய அனைத்துப் பொருள்களையும் வெளியே விற்றார்கள். வெளி மாநிலங்களுக்குக் கடத்தினார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகுதான் ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர், உணவு வழங்கல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இலட்சக்கணக்கான, ஆயிரக்கணக்கான போலி கார்டுகளைக் கண்டுபிடித்து, உண்மையான குடும்ப அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு அந்தப் பொருள்களை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். இருந்தாலும், சில இடங்களில் இன்னும் போலி கார்டுகளை கையிலே வைத்துக்கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். எனவே, அதை அறவே ஒழிக்கக்கூடிய வகையிலே இந்த இருவண்ண அட்டைகள் என்பது மிக மிக அவசியம். அதை உரிய காலத்திலே, அறிவித்திருக்கின்ற காலத்திலே வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

இரு வண்ண அட்டைகளைப் பற்றி இங்கே கேலி பேசினார்கள். இந்த மூவண்ண அட்டை இரு வண்ண அட்டையாகி, இந்த இரு வண்ண அட்டை ஒரு வண்ண அட்டையாகிவிடுமோ என்றெல்லாம்



இங்கே கவிதை பாடினார்கள். ஆனால் இந்த இரு வண்ண அட்டை மிக மிக அவசியம் என்பதை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்குக் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களிலே பெரும்பாலானவர்கள் ரேஷன் கடைகளிலே அரிசி வாங்குவதில்லை. அவர்களுக்கு சர்க்கரையும் மண்ணெண்ணெயும் போதும் என்று அரிசி வாங்காமல் சென்றுவிடுகிறார்கள். இப்படி அவர்கள் அரிசி வாங்காமல் சென்றுவிடுவதால், அந்தப் போலி குடும்ப அட்டைகளை வைத்திருக்கிற சில சமூக விரோதக் கும்பல்களுக்கு அது சாதகமாக ஆகிவிடுகிறது. உடனே, இவர்கள் அவர்கள், அரிசி வாங்கியதாக தங்கள் ரிஜிஸ்டரிலே என்ட்ரி போட்டுக்கொள்கிறார்கள். ஒவ்வொரு ரேஷன் கடையிலேயிருந்தும் இரண்டு மூட்டை, மூன்று மூட்டை என்று அவர்கள் இரவு நேரங்களிலே அந்த எஞ்சியுள்ள அரிசியை வசூல் செய்து இன்றைக்கு வெளி மாநிலங்களுக்கு கடத்துகின்ற பணியிலே சில சமுதாய விரோதிகள் ஈடுபட்டிருக்கின்றார்கள். எனவே அந்த இரு வண்ண அட்டை வந்தால், அந்த இளஞ்சிவப்பு அட்டை வைத்திருக்கிறவர்கள் அத்தனைபேருக்கும் அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் கொடுக்கலாம். இந்த மஞ்சள் அட்டை வைத்திருக்கின்றவர்கள், அரிசி தேவையில்லையென்றால் அவர்கள் ரிஜிஸ்டரிலே என்ட்ரி ஆகாது. எனவே, எஞ்சிய அரிசியை யார் பெயரிலோ எடுத்து வெளியே விநியோகம் செய்கிற அந்தப் பணி நிச்சயம் தடுக்கப்படும். அரசு வழங்குகிற அத்தகைய அரிசியும் தேவையான மக்களுக்கு உரிய காலத்திலே போய்ச்சேரும். எனவே, அதற்கு நிச்சயமாக இந்த இரு வண்ண அட்டை அவசியம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிறைவாக, காற்றையும் நீரையும் அசுத்தப்படுத்துகிற மாசுபடுத்துகிற பல்வேறு தொழிற்சாலைகள் மீது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அவற்றையெல்லாம் இன்றைக்கு மூடியிருக்கிறோம். அதன் காரணமாக பல்வேறுபட்ட துறைகளில் இருக்கக்கூடிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, கைத்தறி நெசவாளப் பெருமக்களும், அதைப் போன்று கட்டடப் பணிகளுக்கும் சாலைப் பணிகளுக்கும் பயன்படுகிற ஜல்லி உடைக்கிற குவாரிகளில் இருக்கக் கூடிய தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் இன்றைக்கு அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் சந்தித்து அவர்கள் குறைகளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்கூட அவர்களுக்கு ஒரு நிவாரணமும் கிடைக்கவில்லை. அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால்

எப்படியாவது மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து இந்தக் குறைகளையெல்லாம் எடுத்துச் சொன்னால் நிச்சயமாக இந்தக் குறைகளை அவர்கள் பரிவோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாதிக்கப்பட்ட இப்படிப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசி அவர்களது குறைகளை ஆராய்ந்து, அவர்களுடைய குறைகளை தீர்க்கக்கூடிய வகையிலே நீங்கள் நல்ல அறிவிப்புகளை, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு மனநிறைவான செய்தி, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை 10,200 கோடி ரூபாய். ஆனால் செலவு செய்தது 10,563 கோடி ரூபாய் என்று ஆளுநர் உரையிலே அறிவித்ததோடு மட்டுமல்லாமல் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25,000 கோடி ரூபாய் மத்திய திட்டக் குழு தமிழகத்திற்கு ஒதுக்கி ஒப்புதல் தந்திருக்கிறது என்னும் மகிழ்ச்சிகரமான செய்தியை இன்றைக்குத் தந்திருக்கிறீர்கள். 10,563 கோடி ரூபாயை செலவு செய்த நேரத்திலேயே மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற பணி தமிழகத்திலே வேகமாக, விரைவாக, ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் இன்னும் வரவிருக்கின்ற ஆண்டுகளில் 25,000 கோடி ரூபாய் அதற்காக நமக்குக் கிடைக்கிறது என்ற நிலையை எண்ணிப் பார்க்கிறபோது, நிச்சயமாக எதிர்காலத்திலே கிராமங்களுக்கு நீங்கள் எதிர்பார்க்கிற அளவுக்குப் போதுமான குடிதண்ணீர், சாலை வசதி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகள் நிச்சயமாக முழுமை பெறும் என்கின்ற நம்பிக்கையோடு, இந்த ஆளுநர் உரையை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-3-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்.

36. மதுரை, திருவாளர்கள் பூர்ணிமா, ராயல் உறாய்சரி ஆகியோரால் விற்கப்படும் ஆடைகளுக்கு 1.4.1992 முதல் 11.10.1994 வரையிலான கால அளவில் செலுத்த வேண்டிய விற்பனை வரி, மேல் வரி, தண்டத் தொகை ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 4.8.1997 ஆம் நாளிட்ட 292-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பெற்ற அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

37. சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சியில் உள்ள வணிகர்கள் 1982-83, 1987-88, 1988-89 ஆகிய கால அளவுகளில் விற்கப்பட்ட கம்பி மற்றும் கம்பி தண்டுகள் ஆகியவற்றிற்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரியினைச் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 14.7.1997-ஆம் நாளிட்ட 274-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

38. செயற்கை பசைகளுக்கு வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி, மேல் வரி ஆகியவற்றை 25.7.1977 முதல் 31.12.1982 வரை உள்ள கால அளவில் செலுத்த வேண்டிய வேறுபாட்டினைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 23.7.1997 ஆம் நாளிட்ட 278-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) ஆகிய பிரிவுகளின் கீழ்பேரவைமுன் வைக்கப்பெற்றது].

39. விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள, மரக்காணம் மற்றும் பரங்கிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலக ஜவகர்

[1998 மார்ச் 20

வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பொருள்களுக்கு திருவாளர்கள் ஏரோவில் பில்டிங் சென்டர், ஏரோவில்லி-605 101 அவர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரி மேல் வரி மற்றும் தண்டத் தொகை ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 21.8.1997 -ஆம் நாளிட்ட 359-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

40. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

41. 1996-97-ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை கோட்டம் 2) நான்காவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

42. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்-கோட்டம் 3) லிமிடெட்டின் ஐந்தாம் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

43. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்-கோட்டம் 1) லிமிடெட்டின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

44. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம் 2) லிமிடெட்டின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆஙகிலம்).



1998 மார்ச் 20]

45. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை-கோட்டம் 1) லிமிடெட்டின் இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

46. 1996-97-ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை-கோட்டம் 1) இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).. (தமிழ், ஆங்கிலம்).

47. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை. (1948-ஆம் ஆண்டு மின்சாரம் (விநியோகம்) சட்டத்தின் (மத்திய சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

D
V211,3/1998
N98.39.2.
218448